நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

Rev: BEN HANEGRAAFF

(Holland)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நீங்கள்
யார் என்று உங்களுக்குத்
தெரியுமா !

ஆக்கியோன்

Rev. BEN HANEGRAAFF

தமிழாக்கம் :

Rev. M. RAJENDRAN

GOOD NEWS MISSION

PALAYAMKOTTAI.

புத்தக வெளியீடு:

GOOD NEWS MISSION
14, Railway Feeder Road,
Palayamkottai-627 002

பொருளடக்கம்

		பக்கம்
1.	நீங்கள் யார் என்று அறிந்து கொள்வது மிக முக்கியம்	1
2.	நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள்	8
3.	பரிசுத்த ஆவியின் ஆலயம் நீங்களே!	20
4.	உலகத்தை சுவிசேஷமயமாக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வாய்க்கால் நீங்களே!	37
5.	தன்னுடைய சபையை ஆசீர்வதிக்கும்படியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட வாய்க்கால் நீங்களே!	47
6.	நீங்கள் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறீர்கள்	62
7.	நீங்கள் கிறிஸ்துவுக்குள் பூரணராய் இருக்கிறீர்கள்	73

நீங்கள் யார் என்று அறிந்து கொள்வது மிக முக்கியம்

எகிப்தின் கொடூரமான பார்வோன் இஸ்ரவேலரை அதிகமாக ஒடுக்கினான் என்று யாத்திராகமப் புஸ்தகத்திலே வாசிக்கிறோம். ஆகையினால், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்து பாலும் தேனும் ஓடுகிறதான கானானுக்குள் வழி நடத்த வேண்டும் என்பதே இஸ்ரவேலைக் குறித்ததான தேவ திட்டமாயிருந்தது என்று யாத் 3 : 1-9ல் வாசிக்கிறோம்.

இருந்த போதிலும் தேவ திட்டங்கள் நிறைவேற சில காலம் கொண்டது. காரணம், தேவன் யாரைக் கொண்டு தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பினாரோ அவன் ''தன்னை யார்'' என்று அறிந்து கொள்ளவில்லை. மேலும், ''நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னை பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா'' என்று தேவன் தாம் தெரிந்து கொண்ட மோசேயுடன் பேசினார். எந்த வேளையாயினும் அரசியல் சமயத் தலைவராகவும், தேவனுடைய ஜனங்களை பார்வோனின் வல்லமையிலிருந்து விடுவித்து, இஸ்ரவேலர் தேவனிடத்திலிருந்து கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்திரத்திற்கு அவர்களை வழிநடத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன்தான் இந்த மோசே.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசேயின் தலைமையின் கீழான இஸ்ரவேலின் சேனைக்கு முன்பதாக எந்த ஒரு நாடாகிலும் அல்லது சேனையாகிலும், எத்தனை வல்லமையுடையதாய் இருப்பினும் நிலைநிற்க முடியவில்லை. தேவன் தனக்கு ஒப்புவித்தவைகளைச் செய்யும்படி தேவனிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்ற மோசே, அவைகளைச் செய்யும்படி தன்னை உட்படுத்தவில்லை. மாறாக, பார்வோனிடத்தில் போகவும் ''இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்'' என்ற சந்தேகக் குரல் அவனிடத்தில் தொனித்தது. காரணம் ''தான் யார்'' என்பதை மோசே அறிந்திருக்கவில்லை. ஆம், தன்னைக் குறித்து தனக்குள் எழும்பின சிந்தனைகளின்படி 'தான் யார்' என்பதை நன்கு அறிந்திருந்தான். ஆனால் தேவன் தான் செய்யப்போகிற காரியத்தைக்

குறித்து மோசேயிடம் அறிவித்தபோது, அவன் அதற்கு கொடுத்த பதிலை வாசியுங்கள். (யாத் 4 : 10) "ஆண்டவரே இதற்கு முன்னாவது தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல, நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்" என்று மோசே கூறினான். "நீ போ நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்" என்று தேவன் மோசேயுடன் சொன்ன வார்த்தைகளை அவன் நம்பவில்லை.

இதற்கு மாறாக, "ஆண்டவரே நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்ற சோர்வை உருவாக்குகிற வார்த்தைகளையே கூறினான். (13-ம் வசனம்) 'தான் யார்' என்கிற தான அறிவு மோசேக்குள் இருக்கவில்லை என்பதை நீங்கள் அறியீர்களா? தனக்குள் தன்னைக் குறித்து எழும்பினதான எண்ணங்களை மோசே கூறினதை கீழே வாசியுங்கள். "ஆண்டவரே, நீர் என்னை உமது சேவைக்காக எகிப்திற்கு அனுப்ப சித்தம் கொள்வீரானால் அது நீர் செய்கிற பெரிய தவறாகும். நீர் என்னை எகிப்திற்கு அனுப்புகிறதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். என்னிடத்திலிருக்கிற குறைகள் யாவற்றையும் நீர் திட்டமாய் அறிந்திருக்க வேண்டும். நான் மிகுந்த அச்சமுடையவன். நன்றாக பேசக்கூடிய திறமையுள்ளவனும் அல்ல: நித்தமும் தவறுகளைச் செய்கிறேன்; என்னை அனுப்ப வேண்டாம் ஆண்டவரே. எனக்கு பதிலாக வேறு யாரையாவது நீர் அனுப்புவீரானால் அது மிகுந்த பாராட்டுதற்குரியதாகும்" என்று மோசே கூறினான்.

மோசே மிகவும் பரிதாபத்திற்குரியவனானான். 'அவன் யார்' என்பது அவனுக்கே தெரியவில்லை. அவன் தன்னைக் குறித்து சொன்ன யாவும் உண்மையானவைகளே. அவனிடத்தில் குறைகள் இருந்தது உண்மைதான். ஆனால் தேவன் சொன்ன கட்டளைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற தேவன் தனக்கு தந்தருளின தேவ ஆவியின் வல்லமையினால் முடியும் என்பதை அவன் தெளிவாக உணர்ந்து கொள்ளவில்லை. மோசே தன்னுடைய பெலத்தினால் செல்லுவானாகில் "தான் யார்" என்று நன்கு அறிந்திருந்தான். ஆனால் தேவ பெலத்தினால் செல்வானேயாகில் "தான் யார்" என்பதை இன்னும் அவன் புரிந்து கொள்ளவில்லை.

கடைசியாக, மோசே தேவ சப்தத்திற்கு கீழ்படிந்தான். அதனால் தேவன் தன்னோடு இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டான். தான் திக்குவாயும் மந்த நாவும் உடையவன் என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தபடியினால் தனக்காக மோசே பேசுவான் என்று முதலாவதாக எண்ணினான். ஆனால் தேவ சப்தத்திற்கு கீழ்படிந்ததும் தானே எல்லாவற்றையும் செய்து முடித்தான்.

(யாத் 14 : 13) மோசே, 'தான் யார்' என்பதையும், இஸ்ரவேலரை வழிநடத்தும் தலைவனாக தேவனால் அபிஷேகிக்கப்பட்டவன் என்பதையும் படிப்படியாக அறிந்திருந்தான். (உபா 18 : 15) 'நான் எம்மாத்திரம்' என்று கூறின அதே மோசே, இப்பொழுது 'தான் தேவனுடைய தீர்க்கதரிசி' என்று முழு நிச்சயத்தோடு சான்று பகருகிறான்.

மோசே, 'தான் யார்' என்று அறிந்து கொண்டது எத்தனை முக்கியமானது. மோசே, தேவனுடைய ஊழியத்தையும் தேவன் தனக்கு கொடுத்ததான அபிஷேகத்தையும் நோக்காமல் தன்னையும் தன் குறைகளையும் நோக்குவானாகில் அவனால் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து விடுவிக்க இயலாது. தேவன் மோசேயை மறுபடியுமாக உபயோகிக்கவில்லையென்றால் 'சுதந்திரம்' என்ற ஒன்றை அறிந்திருக்க முடியாது. ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர் எகிப்தின் கொடுமையினால் பரிதாபமாக அழிந்திருப்பார்கள்.

நாம் ஆழ்ந்து சிந்திப்போமானால் பார்வோன், சாத்தானுக்கு அடையாளமாயிருக்கிறான். எகிப்து, நம்மை சுற்றிலும் இருக்கிற உலகத்திற்கு அடையாளம். சாத்தான் சொல்லுகிறவைகளுக்கு உலகத்தின் ஜனங்கள் கீழ்படிகிறார்கள். இங்கே ஜனங்கள், வியாதி கவலை கண்ணீர் போன்றவைகளினால் வேதனையடைகிறார்கள். காரணம், இவைகள் யாவும் சாத்தானின் அந்தகார சக்தியினால் உண்டானவைகளே! ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் 'நம்மை யார்' என்று அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

நீங்கள் யார் என்று அறிந்து கொள்வது மிக முக்கியம் என்பதை வேத ஆதாரத்துடன் விளக்க விரும்புகிறேன். இஸ்ரவேலருக்கு தேவன் வாக்குப்பண்ணின தேசம் எப்படிப்பட்டதென்று அறிந்து கொள்ளும்படியாக மோசே 12 வேவுகாரர்களுக்கு கட்டளை கொடுத்து அனுப்பியிருந்தான் (எண் 13, 14) வேவுகாரர்கள் திரும்பி வரும் போது அந்த தேசத்தின் நல்லகனிகளில் சிலவற்றை கொண்டு வந்தார்கள். அதுமாத்திரமல்ல கானான் மிக நல்ல தேசம்; கனிகள் நிறைந்த தேசம் என்றும் கூறினார்கள்.

ஆனால் நல்ல செய்தியோடு துர்செய்தியும் வந்தது. ஆம், அந்த தேசம் மிகவும் அருமையான தேசம். ஆனால் "அந்த ஜனங்களோடு எதிர்க்க நம்மால் கூடாது. அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்" (எண் 13:31) என்றார்கள். 10 வேவுகாரர்களும் "தாங்கள் யார்" என்பதை அறிந்து கொள்ளவில்லை. இஸ்ரவேல் தேசம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம் என்றும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் அவர்கள் நடுவில் இருக்கிறார் என்றும்– ஒரு தனி மனிதனால் கூட விரோதிகளை

ஜெயிக்க முடியும் என்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். இ ஸ் ர வே ல ர் 10 வேவுகாரர்களுக்கு செவி கொடுத்திருப்பாரகளே யானால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தே ச த் தை ஒருபோதும் சு த ந் த ரி க் க முடியாது. இதற்கு மாறாக தாங்கள் யார் என்பதை நன்றாய் அறிந்து கொண்ட மற்ற இரண்டு வேவுகாரர்களாகிய யோசுவாவும் காலேபும் தங்களுடைய சொந்த பெலத்தின் மேல் சார்ந்திராமல் தே வ னு டை ய பெலத்தின்மேல் சார்ந்திருந்தனர். ''நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம் நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் (30-ம் வசனம்) என்று இரண்டு வேவுகாரர்களும் கூறுகிறார்கள்.

யோசுவாவும் காலேபும் ஜனங்களிடத்தில் சொல்லுகிறதை எண் 14 : 8, 9ல் வாசிக்கிறோம். ''கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால் அந்த தேசத்திலே நம்மைக்கொண்டு போய் பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார். அந்த தேசத்தின் ஜனங் களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரை யாவார்கள். அவர்களை காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை,'' யோசுவாவும்; காலேபும் தாங்கள் யார் என்று நன்றாய் அறிந்திருந்தார்கள். தாங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்ட தேசமாகிய இஸ்ரவேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிந்திருந்தனர் 'தாங்கள் யார்' என்ற அறிவை உடைய யோசுவாவும் காலேபும் அங்கே இராதிருந்தால் இஸ்ரேவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதில்லை, கிறிஸ்தவர்களாகிய நாம் 'நம்மை யார்' என்று அறிந்து கொள்ளாதிருப்போமானால் நம்மில் அநேக வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதில்லை என்பது முற்றிலும் உண்மை.

'நாம் யார்' என்று அறிந்து கொள்வதின முக்கியத்துவத்தை இன்னும் சில உதாரணங்கள் மூலம் விளக்க விரும்புகிறேன். நியா யாதிபதிகள் 6, 7, 8 ம் அதிகாரங்களில் கிதியோனின் வாழ்க்கை சரித்திரத்தை படிக்கிறோம். இஸ்ரவேலர் பாவம் செய்ததினால் தேவன் அவர்களை மீதியானியர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார். அவர்களின் உபத்திரவத்தை தாங்கமாட்டாத இஸ்ரவேலர் தேவனை நோக்கி சப்தமிட்டனர். இவர்களின் சப்தத்தை கேட்ட தே வ ன் இவர்களை சத்துருவின் வல்லமையான பிடியிலிருந்து விடுவித்தார். இரக்கமுள்ள தேவன் பாவியாகிய நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. மறுபடியும் இஸ்ரவேலர் தேவனை அழைத்தபோது, இஸ்ரவேல னாகிய கிதியோனுக்கு முன்பாக தேவதூதன் தோன்றி, இஸ்ர வேலரை மீதியானியரின் கையிலிருந்து விடுவிப்பான் என்று கிதியோ னுக்கு தேவதூதன் சொன்ன போது அவன் எதிர்மாறான பதிலையே சொல்லுகிறான். நியா 6 : 15ல் அவன் சொன்னதான பதிலை

வார்சிப்போம், ''ஆ என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினால் இரட்சிப்பேன். இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்'' 'தான் யார்' என்பதை அறியாதிருந்த கிதியோனின் பார்வையில் நான் இஸ்ரேவேலில் ஒரு சாதாரண மனிதனாய் காணப்பட்டான். ஆனால் தேவனுடைய பார்வையிலோ ஒரு பராக்கிரமசாலியாய் காணப் பட்டான். அந்த பராக்கிரமசாலியைப் பார்த்து, ''கர்த்தர் உன்னோடே இருப்பார்'' (12ம் வசனம்) என்று கர்த்தருடைய தூதன் கூறினான். மேலும் '' ஒரே மனுஷனை முறியடிப்பது போல நீ மீதியானியரை முறியடிப்பாய்'' (16ம் வசனம்) என்றார். தேவனுடைய கண்களுக்கு முன்பாக கிதியோன் ஒரு சாதாரண மனிதன் அல்ல. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன். இஸ்ரவேலை மீட்கும்படியாக தேவனால் அபிஷேகிக்கப்பட்டவன். இவன் இஸ்ர வேலின் விரோதிகளை முற்றிலும் அழித்துப்போட்டான். இஸ்ரவேலில் 40 வருடம் சமாதானம் நிலவியது (நியா 8 : 28) ஆனாலும்...... கிதியோன் 'தான் யார்' என்பதை அறியாதிருந்தான். இறுதியிலே தான் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவன் என்ற முக்கியத்துவத்தை அறிந்து கொண்டான். தேவன் தன்னோடு இருக்கிறார் என்கிறதான அறிவினாலே யுத்த ஆயுதங்களைத் தாங்கியிருந்ததான ஆயிரக்கணக் கான மீதியானியர்களின் பண்ட்வீரர்களை எக்காளத்தையும் தீவெட்டி களையும் பிடித்திருந்ததான 300 பேரைக்கொண்டு மடங்கடித்தான்.

தேவன் தன்னை கண்டதில்லையென்றும் தான் இஸ்ரவேலிலே மிகவும் எளிமையான கோத்திரத்தை சேர்ந்தவனென்றும் அவன் எண்ணினானாகில் நிச்சயமாக மீதியானியர்களின் கையிலிருந்து இஸ்ரவேலரை அவனால் இரட்சிக்க முடியாது. ஆனால் கிதியோன் முற்றிலும் தன் எண்ணங்களை மாற்றிக்கொண்டு தன்னை யார் என்று அறிந்ததான தேவனுக்கு ஓர் சிறந்த ஊழியனானான்.

நான் இந்தவிதமாக சில உதாரணங்களின் மூலம் விளக்குகிற தினால் 'நாம் யார்' என்பதை அறிந்து கொள்வது எத்தனை முக்கிய மானது. தாங்கள் யார் என்பதைக் குறித்து நன்கு அறிந்ததின் பயனால் தேவனால் உபயோகப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான மனிதர்களைக் குறிந்து இந்த வேதம் விளக்கமாக கூறுகிறது.

மோசே, கிதியோன், யோசுவாவும் தேவன் தங்களை அறிந் திருக்கவில்லையென்று எண்ணி தங்கள் குறைகளையும் பெலவீனத் தையும் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பார்களேயானால் தேவ ஆசீர்வாதத்தை இழந்திருப்பது அவர்கள் மாத்திரமல்ல தேவனிடத்தில் சிறிது விசுவாசமுள்ள மற்றவர்களும் இவர்கள் நிமித்தம் மிகுந்த துன்பத்திற்குள்ளாயிருப்பார்கள். 12 வேவுகாரர்களின் சரித்திரம் இவைகளை நமக்கு தெளிவாய் எடுத்துக்காட்டுகிறது. பத்து வேவு காரர்கள் 'தாங்கள் யார்' என்பதை அறிந்திருக்கவில்லை. அவர்கள்

தேவனில் விசுவாசமற்றவர்களாய் தாங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்தின் ஜனங்களைக் குறித்து பயந்திருந்தார்கள் இவ்வறாக இருந்தும் இரண்டு வேவுகாரர்களின் விசுவாசத்தினால் இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்தார்கள். ஆனால் மற்ற பத்து பேரோ தாங்கள் யார் என்பதை மறந்து தங்களின் அவிசுவாசத்தினாலே தேவனை முனுமுனுத்தார்கள் அதனால் யோசுவாவும் காலேபும் அவர்களுடைய சந்ததியாரும் தவிர மற்ற பொல்லாத சந்ததியார் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை காணாமல் வனாந்திரத்திலே அழிந்தார்கள். சாத்தானோடும் அவனுடைய சர்வ சேனையோடும் போராடுகிற நாம் நம்மை யார் என்று அறியாதிருந்தோமானால் இஸ்ரவேலருக்கு நேர்ந்ததைப் போல் நமக்கும் நேரிடலாம், தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறாமலும் சாத்தானோடு செய்யும் போர்முனையில் தோல்வியின் மேல் தோல்வியே காணப்படும் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய அவிசுவாசத்தினாலே நாம் மாத்திரமல்ல நம்மோடுகூட அநேகர் வனாந்திரம் போன்ற உலக வாழ்க்கையிலே சிக்குண்டு அழிந்து போயிருப்பார்கள்.

யோசுவா, காலேப்பைப் போல 10 வேவுகாரர்களும் 'தாங்கள் யார்' என்பதை அறிந்திருந்தார்களேயாகில் எத்தனை மேன்மையாயிருந்திருக்கும். அவ்வாறு அறிந்திருப்பார்களேயாகில் முழு இஸ்ரவேல் ஜனத்தையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கும் படியாக ஊக்குவித்திருப்பார்கள். தேவ விருப்பத்தின்படியே முழு தேசமும் தேவன் தந்தருளின வெற்றியை ஆராவாரத்தோடு கொண்டாடியிருப்பீர். மணவாட்டியாகிய சபையும் இரண்டாயிரம் வருடங்களாக 'தன்னை யார்' என்று சரியாய் அறிந்திருந்தால் உலகமே ஒரு வித்தியாசமாய் காணப்பட்டிருக்கும். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் தேவன் தங்களுக்குள்ள உன்னத அழைப்பையும் வல்லமையையும் தங்களுக்குத் தந்தருளின நோக்கம் என்ன என்பதை அறிந்திருப்பார்களேயாகில் தேசம் முழுவதும் இயேசுவின் சுவிசேஷத்தினால் நிரப்பப்பட்டிருக்கும்.

'நீங்கள் யார்' என்பதை அறிந்து கொள்ளும் படியாகவே இந்த புத்தகம் உங்களுக்காக எழுதப்பட்டிருக்கிறது. 'நீங்கள் யார்' என்பதை அறிந்து கொள்வீர்களானால் உங்கள் வாழ்வில் ஒரு புதிய மாற்றம் உண்டாகும். அதனால் தேவன் தம்முடைய வல்லமையை உங்களுக்கும் உங்களைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்கும் வெளிப்படுத்துவார்.

இதுவரை நீங்கள் அறிந்திராத சில காரியங்களை நான் இந்த புத்தகத்திலே உங்களுக்கு எழுதி எச்சரிக்கிறேன். இவைகள் அடிக்கடி சம்பவிக்க காரணம் நீங்கள் ஆவிக்குறிய சூழ்நிலைகளில் வளர்க்கப்

படாததினாலே. நிபந்தனையின்றி விசுவாசிக்கிற அநேக காரியங்களை அநேகர் தங்கள் போதகரோடும் சபையாரோடும் விசுவாசிக்கிறார்கள். ஆனால் இவர்களின் விசுவாசம் தேவ வார்த்தையோடு ஒன்றித்து போகாதிருந்தால் அவை உண்மையான விசுவாசம் அல்லவே என்றும் அவை ஆலயத்தின் பாரம்பரியமேயாகும். என்றும் தாங்கள் தவறான வழியிலே செல்லுகிறார்கள் என்றும் அறிந்து கொள்வார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் விசுவாசிக்கிற காரியம் வேதத்திற்கு முரண்பாடானது என்ற சரியான அறிவு இல்லாதினால் தங்களுடைய பராம்பரியங்களையே கைக்கொள்ளுகிறார்கள். ஆகையினாலே யாராவது ஒருவர் அவர்களின் விசுவாசத்திற்கு மாறர்ன உண்மையான சத்தியத்தை எடுத்துக் கூறும்போது மிகுந்த கோபமடைவதற்கு பதிலாக பவுலும் சீலாவும் தேவனுடைய சுவிசேஷத்தை சொன்னபோது பெரோயா பட்டணத்தார் மனவாஞ்சையாய் ஏற்றுக் கொண்டு காரியம் இப்படியா என்று வேதவாக்கியங்களை தினமும் ஆராய்ந்தது போல இவர்களும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

பிரியமானவர்களே உங்களுடைய விசுவாசம் பென் ஹனிகிராப் எழுதின புத்தகத்திலே சார்ந்திராமல் வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து அதிலே உங்களுடைய விசுவாசத்தை பதிப்பது நல்லது. மிக முக்கியம் 'நீங்கள் யார்' என்று அறிந்து கொள்வீர்களானால் தேவன் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள்

இன்று அநேக கிறிஸ்தவர்கள் ஆவியின் நிறைவில் குன்றி காணப்படுவதின் இரகசியம் என்னவென்றால் தங்களைக் குறித்து தவறாக எண்ணுகிறதினாலே. கிறிஸ்தவர்களின் உள்ளத்திலே தவறான எண்ணங்கள் நிறைந்திருக்கிறதை சாத்தான் காண்கிறான். உங்களுடைய விசுவாசத்தின்படியே அல்லது நினைவின்படியே நீங்கள் இருக்கிறீர்கள் என்பது முற்றிலும் உண்மையே. தேவனுடைய இரத்தம் என் பாவங்களை நீக்கி சுத்திகரிக்கும் என்று ஒருவன் விசுவாசித்தால் அவனுடைய விசுவாசத்தின்படியே அவனுக்கு ஆகும். தேவனுடைய குணமாக்கும் தழும்புகளினால் குணமாகிறேன் என்று ஒருவன் விசுவாசிப்பானேயாகில் அவன் குணமடைகிறான். தேவன் சாத்தானின் வல்லமையை ஜெயித்து வெற்றி சிறந்தவர் என்று விசுவாசித்தால் அவனும் சாத்தானின் சேனைகளை வென்று ஜெயித்த ஒரு ஜெயவீரன். ஆனால் இதற்கு மாறாக இரட்சிக்கப் படுவதில்லை என்று ஒருவன் நினைப்பானேயாகில் இரட்சிக்கப் படுவதில்லை. வியாதியிலிருந்து விடுதலையடைவதில்லை என்று நினைப்பானேயாகில் அப்படியே ஆகும். சாத்தானின் வல்லமையை எதிர்த்து நிற்க திராணியில்லை என்று ஒருவன் நினைப்பானேயாகில் சாத்தானின் வல்லமைக்கு எதிராக எதிர்த்து நிற்க கூடாமல் தோல்வியின் மேல் தோல்வியை கண்டடைகிறான். எதிர்மறையான காரியங்களையும் தவறான காரியங்களையும் நாம் சிந்திக்கும்படியாக சாத்தான் ஏன் நம்மை தூண்டுகிறான் என்பதை நீங்கள் நன்றாய் புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். சாத்தான் நம்மைப் பார்க்கிலும் வல்லவன் என்ற எண்ணம் என்றுவரை நமக்குள் உண்டோ அன்று வரை அவன் நம்மேல் ஆதிக்கத்தை செலுத்துவான். நம் வாழ்விலும் சிறந்த கனி காணப்படுவதில்லை. குறைவுள்ளவர்கள் என்ற எண்ணம் நம்மில் காணப்பட காரணம் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை சாதாரண ஜனங்களென்று எண்ணுகிறதினால்தான் தேவனுடைய வல்லமை நம் ஜீவியத்தில் குன்றிப் போவதின் இரகசியமும் இதுவே.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை சாதாரண மனிதர்களைப் போல எண்ணுவோமானால் சாத்தான் தான் விரும்பினதை நம்மிடத்

திலிருந்து பெற்று கொள்வாள். தேவனுடைய ராஜ்யம் நம் மத்தியில் விரிவடைவதில்லை இந்த புஸ்தகத்தை வாசித்து கொண்டிருக்கிற வாசகர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்பதாக நான் கற்பனை பண்ணுகிறேன் ''அருமையான சகோதரன் பென் ஹனிகிராப், நீங்கள் இப்போது சொல்லக்கூடிய காரியத்தை சீக்கிரமாய் சொல்லாமல் நீட்டிக்கொண்டே போகிறீர்களே. கிறிஸ்தவர்களாகிய நாம் சாதாரனமானவர்கள் இல்லைதான். அப்படியானால் நாம் யார்? சீக்கிரமாய் ஒரு முடிவுக்கு வாருங்கள்'' என்று சொல்லலாம் ஆனால் நான் ஏற்கனவே சொன்னதுபோல பெரேயா பட்டணத்தார் தேவவசனத்தை கேட்டு காரியம் இப்படியாக இருக்கிறதா என்று தேவவசனத்தை ஆராய்ந்ததுபோல நாமும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்பதை என்னோடேகூட வாசித்து அறிந்து அறிந்து கொண்ட பின்பு நாம் நம்மை சாதாரணமனிதர்களா அல்லது தேவனுடைய கரத்திலே உபயோகப்படும் ஆயுதங்களா என்பதைத் திட்டமாய் அறிந்து கொள்ளலாம்.

'நாம் யார்' என்பதைக் குறித்து I கொரி 12 27ல் மிக தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது ''நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்'' இங்கே எழுதப் பட்டதை நீங்கள் வாசித்தீர்கள் அப்படியானால் நீங்கள் யார்? தேவனுடைய சரீரத்திலே நீங்கள் அவயவங்களாயிருக்கிறீர்கள், இவைகளைக் குறித்து மேலே குறிக்கப்பட்ட வேத பகுதியில் மாத்தி ரம்மல்ல இந்த வார்த்தைகளை எபே 1 : 23, I கொரி 1 : 18, 24, I கொரி 2 : 19லும் காணலாம். தேவனுடைய குமாரனாகிய இயேசு பூலோகத்திலுள்ள நம்மை மீட்பதற்காக மனிதனாக அவதரித்தார் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து நம்மைப் போல பாடுள்ள மனிதன் என்று சொன்னாலும் உண்மையில் அவருக்கும் நமக்கும் ஒரு வித்தியாசம் இல்லை. இயேசு மனித சுபாவங்களை உடையவராய் இருந்தபோதிலும் தேவனுடைய குமாரனாகவே திகழ்ந்தார். எல்லா துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்ல மைக்கும் கர்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கு மேலாய் அவர் உயர்ந்திருந்தார்.

மேலும், ''பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள யாவரும் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு பாட்டுபாடி மகிழ்ந்து அடிக் கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்தி ரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறீர்'' (வெளி 5:11,14) என்று வாசிக்கிறோம். இவைகளைக் குறித்து கொலோ 2 : 9ல் சொல்லப்பட்டிருக்கிறதை கீழே வாசிப்போம். ''தேவத்துவத்தின்

பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவனுக்குள் வாசமாயிருக்கிறது'' மத் 28 : 18ல் தேவன் ஒருவருக்கே வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ''தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே'' இயேசு தாமே மாட்சிமையினாலும் வல்லமையினாலும் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்ட தேவ குமாரனாயிருக்கிறபடியினால் அவரை ஒரு சாதாரண மனிதனாக அழைக்க முடியாது அதுமாத்திரமல்ல பிதாவின் வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார். எல்லாம் அவர் பாதத்தின்கீழ் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆகையினாலே நாம் பரலோகத்தில் வீற்றிருக்கிற இயேசு கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம் என்று வேதம் பறைசாற்றுகிறது. இதற்கு ஆதாரமாக கொலோ 2 : 18ல் சொல்லப்பட்ட வார்த்தையை வாசியுங்கள் அவரே சபையாகிய சரீரத்திற்கு தலையாயிருக்கிறார் ''கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிப்பெற்று இணைக்கப்பட்டு தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலை கிறிஸ்து'' இந்த வேத வசனங்கள் நமக்கு என்ன போதிக்கிறது என்று அறியீர்களா? தலையையும் சரீரத்தையும் பெற்ற தேவன் ஒருவரே. தலையாகிய கிறிஸ்து பரலோகத்தில் வீற்றிருக்கிறார் அவர் பிதாவின் வலது பாசத்தில் வீற்றிருக்கிறார் ஆனால் சரீரமோ பூலோகத்திலிருக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம்தான் அந்த சரீரம்.

தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவ சபைகளை துன்பப்படுத்தும் படியாக சவுல் சென்றபோது கிறிஸ்துவைக் கண்டறிந்தான், பரலோகத்திலுள்ள கிறிஸ்து அவனோடு பேசினார். சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவரைச் சுற்றி பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே பேசுகிற ஒரு சப்தத்தை கேட்டான். பவுல் தான் ஜனங்களைத் துன்பப்படுத்துவதாக நினைத்தான். உண்மையில் பவுலோ கிறிஸ்துவை துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். அவனோடு பேசினது தலையாகிய கிறிஸ்துவே. (எபே 1 : 22 : 23 ல்) ''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய சரீரமான சபைக்கும் அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' என்று வாசிக்கிறோம் ஆகவே விசுவாசத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் கண்களுக்கு முன்பதாக 'நாம் யார்' என்பதை அறிந்து கொள்ளலாம் நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம். சரீரத்தின் தலை கிறிஸ்துவே.

நாம் சாதாரணமான ஜனங்கள் என்று நம்மைக் குறித்து எண்ணுவது மிக தவறு என்பதை இப்பொழுது புரிந்து கொண்டீர்கள்.

நாம் மனிதர்கள்தான் என்பது உண்மைதான். ஆனால் நாம் சாதாரணமானவர்கள் அல்லவே. நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக் கிறோம். தலையாகிய கிறிஸ்துவும் சாதாரண மனிதனல்ல. மகிமையினாலும் கனத்தினாலும் வல்லமையினாலும் நம்மை முடிசூட்ட வல்ல தேவனுடைய குமாரனே அவர். அப்படியானால் அவருடைய சரீரம் ஒரு சாதாரண சரீரமல்ல. நாம் நம்மை சாதாரணமானவர்கள் என்று கருத வாய்ப்பில்லை. காரணம் சரீரத்திற்கும் தலைக்கும் உள்ள ஐக்கியத்தை யாராலும் பிரிக்க இயலாது. ஒரு தேசத்தை ஆளுகிற அரசன் தன்னுடைய பகைவர் களோடு நடந்த போரில் ஜெயங்கொள்வானாகில் அவனுடைய நாட்டின் பிரஜைகள் அவனுடைய தலையை மாத்திரமல்ல சரீரத்தையும்கூட கனம் பண்ணுவார்கள். ராஜா தன்னுடைய நாட்டின் வீதியின் வழியே செல்லும்போது ஜனங்கள் அவருடைய அரசை மாத்திரமல்ல சரீரமுழுவதிற்கு கனத்தைக் கொடுத்து மகிழ் விக்கிறார்கள். பகைவரோடு போராடுவதில் தலைதான் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கிறது. பகைவரோடு எவ்விதம் போராடலாம், எவ்வாறு வீழ்த்தலாம் என்கிறதான யோசனைகள் யாவும் அவன் சிரசிலே உதிக்கிறது. சரீரமும் சிரசும் ராஜாவினுடையதாயிருப்பதால் ராஜா தன்னுடைய ஜனங்களினால் கவுரவிக்கப்படுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சிரசு பரலோகத்திலிருக்கிறது அவருடைய பாதமோ பூமியிலிருக்கிறது. நீங்கள் யார் என்பதை இப்பொழுது புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய பாதங்கள் கிறிஸ்துவின் பாதங்கள். உங்களுடைய கைகள் கிறிஸ்துவின் கைகள் நம்முடைய கரங்களை வியாதியஸ்தர்கள்மேல் வைக்கும்படியாக இயேசுஎன் நமக்கு கட்டளையிட்டார் என்பது இங்கே நன்கு தெளிவா கிறது. நம்முடைய கரங்கள் வியாதியஸ்தர்கள்மேல் வைக்கப்பட்ட உடனே குணமடைகிறார்கள். (மாற்கு 16:18) நம்முடைய கரங்களை வியாதியஸ்தர் மேல் வைக்கிறோமென்றால் அது கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள கரமேயன்றி வேறில்லை. இரண்டாயிரம் வருடங் களுக்கு முன்பு வாழ்ந்த யூதஜனங்கள், இயேசுகிறிஸ்து மரித்த பின்பு அடக்கம் பண்ணப்பட்டார் என்று எண்ணினார்கள். அவர்கள் பெரிய தவறு பண்ணிவிட்டார்கள். இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்தை விட்டு கடந்து சென்றார் என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் உண்மை யாதெனில் கிறிஸ்து இந்த பூலோகத்தை விட்டு கடந்து செல்லவில்லை. அவருடைய சரீரமாகிய சபை இந்த உலகத்திலே நடமாடிக் கொண்டிருக்கிறது.

அது எப்போது ஆயிற்று என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். பெந்தேகோஸ்தே நாளில் நூற்றியிருபது பேர் கூடியிருந்த மேல் மாடியிலே பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல் ஒரு சப்தம் உண்டாயிற்று. அவ்வேளையிலே சபையானது பரிசுத்த ஆவியினால்

நிரப்பப்பட்டு தேவனுடைய சரீரமாயிற்று. பரலோகத்திலிருக்கிற தலையாகிய கிறிஸ்துவுக்கும் பூலோகத்திலே சரீரமாகிய சபைக்கும் ஐக்கியம் உருவாயிற்று. இந்த மகத்துவம் கொள்ளை அளவில் உண்டானது அல்ல என்பது உடனே தெளிவாகிவிட்டது. நசரேயனாகிய இயேசுவின் மேல் இறங்கின அதே பரிசுத்த ஆவியானவரே சபையாகிய சரீரத்திலே இறங்கினார். இயேசு செய்த அடையாளங்களும் அற்புதங்களும் அவருடைய சரீரமாகிய சபையின் மூலமாய் நடந்தேறியது (அப் 2:48, 3:1-10 5:12-16) இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டதினால் இந்த உலகத்தை விட்டே கடந்து சென்றார் என்று யூத மதத் தலைவர்கள் நினைத்தனர். ஆனால் அவர் இன்னும் பூலோகில் உலாவிக் கொண்டிருக்கிறார். பழைய சரீரத்தில் அல்ல புதிய சரீரத்திலே உலாவிக் கொண்டிருக்கிறார். அந்த சரீரமானது நாளுக்கு நாள் வளர்ந்தும் பெருகிக் கொண்டும் இருக்கிறது. அவருடைய உயிர்தெழுதலுக்குப் பின்பு அவருடைய பாதங்கள் இஸ்ரவேல் நாட்டிலும் ரோமாபுரியிலும் உலகத்தின் கடைசி பரியந்தமும் சென்றது.

இயேசு சென்ற இடமெல்லாம் அவருடைய சரீரமானது மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதான வல்லமையினால் நிரப்பப் பட்டது. பிசாசுகள் துரத்தப்பட்டன; வியாதியஸ்தர் சுகமாகினர்; மரித்தவர்கள் உயிர்த்தெழுந்தனர்; ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்து வின் ராஜ்யத்தில் பிரவேசித்தனர், காரணம் ஜனங்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதினால் சாத்தானுடைய சுயராஜ்யம் அசைக்கப் பட்டது. ரோம சாம்ராஜ்யத்திலே உருவான தவறான போதனைகள் நிலை நிற்க முடியவில்லை. சுவிசேஷமானது வெகு சீக்கிரமாக பரவ ஆரம்பித்தது. அன்பானவர்களே! இது ஒரு மனிதனுடைய வேலை அல்ல, இது தேவனுடைய வேலை. அவர் உலகத்திலே நடந்து சென்று இழந்தவர்களை தேடி இரட்சித்து சாத்தானுடைய வேலை களை அதமாக்குகிறார். (லூக்கா 19:10, I யோ 3:8) தேவனை விசுவாசிக்கிறவர்களின் பாதம் தேவனுடைய பாதமே. தேவனால் உபயோகப்படுத்தப்பட விரும்புகிறவர்களின் கரங்களே தேவனுடைய கரங்கள் தங்களுடைய அழைப்பை உணர்ந்தவர்களின் வாயிலிருந்து வல்லமையும் கிருபையும் இரக்கமும் பொருந்தின வார்த்தைகளே வெளிவருகிறது. ஆம், யூதர்கள் பெரிய தவறை செய்தார்கள். இயேசுவின் சரீரமாகிய சபையோ இன்னும் உலாவிக் கொண்டிருக் கிறது. (மத் 28:18) ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று இயேசு சொன்னார். பரலோகத்திலிருக்கிற தலையாகிய கிறிஸ்துவிற்கு மாத்திரம் இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை ; பூலோகத்திலிருக்கிற சரீரமாகிய சபைக்கும் இவை கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் மாத்திர மல்ல பூலோகத்திலும் இயேசுவுக்கு வல்லமையுண்டு. சபையானது

தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட போது பூலோகத்திலுள்ள அவருடைய அதிகாரம் சபையிலுள்ள அவரை விசுவாசிக்கிற ஆண்களுக்குள்ளும், பெண்களுக்குள்ளும் விளங்கிற்று. ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் சாதாரணமானவர்கள் அல்ல என்பதை அறிந்து கொள்ளுகிறோம் வானத்திலும், பூமியிலும் சர்வ அதிகாரமும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா அதிகாரமும் பரலோகத்தில் வீற்றிருக்கிறதான தேவனுடைய குமாரனுக்கு மாத்திரமல்ல பூலோகத்திலுள்ள சபைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவைகளை உங்களுக்கு எழுதின பின்பு 'நீங்கள் யார்' என்பதை இப்போது அறிந்து கொண்டீர்களா? நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள் என்று மறுபடியுமாக உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். பலநாட்களுக்கு முன்பே இவ்வசனத்தை அறிந்திருப்பீர்கள் ஆனால் இதன் அர்தத்தை ஒருபோதும் உணர்ந்ததில்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய நீங்கள் தெருவிலே நடந்து செல்லும்போது தலையாகிய கிறிஸ்துவும் உங்களோட நடந்து வருகிறார். கடைகளுக்குள்ளே செல்லும்போது கிறிஸ்துவும் உங்களோடுகூட வருகிறார். காரணம் நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள்.

நாம் பூலோகத்திலே கிறிஸ்துவின் அதிகாரத்தை பெற்றதான் கூட்டத்திலே உள்ள அங்கத்தினர் சாத்தானும் அவனுடைய சர்வ சேனையும் கிறிஸ்து தன்னுடைய சபையிலே விளங்கப்பண்ணினதான வல்லமையைக் குறித்து நடுங்குகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தாங்கள் யார் என்பதை அறிந்து கொள்ளாத கிறிஸ்தவர்கள் சாத்தானோடு போரிடுகையில் தோற்று போகிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை சாதாரணமானவர்கள் என்று எவ்வளவு காலமாக நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அவ்வளவு காலமாக சாத்தான் நம்முடைய முகத்திற்கு நேராக சிரித்துக்கொண்டேயிருக்கிறான். தன்னை எதிர்த்து நிற்க சாதாரண கிறிஸ்தவர்களிடம் வல்லமை இல்லை என்று அவன் புரிந்து கொள்கிறான். நாமோ வல்லமையினாலும் அதிகாரத்தினாலும் நிரப்பப்பட்ட கிறிஸ்துவின் சரீரம் என்று விசுவாசித்து அறிக்கையிடுவோமாகில் சாத்தான் நமக்கு முன்பாக வெட்கப்பட்டு தலை குனிய நேரிடும். இயேசுவின் நாமத்தில் நாம் கட்டளையிடும்போது சாத்தானும் வியாதியும் பிரச்சினைகளும் பறந்து போய்விடும்.

நீங்கள் யார் என்று அறிந்து கொள்வது எத்தனை முக்கியமானது. தாங்கள் யார் என்பதை அறிந்து கொண்டதினால் ஆதி சபை வல்லமையாயிருந்தது. அப்போஸ்தலர்கள் அதை போதித்ததினால் ஆதி சபையினர் அதை அறிந்து கொண்டார்கள். அப் 2 : 42 ல் இதை வாசிக்கலாம் ஆதி கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய

உபதேசத்திற்கு முற்றும் செவிகொடுத்தார்கள். கிறிஸ்தவர்கள் தேவனுடைய சரீரமாயிருக்கிறார்கள் என்ற கருத்தை அப். பவுல் அதிகமாக வலியுறுத்தினான் என்பதை I கொரி 12 : 27ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களுடைய உபதேசங்களை பின்பற்றினவர்கள் 'தாங்கள் யார்' என்றும் தாங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டார்கள். இதுதான் அவர்களுடைய நம்பிக்கையும் அறிக்கையுமாய் இருந்தது அதனால் இவைகளின் மூலமாய் தேவனுடைய வல்லமை ஜனங்களில் விளங்கிற்று. நான் ஒரு சாதாரண மனிதன் என்று எத்தனை நாட்களாக நம்மைக் குறித்து நினைக்கிறோமோ அத்தனை நாட்கள் மட்டும் நாம் அதன் படியே கிரியை செய்கிறவர்களாயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் சரீரத்திலே ஒரு அங்கமாயிருக்கிறீர்கள் என்று எப்பொழுது உணருகிறீர்களோ அந்நிமிடமே அதைப்போல கிரியை செய்வீர்கள். ஏற்கனவே நான் உங்களுக்கு எழுதினது போல நீங்கள் வீதியிலே நடக்கும் போதும் கிறிஸ்துவும் உங்களோடே கூட நடந்து சொல்லுகிறார். கடைகளிலே நுழையும்போதும் கிறிஸ்துவும் உங்களோடு கூட நுழைகிறார் என்பது முற்றிலும் உண்மை வீதியிலே நடக்கும் போது கிறிஸ்து என்ன செய்கிறார் என்ற நினைவு உங்களுக்குள் எல்லாம் அவருடைய சிந்தனை முழுவதும் உலகத்தின் காரியங்களால் நிறைந்திருக்குமா? இல்லாவிடில் அவர் தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களில் மூழ்கி இருப்பாரா? அவர் வீதியிலிருந்து வீட்டிற்கு திரும்பி வந்தபின் சகலவிதமான களியாட்டு தற்கொலை விவாகரத்து போன்றதான படங்களைப் பார்ப்பதற்கு தொலைக்காட்சிப்பெட்டியை இயக்குவாரா? இல்லையென்றால் தனக்கும் பிதாவுக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்திக் கொள்ளவும், தன்னைச் சுற்றிலுமுள்ள கைவிடப்பட்ட ஜனங்களுக்காகவும் தேவன் தனக்கு கொடுத்ததான வேலைகளைச் செய்வதர்காக தேவையான அறிவுறைகளை பெற்றுக் கொள்ள தன்னுடைய அறைக்குச் செல்வாரா? செல்வந்தர்களைப் போல இயேசுவுக்கு அதிக பணம் இருந்திருந்தால் அவர் என்ன செய்திருப்பார்? தன்னுடைய சொந்த இன்பத்திற்காக எல்லாவற்றையும் செலவழித்திருப்பாரா? இல்லையெனில் ஆடம்பர வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள செலவழித்திருப்பாரா? அப்படியில்லை என்றால் ஒடுக்கப்பட்ட விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் வாழ்வளித்து தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்குதலுக்காக செலவழித்திருப்பாரா? (யாக் 1 : 27) தனக்கு கிடைக்கிறதான நேரத்தை தனக்காக செலவழித்திருப்பாரா? அவ்வாறு இல்லையெனில் இழந்து போனவர்களை இரட்சிக்கும்படியாக தன் நேரம் முழுவதையும் பிரசங்கத்திலே செலவிட்டிருப்பாரா?

மேலே கேட்கப்பட்ட கேள்வியின் பதில் மிகவும் எளியது என்பதை நீங்கள் அறியீர்களா? இயேசு செய்த அநேக காரியங்களைக் குறித்து புதிய ஏற்பாட்டிலே மிக தெளிவாக வாசிக்கிறோம். இவைகளை

வாசிக்கும் போதே நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள் என்ற உண்மையை ஆழ்ந்து சிந்தியுங்கள். (எபி. 13 : 8) நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் இன்னும் அதே காரியத்தை செய்ய விரும்புகிறான். அவைகளை உங்கள் மூலமே செய்ய விரும்புகிறார். காரணம், நீங்கள் தேவனுடைய சரீரமாயிருக்கிறீர்கள். ஆதி கிறிஸ்தவர்கள் இந்த உண்மையை புரிந்து கொண்டார்கள். எல்லா விதங்களிலும் அவர்கள் கிறிஸ்துவைப் போலிருந்தார்கள் என்பதை அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கிறோம். அவர்கள் ஜெபிக்கிறவர்களாகவும் (அப். 2 : 42, 6 , 4) தங்களுடைய பணத்தையும் உடமைகளையும் தங்களுக்காக செலவிடாமல் தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக செலவிட்டனர். (அப். 2 : 44, 45, 4 : 33, 35) வியாதியஸ்தர்களை குணமாக்கினர் (அப். 5 : 12-16) பிசாசுகளை துரத்தினர். (அப். 16 : 16-18) மரித்தவர்களை உயிரோடே எழுப்பினர் (அப். 9 : 36-43) இயற்கைக்கும் அப்பாற்பட்ட வெளிப்பாடுகளால் நடத்தப்பட்டார்கள். (அப். 5 : 1-11, 10 : 9-23, 16 : 6-10) சென்ற இடமெல்லாம் கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கித்தனர். (அப். 8 : 4, 25) கிறிஸ்துவைப் போல் சுவிசேஷத்திற்காக தங்களையே இழக்க தயாராயிருந்தனர் (அப். 7 : 54-60 12 : 2) எல்லாவற்றிலும் கொஞ்சம் குறைய கிறிஸ்துவைப் போல் ஜீவித்தபடியினால் ஜனங்கள் அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள் (அப் 11 : 20) கிறிஸ்துவைப் போல் இருந்தபடியினால் கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறதை ஒரு சிலாக்கியம் என்றே கருதினர்.

அன்பான சகோதர சகோதரிகளே! நீங்கள் சாதாரண கிறிஸ்தவர்கள் அல்லவே. நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்திலே ஒரு அங்கமாயிருக்கிறீர்கள். சகல பரிபூரணமும் அவருடைய சிரசிலே மாத்திரமல்ல சரீரத்திலும் வாசமாயிருக்கிறது. (கொலே 1:19,2:9,10) நீங்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும் போது தேவனுடைய பரிபூரணம் உங்களில் வாசமாயிருக்கிறது என்பதைக் குறித்து நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இது முற்றிலும் உண்மை என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த உண்மையை உணர்ந்து கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பார்த்து சாத்தான் நடுங்குகிறான். நீங்கள் ஆவியிலே குறைவுள்ளவர்கள் என்கிறதான எண்ணத்தை சாத்தான் ஏன் உங்களுக்குள் உருவாக்குகிறான் என்பதை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? ஏனென்றால் தாங்கள் யார் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறவர்களை சாத்தான் தடுத்து ஆவியிலே ஒரு செத்த நிலையை உருவாக்குகிறான். 'நீங்கள் யார்' என்பதை அறிந்து கொள்வது மாத்திரமல்ல அதன்படி ஜீவிக்க வேண்டுமென்பதே என்னுடைய வாஞ்சையும் ஜெபமுமாயிருக்கிறது.

அப் 1:1 கிறிஸ்து பரமேறுமுன்பு பூலோகத்திலே தன்னுடைய வேலையை துவக்கிவிட்டு சென்றார். தொடர்ந்து அவற்றை செய்து

முடிப்பதற்காக தேவன் நம்மை உபயோகப்படுத்தும்படி விரும்புகிறார். இந்த உலகத்தில் பிரமிக்கத்தக்கதாக நாம் வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. இயேசு ஜீவித்தது போல நாம் ஜீவிக்கவும் இயேசு செய்தது போல நாமும் செய்ய வேண்டும். காரணம் நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம் (I யோ 2:6) சுவிசேஷம் அறிவிக்கப்படாத தூர இடங்களில் உள்ள ஜனங்களுக்கும் உங்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்கும் சுவிசேஷம் உங்கள் மூலம் பிரசங்கிக்கப்பட தேவன் விரும்புகிறார். உங்கள் கரத்தின் மூலம் வியாதியஸ்தர் குணமாகவும் பிசாசுகளை துரத்தவும், செத்தவர்களை உயிர்பிக்கவும் விரும்புகிறார், உங்களுடைய நேரம், தாலந்து. பணம் யாவற்றையும் செலவிட்டு அழிந்து போகிற ஆத்துமாக்களை இரட்சித்து தம்முடைய ராஜ்யத்தை விரிவாக்கும்படியாக விரும்புகிறார். பூலோகத்திலே தேவன் உங்கள் கரத்திலே கொடுத்து சென்ற வேலை இதுவே என்பதை நீங்கள் திட்டமாய் அறிந்து கொள்ளும்படியாக நான் மறுபடியுமாக உங்களுக்கு எழுதுகிறேன்.

ஒருமுறை நான் அமெரிக்காவிற்கு சென்றபோது திமிர் வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை சந்தித்தேன் தான் செய்ய விரும்புகிற வேலைகள் ஒவ்வொன்றையும் என்னிடத்தில் சொல்லியிருக்கிறாள். தான் படுக்கையில் இருக்கும்போது எல்லா திட்டங்களையும் தீட்டுகிறாள். ஆனால் அதன்படி செயல்பட அவளால் முடியாமற் போகிறது. சிரசிலே உதிக்கிறதான கட்டளைகளுக்கு அவளுடைய அவயவங்கள் கீழ்படியாததினால் அவளுடைய திட்டங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. இன்றைய சபைகளும் திமிர்வாதப் பெண்ணைப் போல் காணப்படுகிறது. இரட்சிப்பின் சுவிசேஷத்தினால் உலகத்தின் ஜனங்களை பாவ பிடியிலிருந்து மீட்க வேண்டும் என்பதே கிறிஸ்துவின் விருப்பம். தேவனுடைய மகிமையையும், வல்லமையையும், மாட்சிமையையும் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதே கிறிஸ்துவின் விருப்பம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் சபையானது கீழ்ப்படியவில்லை. காரணம், அவருடைய சரீரமாகிய சபை செத்து விட்டது. பரலோகத்திலிருக்கிற தலையாகிய கிறிஸ்து சரீரத்திற்கு காட்டுகிறதான திட்டங்களை சபையாகிய சரீரம் கவனித்து நடக்காததினால் சபையானது தன் சொந்த திட்டங்களை நிறைவேற்றி சொந்த வழியில் செல்கிறது.

உங்கள் சொந்த வேலைகளிலே கவனமாயிருந்து உங்கள் சொந்த இன்பங்களில் மூழ்கியிருப்பீர்களானால் நீங்களும் சரீரத்திலே பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவீர்கள் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களாயிருப்பீர்களாகில் தேவன் உங்களை உபயோகப்படுத்தவே முடியாது. இன்று தேவனால் உபயோகப்படுத்த விரும்புவீர்களானால் நான் உங்களுக்காக

ஜெபிக்கிறேன். உங்களுடைய சொந்த வல்லமையினாலும், சொந்த வழியினாலும் தேவனுக்காக இவைகளைச் செய்தீர்களானால் நீங்கள் ஒருக்காலும் தேவனை மகிமைப்படுத்தும் வாய்க்காலாக மாற முடியாது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்களேயாகில் நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். கிறிஸ்து மேன்மையான வழிகளில் உங்களை நடத்தி தன்னுடைய வேலையை நிறைவேற்ற விரும்பினார் நீங்களோ அவருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. தேவனுடைய சரீரத்திலே பீடிக்கப்பட்ட பகுதியாக உணர்வீர்களாகில் நானும் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன். நீங்களும் என்னோடு கூட ஜெபியுங்கள்.

''ஆண்டவரே, 'நான் யார்' என்பதை அறிந்து கொள்ள என்னுடைய கண்களை நீர் திறந்தபடியினால் நான் உம்முடைய பாதத்தில் வந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் உம்முடைய சரீரத்திலே ஒரு அவயவமாய் இருக்கிறேன். உம்முடைய அளவற்ற ஆவியை என்னில் ஊற்றினீரே. அடிக்கடி கனவீனமான வழிகளிலே நான் நடந்து உம்முடைய வேலையை என்னுடைய சொந்த யோசனையின்படியே செய்தேன். என்னுடைய சொந்த பெலத்தினாலே, எனக்குத் தெரிந்த வகையிலே செய்தேன். பணத்திலும், உலகத்தின் களியாட்டுகளிலுமே என்னுடைய ஆசைகள் நிறைந்திருந்தது. உம்மைக் குறித்தும் உம்முடைய இராஜ்யத்தைக் குறித்தும் என்னைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களின் இரட்சிப்பைக் குறித்ததான ஏக்கம் என் வாழ்வில் இரண்டாவது இடத்தையே வகித்தது. இருந்தும் என்னை சிறிதளவாவது உபயோகித்தீரே. ஆண்டவரே என்னை மன்னியும். இன்று என்னை உம்முடைய கரத்திலே சமர்ப்பிக்கிறேன். எனக்குள்ள யாவற்றையும் எடுத்துக் கொள்ளும் ஆண்டவரே. உம்முடைய வல்ல ஆவியினாலே என்னை நிரப்பும் இந்நிமிடம் முதற்கொண்டு நான் உம்முடைய வல்லமையினால் நிரப்பப்பட்ட சரீரத்தில் அவயவமாய் இருக்க விரும்புகிறேன். ஆகவே நீர் ஜீவிக்கிறவர் என்றும் உம்மில் விசுவாசம் வைக்கிறவர்களை நீர் விடுவிக்கிறவர் என்றும் இந்த உலகம் அறிந்து கொள்ளும். ஆண்டவரே, சாத்தான் என்னை மேற்கொள்ள வல்லமையற்றவனாய் இருக்கிறபடியினால் நான் உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இன்னும் அவன் என்னோடே போராட முயற்சிப்பானேயாகில் 'நான் யார்' என்பதை அவனுக்குச் சொல்லுவேன். தேவனுடைய வல்லமையினாலும் அதிகாரத்தினாலும் நிரப்பப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்திலே நான் ஒரு அங்கமாயிருக்கிறேன் என்பதை அவனுக்கு எடுத்துச் சொல்லுவேன். நீர் எனக்கு செய்ததான எல்லாவற்றிற்காகவும் என்மூலம் செய்யப் போகிற கிரியைகளுக்காகவும் நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்'' ஆமென் என்று ஜெபியுங்கள்.

ஆம் இன்னும் ஒரு காரியம் உண்டு. நீங்கள் கற்றுக்கொண்ட யாவற்றையும் வாயின் மூலமாய் அறிக்கையிடுவது மிக முக்கியம். அது என்னவெனில் உங்களின் விசுவாசத்தை உங்கள் வாயின் வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். நீங்கள் தேவனுடைய சரீரத்திலே ஒரு அங்கமாயிருக்கிறீர்கள் என்றும் அந்த அவயவத்தின் மூலம் தேவனுடைய வல்லமையை பகிர்ந்து கொள்கிறீர்கள். தேவன் உங்கள் மூலமாய் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற விருப்பமுள்ள வராயிருக்கிறபடியால் அவருக்கு நன்றி செலுத்துவோர். இரண்டா வதாக உங்களுடைய நம்பிக்கையை சாத்தானிடத்தில் அறிக்கையிட வேண்டும். நீங்கள் அவனுக்கு பயப்படவில்லை என்பதை அவன் அறிந்திருக்கட்டும். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரமாகிய சபைக்கு கொடுக்கப் பட்டி ருக்கிறது. ஆகவே, சாத்தானும் அவனுடைய சர்வ சேனையும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாயிருக்கிற உங்களுக்கு கொடுக்கப் பட்ட அதிகாரத்திற்கு எதிராக தலைகுனிய வேண்டும். உயிர்த் தெழுந்த கிறிஸ்துவுக்குள் 'நீங்கள் யார்' என்பதை சாத்தான் அறிந்து கொள்வானாகில் உங்கள் ஜெபம் வெற்றியுள்ள ஜெபமாய் மாறும். உங்கள் விசுவாசத்தை உங்களுடைய சகோதர சகோதரிகளிடம் அறிக்கையிடுங்கள். கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தினால் ஒருவரையொருவர் ஊக்கு வித்து திடப்படுத்துவது மிகவும் நல்லது. உங்களுடைய சகோதர சகோதரிகள் கிறிஸ்துவ ஜீவியத்திலே ஒரு வெற்றியை காணாமல் இருக்கலாம். காரணம் தங்களை 'யார்' என்று இன்னும் அவர்கள் அறியவில்லை. அவர்களையும் ஊக்கு வியுங்கள். அப்படி செய்வோமானால் அவர்களின் ஆத்மீக கண்கள் திறக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவர்கள் 'யார்' என்பதை அறிந்து கொள்வார்கள்.

நாம் தேவ வல்லமையினால் நிரப்பப்பட்ட சரீரம் என்று நாம் கூறுவதை சிலர் குற்றப்படுத்துகிறார்கள் என்று நான் கேளவிப் பட்டேன். இவைகளைக் குறித்து நாம் பிரசிங்கிப்போமானால் நாட்கள் செல்ல செல்ல கிறிஸ்து நமக்கு தேவையில்லை ஏனெனில் நாம் மிகவும் முக்கியப்படுத்தப்படுவோம் என்று சிலர் கூறுகிறார்கள். இந்த குற்றச்சாட்டுக்கு தகுந்த பதிலை நான் கூற விரும்புகிறேன். இந்தவிதமான எண்ணங்களை நம்மில் கொண்டுவந்ததான சாத்தானை நம்மால் தோற்கடிக்க முடியும் (யோவா 10 : 10) முதலாவதாக, சாத்தானை எதிர்க்கவும் அவன் மேல் ஜெயங்கொள்ளவும் தேவன் நமக்கு கொடுத்ததான வல்லமையை நம்மிலிருந்து பறித்து கொள்ள சாத்தான் விரும்புகிறான். பரலோகத்திலே சகல வல்லமையினாலும் நிரப்பப்பட்ட தேவன் வீற்றிருக்கிறார் என்று நாம் கொண்டிருக் கிறதான வல்லமையைக் குறித்து சாத்தான் மிகுந்த மனநிறைவுள்ள வனாயிருக்கிறான். தேவனுடைய வல்லமையை பரலோகத்திலே

மாத்திரம் கண்டு கொள்ள முடியும் என்று விசுவாசிப்போமாகில் நாம் வல்லமையற்ற கிறிஸ்தவர்களாகவே காணப்படுவோம். கிறிஸ்து பரலோகத்தில் மாத்திரமே வல்லமையுள்ளவர் என்பதை கோடிக் கணக்கான கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கும்படி செய்கிறான். கிறிஸ்தவர்களாகிய நாம் எத்தனை காலமாக பெலவீனர்கள் என்று நினைக்கிறோமோ அத்தனை காலமாக சாத்தான் நம்மில் பயப்பட நம்மிடத்தில் ஒன்றுமில்லை. ஆனால் பிரியமானவர்களே, கிறிஸ்தவர்கள் 'தாங்கள் யார்' என்பதை அறிந்தார்களேயாகில் நரகத்திலே ஒருவிதமான பயம் எழும்பிவிடும் சாத்தான் இவ்வகையான போதனைகளை மறைந்திருந்து வீழ்த்தி விடுவான்.

இரண்டாவதாக, கீழ்கண்ட உண்மையை அறிந்து கொள்ளும் படியாக உங்கள் கண்கள் திறக்கப்பட விரும்புகிறேன் இவ்வகையான போதனை கிறிஸ்துவை நாம் சார்ந்திருக்கிறதை குறைத்துவிட முடியாது. கிறிஸ்துவின் மேல் இன்னும் அதிக பற்றுதலாகும்படி கவனமாய் கவனிக்கவும். தலையில்லாமல் வீதியிலே யாராவது நடந்து செல்லுவதை பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் பார்த்து இருப்பீர்களோ, இல்லையோ என்பதைக் குறித்து எனக்குத் தெரியாது ஆனால் நான் அந்தவிதமாக பார்த்ததில்லை. ஏதாவது ஒரு அங்கம் இல்லாத ஜனங்களை நான் பார்த்திருக்கிறேன். தலையில்லாமல் ஒருவன் ஜீவிக்க முடியாது. சபையும் கிறிஸ்துவாக தலையோடு இணைக்காவிட்டால் ஆத்துமாவிலே செத்ததாயிருக்கும். இந்த வகையான போதனை, நாம் கிறிஸ்துவில் சார்ந்திருக்கும் தன்மையை இன்னும் அதிகமாக பலப்படுத்துகிறது. பரலோகத்தில் வீற்றிருக்கிற கிறிஸ்துவில் நாம் முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும் என்ற ஆழத்துவத்தை இப்போதனையின் மூலம் புரிந்து கொள்ளுகிறோம். சபையின் தலையாகிய கிறிஸ்துவால்தான் எல்லாம் ஆகும். அவரின்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது (யோ 15:5) தேவனுடைய அற்புத நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

கிறிஸ்தவர்களாகிய நாம் சாதாரணமானவர்கள் அல்ல என்றும் கனம், மகிமை, வல்லமை, மகத்துவத்தினால் முடிசூட்டப்பட்ட ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய குமாரனின் சரீரத்தில் அங்கமாயிருக்கிறோம் என்றும் பார்த்தோம். தேவனுடைய பார்வையிலே நாம் எப்படிப்பட்டவர்கள் என்று இன்னும் ஆராய்ந்து பார்ப்போம்.

பரிசுத்த ஆவியின் ஆலயம் நீங்களே !

''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'' என்று பவுல் 1 கொரி 3:16 ல் பறை சாற்றுகிறான். மேலும் 17ம் வசனத்தில், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம் என்றும் கூறுகிறான். ஆம் நாம் தேவ ஆவியானவர் தங்கும் ஆலயம். நாம் தேவனுடைய ஆலயம் என்று இந்த இடத்தில் மாத்திரம் சொல்லப்படவில்லை. இதைக் குறித்து இன்னும் I கொரி 6:19, II கொரி 6:16, எபே 2:21, 21 ஆகிய பகுதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் தேவ ஆவியானவர் வாசம்பண்ணும் ஆலயம் என்று வேதம் திட்டமாய் கூறுகிறது. இவைகளைக் குறித்து நீங்கள் திட்டமாய் அறிந்து கொள்ள மோசே தேவனை சந்தித்ததான சீனாய் வனாந்தரத்திற்கு நான் உங்களை அழைத்து செல்ல விரும்புகிறேன். மோசே, 40 நாள் இரவும் பகலும் சீனாய் மலையிலே இருந்தபோது ஆசாரிப்பு கூடாரத்தை கட்டுவதற்காக வெள்ளி, பொன் மற்றும் சில பொருட்களைச் சேகரிக்கும்படியாக தேவன் அவனுக்கு கட்டளையிட்டார். ''நான் அவர்கள் நடுவில் வாசமாயிருப்பதற்கு இந்த பரிசுத்த ஸ்தலம் கட்டப்பட வேண்டும்'' என்று தேவன் கூறினார் (யாத் 25:8) மேலும் வானத்தையும் பூமியையும் படைத்ததான சர்வ வல்லமையுள்ள கர்த்தர் அவர்களுடைய தேவன் என்பதை இஸ்ரவேலர் அறிந்து கொள்ளும்படியாக தேவன் அவர்கள் நடுவில் வாசமாயிருப்பது தேவசித்தமாயிருந்தது. (யாத்: 45, 46)

ஆசாரிப்பு கூடாரம் எவ்விதமாய் கட்டப்பட்டது என்பதைக் குறித்து யாத். 40ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தையின்படியே கட்டி முடிக்கப்பட்டு கர்த்தருடைய மேகம் அந்த கூடாரத்தின் மேல் நிழலிட்டதும் கூடாரமானது மகிமையினால் நிரப்பப்பட்டது. ஆகவே மோசேயினால் அந்த கூடாரத்திற்குள்

செல்லமுடியவில்லை. (34:36) (40:34-38) அந்த வேளையிலே தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறிற்று வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களின் நடுவிலே வாசம் செய்தார். இந்த தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன், அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்கிற தேவன், எல்லாவற்றையும் தன்னுடைய ஆளுகைக்கு உட்படுத்தின தேவன், சர்வத்தையும் தம்முடைய கரத்திலே கொண்ட தேவன், எண்ணிக்கைக்கு அடங்காத தூதர்களால் ஓயாமல் தொழுது கொள்ளப்படுகிற தேவன். இப்படிப்பட்ட தேவன் தங்கள் நடுவில் வாசம்பண்ண தங்களை தெரிந்து கொண்டதை எண்ணி மிகுந்த ஆச்சரியமடைந்தார். ஆசாரிப்பு கூடாரத்தை காண்கிறதான ஒவ்வொரு நேரமும் தாங்கள் சாதாரண ஜனங்கள் அல்ல என்றும் தேவனால் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும் தாம் வாசம்பண்ணும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் என்றும் அவை அவர்களுக்கு நினைப்பூட்டிற்று

இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேரத்திலே அநேக நாட்கள் சஞ்சரித்த பின்பு தாவீது அவர்களுக்கு ராஜாவாக இருந்தான். ஒருநாள் தாவீதுக்கு ஒரு யோசனை எழும்பிற்று தான் ஒரு பெரிய அரன்மனையிலும் தேவன் ஒரு கூடாரத்திலும் வாசம் பண்ணுவதைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தான் முடிவு, தேவனுக்கு ஒரு அழகான ஆலாயத்தை கட்ட தீர்மானித்தான் அதை தீர்க்கதரிசியாகிய நாத்தானுக்கு அறிவித்தான். நாத்தானுக்கு அது ஒரு நல்ல யோசனையாக இருந்தது. ஆனால் அன்று இராத்திரியிலே தேவன் அவனோடு பேசினார். தேவ்னுடைய ஆலயம் தாவீதினால் கட்டப்படுவது தேவ சித்தமில்லை என்றும் அவனுக்குப்பின் அவனுடைய சந்ததியாகிய அவனுடைய குமாரன் சாலமோன் அதைக் காட்டுவான் என்பதே தேவ சித்தமாயிருந்தது. இவைகளை தாவீதினிடத்தில் சொல்லும்படியாக கர்த்தர் நாத்தானோட பேசினார் (II சாமு 7 : 1-17, I நாள 22 : 6-10) தேவ ஆலயத்தை கட்டும்படியாக தாவிது ஆயத்தங்களை செய்ய வேண்டியதாயிற்று (I நாள் 22 : 1-5, 14 6) தேவனுடைய குமாரனாகிய சாலமோன் அவைகளைக் கட்டி முடித்தான் (I நாள் 5 : 6, 7)

தேவனுடைய ஆலயத்தைக் கட்டும் பணியில் சாலமோன் ஈடுபட்டபோது தேவ ஜனங்களின் நடுவில் வாசம்பண்ணும்படியாக நான் இந்த ஆலயத்தை தெரிந்து கொண்டேன் என்று தேவன் அவனோடு பேசினார், தேவன் ஆசாரிப்பு கூடாரத்திலே வாசம் செய்ததுபோல சாலமோன் கட்டின தேவ ஆலயத்திலும் வாசம பண்ணினார் (I ராஜா 6 : 11, 13) ஆலயத்திற்கான வேலைகள் முடிந்ததும் ஆலயம் பிரதிஷ்டிக்கப்பட்டது. ஆலய பிரதிஷ்டையின் நாளிலே தேவனுடைய மகிமை ஆசாரிப்பு கூடாரத்தை நிரப்பிற்று

என்பதை I இராஜா 8 : 10, 11ம் வசனங்களிலே வாசிக்கிறோம் ''அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படு கையில் மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று அப்பொழுது சாலமோன், காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன் னார் என்னும் தேவரீர் வாசம்பண்ணத்தக்க விரம் நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன்'' என்றும் கூறினான். மேலும் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராகிய தேவன் எருசலேமிலிருக்கிற தமது ஜனங்களின் நடுவில் வாசம்பண்ணுவதில் மகிழ்ச்சியாயிருக்கிறார் என்பதைக் குறித்து ஜனங்கள் சாட்சியாய் அறிவித்தார். மறுபடியும் சாலமோன் தேவனு டைய பரிசுத்த சந்திக்குமுன் நின்று தன்னுடைய கரங்களை வானத் திற்கு நேராக உயர்த்தி ஆலய பிரதிஷ்டைக்கான நீண்ட ஜெபத்தை செய்தான். தேவனுடைய ஆலயமானது தேவன் வாசம்பண்ணும் ஸ்தலமாகமாத்திரமல்ல ஜனங்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் அளிக்கும் இடமாயும். தேவைகளை சந்திக்கும் இடமாயுமிருக்கிறது. தேவன் தம்முடைய ஜனங்களை சந்திக்கும் இடம் இதுவேதான். இஸ்ரவேலர் இந்த ஆலயத்திலேதான் தேவனை சந்தித்தனர்.

''தேவன் மெய்யாகவே பூமியிலே வாசம் பண்ணுவாரோ? வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே, நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்'' I இரா 8 : 27, ஏசாயி 66 1,2) என்று சாலமோன் நன்றாக உணர்ந்தான். அப்படியிருந்தும் ஜனங் களின் நடுவில் தேவனுடைய பிரசன்னம் அந்த ஆலயத்திலே விசேஷமாயிருந்தது. தெய்வீக பிரசன்னமானது எழுத்தளவில் மாத்திரமல்ல செயலிலே காணப்பட்டது. தேவனுடைய மகிமையி னிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்கிறதற்கு நிற்கக் கூடாமற் போயிற்று. (I இரா. 8 : 11) அதே இடத்திலே தேவ சப்தத்திற்கு கீழ்ப்படிகிறவர்களின் ஜெபங்களுக்கு அவர் செவி கொடுத்து வெற்றி யளிக்கிறார் என்பதைக் குறித்து தேவன் வெளிப்படுத்தினார்.

உமது அடியானும் இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப் போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்'' (I இரா. 8 : 30) என்று சாலமோன் ஒரு விநோத மான ஜெபத்தை செய்கிறான். ஆலயமானது ஜனங்களின் ஜெபங் களுக்கு பதில் கொடுக்கிறதும் அவர்களை மன்னிக்கிற இடமுமாகிறது என்று 33ம் வசனத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேலர் சத்ருவோடு போரிடும் போது சத்துருவின் பிடியிலிருந்து விடுவிக்கும் ஒரே இடம் இந்த ஆலயமே. தேவனுடைய நாமத்தை அறிக்கையிட்டு மனந் திரும்பி, ஜெபித்து விண்ணப்பம் பண்ணி தங்களுடைய பாவங்களை அறிக்கையிடுவார்களாகில் சத்ருவை ஜெயிக்க முடியும், பஞ்ச நாட் களிலும் கொள்ளை நோய்களிலும் எல்லாவிதமான துன்ப வேளை யிலும் வியாதிகளிலும் தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்

ஜனமாகிய இஸ்ரவேலர் ஜெபத்தை மாத்திரமல்ல புற ஜாதிகளின் ஜெபங்களையும் கேட்கிறவர். அப்படிக் கொத்த சாலமோனின் ஜெபத்தை கீழே வாசியுங்கள். ''உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அன்னிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும் உமது பலத்த கரத்தையும் உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார் களே. அப்படிக் கொத்த அந்நிய ஜாதியாயினும் உமது நாமத்தி னிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம் பண்ணினால் உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு பூமியின் ஜனங்களெல்லாரும் உம் முடையஜனமாகிய இஸ்ரவேலைப் போல உமக்குப் பயப்படும்படிக்கும் நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உமது நாமம் தரிக்கபட்டதென்று அறியத்தக்கதாக அந்த அந்நிய ஜாதியான உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக'' (41-43) என்று சாலமோன் ஜெபித்தான்.

சாலமோன் தன்னுடைய விண்ணப்பத்தை முடித்த பின்பு தன்னுடைய ஜனங்களை ஆசீர்வதித்தான். ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு பலிகளை செலுத்தி பண்டிகையைக் கொண்டாடினார்கள். எல்லாம் முடிந்த பின்பு தேவன் சாலமோனேடே பேசினார். அவனுடைய ஜெபம் தேவனுடைய பார்வைக்கு அருமை யாயிருந்தது என்பதை I இராஜா 9 : 3ல் வாசிக்கிறோம். ''கர்த்தர் அவனை நோக்கி நீ என் சமூகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன். நீ கட்டின இந்த ஆலயத்தில் அதை பரிசுத்தமாக்கினேன். என் கண்களும் என் இருதயமும் எந் நாளும் அங்கேயிருக்கும்'' என்றும் ''என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தை கொடுப்பேன். இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு என் கண்கள் திறந்தவைகளும் என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்'' என்றார். (II நாளா 7 : 14, 15)

சாலமோன் ஜெபம் பண்ணி முடிக்கிறபோது ''அக்கினி வானத் திலிருந்து இறங்கி சர்வாங்க தகன பலியையும் மற்ற பலிகளையும் பட்சித்தது. கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினபடியினால் ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசிக்க கூடாதிருந்தது.

அக்கினி இறங்குகிறதையும் கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கண்டபோது தளவரிசை மட்டும் தரையிலே முகங்குப்புற குனிந்து பணிந்து கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி அவரைத் துதித்தார்கள்'' (II நாளா7:1-3) எருசலேமில் இருக்கிறதான ஆலயம் சாதாரண கட்டிடம் அல்ல என்பதை இப்பொழுது புரிந்திருப் பீர்கள் என்று நம்புகிறேன். தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் புறஜாதிக்கும் தன்னை விசேவிதமாக வெளிப்படுத்துகிற இடம் இதுவே. தேவனுடைய மகிமையும் பிரசன்னமும் காணப்படும் இடம் இதுவே. இதே இடத்தில் தேவன் நம் ஜெபங்களுக்கு பதில் கொடுத்து, தேவைகளை சந்தித்தது, பிரச்சனைகளுக்கு பரிகாரியாயிருந்து, பாவங்களை மன்னித்து வியாதி சுகமாக்க விரும்புகிறார் என்றால் இது மிகவும் ஆச்சரியமல்லவா. இந்த பூலோகத்திலே தேவன் தன்னை முற்றிலும் வெளிப்படுத்துகிற இடத்தை நாம் எங்கே கண்டு கொள்ள முடியும்? என்பதே மிகப்பெரும் கேள்வி. நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற இடம் எங்கே? பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் பரிகாரத்தை கொடுக்கிற இடம் எது? பாவத்தை மன்னித்து வியாதிக்கு பாரிகாரம் அளிக்கும் இடம் எங்கே? எருசலேமிலுள்ள தேவாலயம் இனி அங்கே காணப்படுவதில்லை. அப்படியானால் இன்று தேவனை எங்கே சந்திக்கலாம்? இந்த கேள்விகளுக்கெல்லாம் இயேசு கிறிஸ்து வினால் பதில் சொல்ல முடியும். யோவான் 2:13-22ல் என்ன எழுதப்படிருக்கிறது என்று நாம் வாசிப்போம் இயேசு தன்னுடைய வாழ்க்கையில் அதிக நேரத்தை எருசலேம் தேவாலயந்திலேயே செலவிட்டார். அப்படியிருந்தும் எருசலேம் தேவாலயத்திற்குள் நுழையும் போதெல்லாம் அவருடைய உள்ளம் ஒருவித கவலையினால் நிரப்பப்பட்டது. (17ம் வசனம்) தேவனுடைய மகிமையினால் நிரப் பப்பட்ட அந்த ஆலயம், ஜெபவீடாகக் கட்டப்பட்ட அந்த இடம் (மத் 21 : 13) ஜெபத்திற்கு பதிலளிக்கிற அந்த இடம், பிரச்சினை களுக்கும், தேவைகளுக்கும் பரிகாரமளிக்கும் அந்த இடம், பாவங்களை மன்னித்த இடம், வியாதிகளை சுகமாக்குகிற அந்த இடம் இப்பொழுது கள்ளர் குகையாகி விட்டது. இப்பொழுது அந்த இடம் மிகுந்த பாவம் நிறைந்த இடமாயும், அவிசுவாசம் நிறைந்த இடமாயும் வியாபார ஸ்தலமாயும் மாறிற்று (மத் 21 : 13) இவைகளைப் பார்த்த இயேசு மிகுந்த விசன்மடைந்தார். அவரால் அவைகளை சகித்துக்கொள்ள முடியவில்லை. ''அவர் தம்முடைய பரிசுத்தத்தினிமித்தம் கோப மடைந்து கயிற்றினால் ஒரு சவுக்கையை உண்டு பண்ணி ஆடுகள் மாடுகள், புறாக்கள் விற்கிறவர்களையும் காசுக்காரர்களையும் தேவா லயத்திற்கு புறப்பே துரத்திவிட்டு காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி பலகைகளைக் கவிழ்த்துப் போட்டார்.

அவர்கள் தேவாலயத்தைவிட்டு கடந்து சென்றதும் தேவாலயம் சுத்தப்படுத்தபட்டது. அதன்பின்பு ஆச்சரியமான ஒரு சம்பவம் நடந்தது

மத் 21 : 4ல் சொல்லப்பட்டபோது அந்த ஆலயத்தில் அன்று முதல் கீழே கூறப்பட்ட கிரியைகள் நடக்க ஆரம்பித்தது. குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள். அவர் அவர்களை சொஸ்தமாக்கினார். இயேசு தேவாலயத்திலே பிரவேசித்தவுடனே தேவனுடைய மகிமையின் பிரசன்னம் தேவாலயத்திலே மறுபடியும் காணப்பட்டது. கொலா 1 : 19ல் ''சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருந்தது'' என்று எழுதப்பட்டிருக்கிறது, தேவனுடைய வல்லமை மறுபடியுமாக அந்த ஆலயத்திலே காணப்பட்டபோது ஜனங்கள் தங்களுடைய தேவைகளிலிருந்தும் பாவத்திலிருந்தும் வியாதியிலிருந்தும் விடுதலை பெற மறுபடியுமாக ஆலயத்திற்கு வருகிறார்கள். இந்த வேத பகுதியை நான் வாசிக்கும் போதெல்லாம் தேவன் என்னுடை இருதயத்தை தமது அன்பினால் நிரப்புகிறார். உண்மையாய் தன்னை தியாகம் பண்ணுகிற ஜனங்களுக்கும் பெயரளவில் ஆலயத்தை ஜனத்திரளினால் நிரப்பி அவர்களுடைய ஆத்துமீக, சரீர தேவைகளை சந்திக்காத மதத் தலைவர்களுக்கும் எத்தனை பெரிய வித்தியாசம். எருசலேமிலுள்ள தேவாலயம் எந்த நோக்கத்திற்காக கட்டப்பட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்.

இயேசு சஞ்சரித்த நாட்களில் இரண்டு தேவாலயங்கள் இருந்தன என்பதை யூதர்கள் அறிந்து கொள்ளவில்லை. நான் எந்த தேவாலயத்தை குறிப்பிடுகிறேன் என்பதைக் குறித்து நீங்களும் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம் யோ 1:14ல் அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் தனக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம்.'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தை மாம்சமாகி என்றால் இயேசுவைக் குறித்தே சொல்லப்பட்டிருக்கிறது. யோவான் 1:1ல் ''ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.'' அப்படியானால் இயேசு கிறிஸ்து பிறக்கும் முன்பு பிதாவாயிருந்தார். ஒரே தேவன். ஆனால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று விதமாக செயல்படுகிறார்கள். அதன் பின்பு என்ன நடந்தது என்பதை நன்றாக கவனியுங்கள் ''அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்'' என்று வேதம் சொல்லுகிறது. வாசம்பண்ணினார் என்பதை நான் ஏன் கோடிட்டு காட்டுகிறேன் என்றால் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதான வேதாகமத்தில் இந்த பதத்திற்கு ஒரு நல்ல அர்த்தம் உண்டு. (Skenoo) ஸ்கேனோ என்ற கிரேக்க பதம் இதில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்கேனோ என்றால் 'கூடாரத்திலே வாசம்பண்ணுகிறார்' என்று அர்த்தமாம். அப்படியானால் வேதத்திலே எழுதப்பட்டிருக்கிறதின் அர்த்தம் என்னவென்றால் அந்த வார்த்தை மாம்சமாகி நம்முடைய

மத்தியிலே கூடாரமாகிய நமக்குள் வாசம்பண்ணுகிறார். என்று கூறுவது உங்களுக்கு நன்றாக விளங்கிவிட்டதா? மிகத் தெளிவாகச் சொல்லுவோமானால் தேவன் வனாந்திரத்தில் ஜனங்களின் நடுவே உள்ள ஆசாரிப்பு கூடாரத்தில் எவ்விதம் வாசம் பண்ணினாரோ அதுபோலவே இயேசு பிறந்தபோது ஜனங்களின் நடுவே ஆசாரிப்பு கூடாரமாகிய இயேசுவின் சரீரத்திலே வாசம் செய்தார். இயேசுவின் சரீரமானது தேவ ஆவியானவர் என்றும்ஆலயம் தங்கும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இயேசு பூலோகத்திலே சஞ்சரித்த நாட்களில் இரண்டு ஆலயங்கள் இருந்தன என்ற கருத்தை நன்றாக புரிந்திருப்பீர்கள். முதலாவதாக எருசலேமிலுள்ள தேவாலயம் பெயரளவில் இருந்தது. ஆனால் அதன்மூலம் ஒரு கிரியையும் நடைபெற வில்லை. இயேசுகிறிஸ்து தாமே இரண்டாவது ஆலயமாக செயல் பட்டார். தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட கிறிஸ்துவாகிய ஆலயத்தில் நூற்று நூறு சதவிகிதம் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. கிறிஸ்துவாகிய தேவ ஆலயத்திலே காணப்பட்டதான தேவ வல்லமையினால் ஆயிரக்கணக்கான ஜனங்களின் தேவைகள் சந்திக்கப் பட்டது. பாவங்கள் மன்னிக்கப்பட்டது. அந்த ஆலயத்தை தொட்ட ஜனங்கள் சொஸ்தமானார்கள் (மத் 14:36, லூக்கா 6:19).

இதுவரை நாம் அநேக காரியங்களைக் குறித்து படித்தோம். இன்னும் நமக்கு ஒரு கேள்வி உண்டு. இந்த தேவனுடைய வல்ல மையை நாம் எங்கு அனுபவிப்பது? என்பதே அந்த கேள்வி. எருசலேமிலுள்ள தேவாலயம் பல வருடங்களுக்கு முன்பு அழிக்கப் பட்டாயிற்று. இயேசுவின் மனுஷீக சஞ்சாரமும் கடந்து போயிற்று. அப்படியானால் இன்று தேவனுடைய வல்லமை வாசம் பண்ணும் இடம் எங்கே? இந்த கேள்விக்கு ஒரு நல்ல பதிலை கீழே காண் பீர்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்தை சவுக்கினாலான சாட்டை யினால் சுமத்தப்படுத்தின பின்பு யூதர்கள் இயேசுவிடம் வந்து இனவகளை யாருடைய அதிகாரத்தினால் செய்தாய் என்று கேட்டார்கள். அவர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒரு பதிலை இயேசு அவர்களுக்கு கூறினார். (யோ. 2 : 19) ''இந்த தேவா லயத்தை இடித்துப் போடுங்கள் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவேன்'' என்று இயேசு அவர்களுக்கு கூறினார். இயேசு சொன்ன தேவாலயத்தை குறித்ததான அறிவு அவர்களிடம் காணப் படவில்லை. காரணம் தேவாலயத்தை கட்டி முடிக்க 46 வருடங்க ளானது ஆனால் இவரோ மூன்று நாளைக்குள் கட்டி முடிப்பேன் என்று கூறுகிறாரே, அது எவ்விதம் முடியும் என்று யூதர்கள் நினைத்தனர் (யோ 2 : 20) இந்த கேள்விக்கான பதிலை நான் உங்களுக்கு கூறுமுன்பு பழைய ஏற்பாட்டிலுள்ள யூத தீர்க்கதரிசி களால் கூறப்பட்டதான முக்கியமான தீர்க்கதரிசனத்திற்கு உங்களை நான் அழைத்துச் செல்ல விரும்புகிறேன்

தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தை கட்ட வாஞ்சித்தான் என்பதை நாத்தான் கேள்விப்பட்டான். நாத்தான் தாவீதின் திட்டத்தை ஒப்புக் கொண்டான். ஆனால் அன்று இராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, ''நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி, கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் தான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ கட்டு வாயோ? உன் நாட்கள் நிறைவேறி நீ உன் பிதாக்களோடே நித்திரைப் பண்ணும் போது நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப் பண்ணி அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்'', என்று கூறினார். II சாமு 7 : 5, 12,13ல் சாலமோனின் பிறப்பைக் குறித்து வேதம் தெளிவாய் கூறுகிறது (I நாளா 22 : 9). முடிவிலே தாவீதின் குமாரனாகிய சாலமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்தான் ''உன் இராஜ்யத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன் என்று நாத்தான் கூறின தீர்க்கதரிசனம் இயற்கைக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகும் (II சாமு 7 : 13) அவனுடைய சிங்காசனம் எப்பொழுதும் நிலைத்திருக்கும் என்பதே அதன் அர்த்தம். ஆனால் உன்னுடைய சிம்மாசனம் என்றைக்கும் நிற்கும் என்று சாலமோனைப் பற்றி கூறப்படவில்லை. தேவன் நாத்தானின் வாயிலே இயற்கைக்கும் அப்பாற்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளை போடுகிறார் (14ம் வசனம்) ''நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன். அவன் எனக்கு குமாரனாயிருப்பான்'' என்கிறான். தேவ ஆலயத்தைத் கட்டப் போகிற தாவீதின் குமாரன் தாவீதுக்கு மாத்திரமல்ல தேவனுக்கும் குமாரனாயிருக்கிறான் ''நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன் அவன் எனக்கு குமாரனாயிருப்பான்'' இரட்டிப்பான நிறைவேறுதலின் தீர்க்கதரிசனம். இரட்டிப்பான தீர்க்கதரிசனம் இரண்டு வழிகளில் நிறைவேறுகிறது முதல் பகுதி தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட சில நாட்களிலே நிறைவேறுகிறது இரண்டாவது பகுதி பல நாட்களுக்குப் பின்பு நிறைவேறுகிறது. தாவீதின் குமாரனாகிய சாலமோனின் பிறப்பைக் குறித்தும் அவன் கட்டப் போகிறதான ஆலயத்தைக் குறித்தும் நாத்தான் தீர்க்க தரிசனமாக உரைத்தான். அதைப் போல அசையாத சிங்காசனத்தை உடைய இன்னுமொரு தாவீதின் குமாரனைப் பற்றி நாத்தான் தீர்க்கதரிசனமாக உரைக்கிறான். நாத்தான் இரண்டாவதாக கூறின தாவீதின் குமாரன் யார் என்பது தான் பெரிய கேள்வி.

மேற்கூறப்பட்ட கேள்விக்கான பதில் லூக்கா 1 : 32, 33-ல் கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து அறிவிக்கும்படி கலிலேயாவிலுள்ள நாசரேத்திற்கு காபிரியேல் என்ற தூதன் அனுப்

பப்பட்டான். தேவ தூதன் கூறின வார்த்தையின்படியே அந்த குழந்தை வெளிப்பட்டது அந்த குழந்தை மிகவும் விசேஷித்த குழந்தையாயிருந்தது. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமான வருடைய குமாரன் எனப்படுவர். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பான். நாத்தான் உரைத்த தீர்க்கதரிசனத்தின் நேரடியான நிறைவே இயேசுவின் பிறப்பு. இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்றும் பிதாவின் குமாரன் என்றும் அழைக்கப்பட்டபடியினால் அவருடைய சிங்காசனம் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்று தூதனால் உரைக்கப்பட்டது. ஆகவே இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரனென்றும் பிதாவின் குமாரனென்றும் அழைக்கப்பட்டார். காரணம் இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தபடியினால் அவர் என்றென்றும் ஜீவிக்கிறவராயிருக்கிறார். அவருடைய ராஜ்யத்தின் சிங்காசனம் என்றென்றும் நிலைத்திருக்கும்.

நாத்தான் உரைத்த தீர்க்கதரிசனம் சாலமோனின் பிறப்பை மாத்திரமல்ல என்றென்றும் நிலைத்திற்கும் சிங்காசனத்தை உடைய தாவீதின் குமாரனாகிய இயேசுவின் பிறப்பைக் குறித்தும் முன்னறிவித்தது. தாவீதின் குமாரனாகிய இயேசு என்றைக்கும் இராஜ்யத்தை அரசாளுவது மாத்திரமல்ல தேவனுடைய நாமத்திற்காய் ஒரு ஆலயத்தையும் கட்டுவார் (II சாமு 7:13) தேவனுக்காக நிரந்தரமான ஒரு ஆலயத்தை கட்டும்படியாக இயேசு பரலோகத்தை துறந்து பூலோகத்திற்கு வந்தார் (யோ 2:19) ஆகவேதான், ''இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் அதை மூன்று நாட்களிலே கட்டி எழுப்புவேன்'' என்று யூதர்களைப் பார்த்து இயேசு கூறினார். தான் பூலோகத்திற்கு வந்ததான நோக்கத்தை இயேசு திட்டமாய் அறிந்து கொண்டார். பல நாட்களாக எருசலேமிலுள்ள தேவாலயத்தின் வேலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. ஆகவே நாத்தான் உரைத்த தீர்க்கதரிசனத்தின்படி புதிய ஆலயத்தை கட்டும்படியாக இயேசு பூலோகத்திற்கு வந்தார். அந்த ஆலயம் தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டதாயும் தேவையுள்ளவர்களின் தேவைகள் சந்திக்கப்படும் இடமாயும் பாவிகளின் பாவங்கள் மன்னிக்கப்படும் இடமாயும் வியாதியஸ்தர்கள் வியாதியிலிருந்து விடுதலையடையும் இடமாயும் இருந்தது.

இயேசு கட்டப்போகிறதான ஆலயம் ஆசாரிப்புக் கூடாரத்தைப் போலவும் எருசலேமிலுள்ள ஆலயத்தைப் போலவும் பூலோகில் உள்ள ஜனங்கள் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய ஜீவனுள்ள தேவனை சந்திக்கும் இடமாயும் இருந்தது. ஜனங்களின் ஜெபத்திற்கு பதிலளிக்கும் ஒரு ஜெப வீடாயும் திகழ்ந்தது. எருசலேமிலுள்ள தேவலாயத்திற்கும் இயேசு கட்டுகிறதான ஆலயத்திற்கும் பெருத்த வித்தியாசங்கள் இருந்தது. யோ 2:21 ல் ''அவரோ தன்னுடைய

சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்'' என்று சொல்லப் பட்டிருக்கிறது, எருசலேமிலுள்ள தேவ ஆலயம் பொன்னினாலும், வெள்ளியினாலும், மரத்தினாலும், கற்களினாலும் கட்டப்பட்டது. ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஜீவனுள்ள கற்களினாலே கட்டு விக்கிறார். இயேசு கிறிஸ்து கட்டப்போகிறதான ஆலயத்திலே அவருடைய சரீரம் முக்கியமான மூலைக்கல்லாகக் காணப்படுகிறது. ''இயேசுதான் மூலைக்கல் என்றும் அந்தக் கல்லின்மேல் மற்ற கற்கள் இசைவாய் இணைக்கப்பட்டு தேவனுக்குரிய பரிசுத்த ஆலயமாய் எழும்புகிறது'' என்றும் எபே 2:20-22ல் வாசிக்கிறோம்.

ஆகவே இயேசு கிறிஸ்து கட்டப்போகிற ஆலயத்திலே அவர்தான் மூலைக் கல்லாயிருக்கிறார். அப்படியானால் புதிய ஆலயம் கட்டுவதற்கான மற்ற கற்கள் யார் யார்? வேதத்திலே இதற்கு தெளிவான பதில் உண்டு. எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அப். பவுல் எழுதுவது ''இயேசுதான் அந்த ஆலயத்தின் மூலைக்கல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டிக் கட்டப்பட்டு இருக்கிறீர்கள்'' என்கிறார். அப்படியானால் ஆலயத்தை கட்டுவதற்காக உபயோகப்படுத்தப்படும் மற்ற கற்கள் இயேசு கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினரே. ''ஜீவனுள்ள கற்களைப் போல் ஆவிக்கேற்ற மாளிகையாக'' (I பேதுரு 2 : 5) என்று பேதுரு கூறுகிறான். இயேசு தேவாலயத்தை கட்டுவதற்கு ஏன் மூன்று நாட்கள் தேவைப்பட்டது என்பது இப்போது நன்றாக தெளிவா கிறது. இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையேயுள்ள நாட்களே அந்த மூன்று நாட்கள். (மாற்கு 8 : 3) நாம் மரித்து விசுவாசத்தினாலே உயிரோடே கூட எழுப்பப்படுகிறோம் என்று மூன்று நாட்களுக்குப் பின்பு அவரோடே கூட நாமும் எழுப்பப் படுகிறோம். (கொலோ 2 : 12) பாவத்திலே இயேசுவோடே கூட மரித்து முற்றுமாய் கழுவப்பட்டவர்களாய் பரிசுத்தமாய் மூன்று நாட் களுக்குப் பின்பு கிறிஸ்துவோடு கூட எழுப்பப்படுகிறோம், 'தேவ னுடைய ஆலயம் பரிசுத்தமுள்ளது' என்று I கொரி 3 : 17 ல் எழுதப் பட்டிருக்கிறது. அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் நாம் இணைக்கப்பட்ட பின்பு முற்றிலும் கழுவப்பட்டு பரிசுத்த மடைகிறோம். அதன் பின்பு தேவ ஆலயம் கட்டும்படியான ஜீவ னுள்ள கற்களாக தேவன் நம்மை உபயோகப்படுத்த முடியும். நாம் அவரோடே கூட உயிர்த்தெழுந்த பின்பே ஜீவனுள்ள கற்களாக உபயோகப்படுத்தப்பட முடியும் ஏனெனில் அதற்கு முன்பு அக்கிரமங் களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்தோம் (எபே 2 : 1) பாவங்களிலும் அக்கிரமங்களிலும் இன்னும் மரித்தவர்களாயிருந்தால் நாம் ஆலயம் கட்டப்பட பிரயோஜனமற்றவர்களாகிறோம்.

தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக தம்முடைய மரணத்

தினாலும் உயிர்த்தெழுதலினாலும் மனிதன் தேவனை சந்திக்கும்படி யாக ஒரு புதிய ஆலயத்தை எவ்விதம் கட்டினார் என்பதை தொடர்ந்து சிந்திப்போம். சாலமோன் கட்டினதான ஆலயம் மரத்தினாலும் கற்களினாலும் கட்டப்பட்ட தற்காலிகமான ஆலயமாயிருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து கட்டிக்கொண்டிருக்கிற புதிய ஆலயமோ நித்திய மான ஆலயமாயும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் என்றென்றைக்கும் நிலை நிற்கிறதுமான ஆலயமாயிருக்கிறது. இந்த ஆலயமானது அழிந்து போகிறதான பொருட்களினால் கட்டப்படாமல் மரித்து உயிர்த்தெழுந்த ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஆண்களும் பெண்களுமான ஜீவனுள்ள கற்களினாலே கட்டப்படுகிறது. இந்த ஆலயத்தின் மூலைக்கல் கிறிஸ்துவே. இப்பொழுது 'நீங்கள் யார்.' என்று உங்களைக் குறித்து அறிந்து கொண்டது எத்தனை ஆச்சரிய மாயிருக்கிறதல்லவா? தேவனுடைய பார்வையில் நீங்கள் சாதாரண மான மனிதர்கள் அல்ல. நீங்கள் தேவனுடைய ஆலயத்தின் ஜீவ னுள்ள கற்களாயிருக்கிறீர்கள். இயேசு கட்டினதான புதிய ஆலயத் தின் வேலைகள் முடிந்த பின்பு ஒரு காரியம் நிறைவேற வேண்டும். அது யாதெனில் ஆசரிப்புக் கூடாரத்தைப் போலவும் சாலமோனின் தேவ ஆலயத்தைப் போலவும் இந்த தேவாலயம் பிரதிஷ்டிக்கப்பட வேண்டும். பெந்தேகோஸ்தே பண்டிகையின் முதலாம் நாள் வந்த போது இயேசு கிறிஸ்துவின் ஆல்யம் மேல்மாடியிலே பிரசன்ன மாயிற்று. பெருங்காற்று அடிக்கிற இடிமுழக்கம் போல் சடுதியாய் வானத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாயிற்று. அக்கினி மயமான நாவுகள் போல் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டது ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைக்ளில் பேசினார்கள் (அப் 2 : 1-4) இந்த பெந்தேகோஸ்தே பண்டிகையின் முதலாம் நாள் தான் புதிதான ஆலயம் பிரதிஷ்டிக்கப் பட்ட நாள். தேவனுடைய மகிமையின் பிரசன்னம் அவர்கள் மத்தி யிலே நிரப்பிற்று இவ்விதமாக ஜனங்களின் நடுவே தாம் வாசம் பண்ணும்படியாக தேவன் ஒரு இடத்தை தெரிந்து கொண்டார். ஜீவ னுள்ள கற்களினால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தில் தேவன் நம் முடைய ஜெபத்திற்கு பதிலளிக்க வல்லவராயிருக்கிறார். இந்த ஆலயத்திலே ஜனங்களின் தேவைகளை சந்திக்கவும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணவும், பாவத்தை மன்னிக் கவும், வியாதியை சுகமாக்கவும் தேவன் விரும்புகிறார். அருமை யான சகோதரனே சகோதரியே 'நீங்கள் யார்' என்று ஏற்கனவே அறிந்து கொண்டீர்களா? நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கி றீர்கள் என்றும் தேவன் தங்கும் வாசஸ்தலமாயிருக்கிறீர்கள் என்றும் அறியீர்களா? உங்கள் மூலமாய் தேவன் தன்னை இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்த விரும்புகிறார். எருசலேம் தேவாலயம் இப்பொழுது காணப்படவில்லை. அது போல இயேசுவும் மனித சஞ்சாரியாய் காணப்

படவுமில்லை. அப்படியானால் இன்று மனிதருடைய தேவைகளை சந்திக்கும்படி தேவன் தெரிந்து கொள்ளும் இடம்தான் எது? இதோ இதற்கான பதிலை நீங்கள் கீழே காணலாம். பெந்தேகோஸ்தே பண்டிகையின் முதல் நாளிலிருந்தே தேவன் தம்முடைய ஆலயமாகிய சபையிலே வாசம்பண்ணுகிறார். இந்த இடத்தில்தான் தேவன் ஜனங்களுடைய தேவைகளை சந்திக்கும்படியாயும், பாவங்களை மன்னிக்கவும் வியாதியை சுகமாக்கவும் விரும்புகிறார். நீங்களே அந்த ஆலயம். நீங்கள் ஏன் சாதாரணமானவர்கள் அல்ல என்பதை அறிந்து கொண்டீர்களா? நீங்களே பரிசுத்த ஆலயம் வாசம் பண்ணும் ஆலயமாயிருக்கிறீர்கள். தேவனுடைய வல்லமையையும் கனத்தையும், அன்பையும், மகிமையையும் பிற ஜனங்களுக்கு வெளிப்படுத்தும் வாய்க்காலாக உங்களை தேவன் உபயோகப்படுத்த விரும்புகிறார்.

அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக செயல்படுவதில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடே சொல்லுகிறேன். வேதவசனத்தின்படி சபையானது ஒரு ஜெப வீடாய் செயல்பட வேண்டும். தேவனுடைய மகிமையானது எல்லா இடங்களிலும் வெளிப்படும் ஒரு ஸ்தலமாக திகழ வேண்டும். சபை ஊழியங்களின் மூலம் தேவன் பாவிகளை இரட்சிக்கவும், வியாதியஸ்தர்களையும் சுகமாக்கவும் பிசாசுகளை துரத்தவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் ஜெபங்களுக்கு பதிலளிக்கவும் தேவன் விரும்புகிறார். எருசலேமிலுள்ள சபையோ இயேசுவின் எதிர்பார்ப்புக்கு மாறாக கள்ளர் குகையாயிற்று இந்த சபையைக் குறித்து இயேசுவுக்கு இருந்த துக்கத்தை நான் இப்பொழுது உணர்கிறேன். அவர்கள் தாங்கள் தேவனுடைய ஜனம் என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் தேவனுடைய கரத்தில் உபயோகப்படுத்தப்பட தகுதியற்றவர்களாகினார்கள் ஏனெனில் அவர்களின் இதயம் எருசலேமிலுள்ள ஆலயத்தை போல் இருந்தது. அந்த ஆலயம் தேவ ஆவியினால் நிரப்பப்படுவதற்கு பதில் மனுஷீக நற்பெருமையினால் நிரப்பப்பட்டிருந்தது.

நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? என்பதே நான் உங்களிடத்தில் கேட்கும் ஒரு முக்கியமரன கேள்வியாகும். கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகிய நீங்கள் தேவனுடைய ஆலயமாயுமிருக்கிறீர்கள் அப்படியானால் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறதா? ஆதி சபை நூற்றுக்கு நூறு சதவிகிதம் தேவன் விரும்பினதைப் போல் செயல்பட்டனர். அதுபோல உங்களை சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்காக பெரிய அற்புதங்களை செய்கிற இயற்கைக்கும் அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையை உணருகிறீர்களா? நீங்கள் மனந்திரும்பினதோடு திருப்தி அடைந்து விடாமல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டுமென்றும் தேவன் கூறுகிறார். காரணம் அவருடைய ஆலயமானது இயற்கைக்கும் அப்பாற்பட்ட தெய்வீக வல்லமையினால் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுவோமானால்

நாம் சாத்தானையும் அவனுடைய சர்வ சேனையின் வல்லமை யையும் ஜெயித்து விடலாம் (மத் 3 : 11, 12)

பெந்தேகோஸ்தே பண்டிகையின் முன்பே சீஷர்கள் தேவனுடைய ஆலயமாயிருந்தார்கள். விசுவாசத்தினாலே கிறிஸ்துவோடு மரித்து கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்தபோது அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனிடத்திலிருந்து புதிய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் ஒரே ஒரு காரியத்தில் தவறி விட்டார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயமாயிருந்தார்கள். ஆனால் அந்த ஆலயமோ சாலமோனின் தேவாலயம் பிரதிஷ்டிக்கப் படும் முன்பு அதிலே வெற்றிடம் காணப்பட்டது போல அவை இருந்தது. பெந்தேகோஸ்தே பண்டிகையின் முதல் நாள் வந்த போது அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அதன் பின்பு ஆலயத்தில் பலத்த கிரியைகள் நடைபெற்றது. பெந்தே கோஸ்தே பண்டிகையின் முன்பு சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்ததினால் பூட்டப்பட்ட அறைக்குள்ளே பதுங்கி இருந்தனர். (யோ 20 : 19) தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்கிலும் பயத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் தங்கள் வாழ்க்கையில் பிடிதளம் இல்லாதிருந்தனர். ஆனால் பெந்தேகோஸ்தே பண்டிகையின் முதல்நாள் வந்தபோது சகலமும் மாறிற்று. ஏனெனில் அவர்களிடம் காணப்பட்ட வெற்றிடமானது இயற்கைக்கும் அப்பாற் பட்ட ஆவியினாலே நிரப்பப்பட்டது. அதன் விளைவு என்னவென்றால் சபையானது உடனே கிரியை செய்ய ஆரம்பித்தது. சீஷர்கள் பேசின அந்நிய பாஷைகளினிமித்தம், வைராக்கியமுள்ள மூவாயிரம் யூதர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். சீஷர்களின் மூலம் பெரிய அதிசயங்களும் அற்புதங்களும் நடைபெற்றது. வியாதியஸ்தர் குணமடைந்தனர். பிசாசுகள் துரத்தப்பட்டன. மரித்தவர் உயிரோடே எழும்பினார்கள், தினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேவனை விசுவாசித்தார்கள்.

சமாரியாவிலும் இதே காரியம் நடந்தது. சுவிசேஷகனாகிய பிலிப்புவின் பிரசங்கத்தின் மூலம் அநேகர் தேவனை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். (அப் 8 : 4-13) விசுவாசத் தினாலும், மனந்திரும்புதலினாலும் சமாரியர்கள் தேவன் வாசம் பண்ணும் தேவ ஆலயமானார்கள். அப் 8:16ல் வாசிக்கிறது போல அவர்கள் வெற்றிடமான தேவ ஆலயமாகவே இருந்தார்கள். இன்றும் அநேகர் மனந்திரும்பி சமாரியரைப் போல இருக்கிறார்கள். மறுபடியும் பிறந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் வெற்றிடமான ஆலயமாக காணப்படுகிறார்கள். காரணம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையை மாற்றும்படியாக அப்போஸ்தலர்கள் நல்ல விடையை வைத்திருந்தனர் (அப் 8:17) ''அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது

அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள்'' அன்று முதல் சமாரியா விலுள்ள ஆலயம் பரிசுத்த ஆவியின் மகிமையினாலும் நிரப்பப்பட்டது இதேப் போல எபேசு பட்டணத்திலும் நடந்தது. (அப் 19:1-6) அப். பவுல் எபேசு பட்டணத்திற்கு சென்றபோது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாத ஒரு கூட்ட கிறிஸ்தவர்களைச் சந்தித்தான் ஆகவே அவர்கள் வெற்றிடமுள்ள ஆலயமாகக் காணப்பட்டார்கள். ஆனால் அப். பவுல் தன்னுடைய கைகளை அவர்கள் மேல் வைத்தபோது அந்த ஆலயங்கள தேவனுடைய மகிமையினால் நிரப்பப்பட்டது. அவர்கள் புதிய பாஷைகளிலே பேசித் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் (அப் 19:6 7)

ஆம், தேவனுடைய இரத்தத்தினால் கலுவப்பட்ட அன்றே நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களிடம் கேட்கும் கேள்வி, நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டிருக்கிறீர்களா? தேவனுடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட நீங்கள் பரலோகம் போய்விடலாம் ஆனால் இந்த பூலோகத்திலே தேவனுடைய வல்லமை விளங்குபடியான வாய்க்காலாக தேவன் உங்களை உபயோகிக்க முடியாது. நீங்கள் பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிற சபையின் அங்கத்தினராய் இருப்பீர்களானால் இவைகளைப் பற்றி உங்கள் போதகரிடத்தில் திட்டமாய் கேளுங்கள். தேவனுடைய ஆலயமாயிருக்கிற நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டியது அதிக அவசியம் (எபே 5:18)

அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட வர்களாயிறார்கள். ஆனால் தாங்கள் யார் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை அப்படிப்பட்டவர்களுக்கு இந்த புத்தகம் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். இவைகளை வாசிக்கும் போது இதில் எழுதப் பட்ட வார்த்தைகள் அவர்களை அதிகமாக ஊக்குவிக்கும், அவர்கள் யார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளுவார்கள் அருமையான சகோதர சகோதரியே முன்னே நான் உங்களுக்குச் சொன்னதுபோல நீங்கள் வீதியிலே நடந்து செல்லும்போது தேவனுடைய சரீரம் வீதியிலே நடந்து செல்லுகிறது. ஏனெனில் நீங்கள் தேவனுடைய சரீரமாயிருக்கிறீர்கள். நீங்கள் வீதியிலே நடந்து செல்லும் போது தேவனுடைய ஆலயம் வீதியிலே காணப்படுகிறது என்று நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் வீடுகளிலே நுழையும்போது பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் வீடுகளினுள் நுழைகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் நீங்கள் எங்கெங்கே சொல்லுகிறீர் களோ அங்கெல்லாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவை சுமந்து செல்லுகிறீர்கள் இயேசுவைப் போல் நீங்களும் காணப்படுகிறீர்கள் என்பதை உணருகிறீர்கள். இயேசு எங்கே சென்றாரோ அங்கே பரிசுத்த ஆவியின் ஆலயமாய் திகழ்ந்தார். தேவனுடைய பிரசன்னம் அவரோடு கூட இருந்தது. தியாகமுள்ள

வாழ்க்கையே இயேசு வாழ்ந்தார். அவர் 'தன்னை யார்' என்று நன்கு அறிந்திருந்தார். வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய தேவன் தம்மில் வாசம் பண்ணுகிறார் என்ற உணர்வுள்ளவராயிருந்தார் தம்முடைய சுயமாய் அவர் ஒரு போதும் பேசினதில்லை அவர் சுயமாய் ஒரு போதும் கிரியை செய்ததுமில்லை. அவருக்குள் வாசமாயிருக்கிற பிதா தாமே கிரியை செய்தார் (யோ 14 : 10)

ஆம் நான் என்னை இயேசுவோடுகூட ஒப்பிட சற்றும் தகுதியுள்ளவன் அல்ல என்று நீங்கள் சொல்லலாம். பரிசுத்த ஆலயமாகவே இயேசு திகழ்ந்தார். அப்படியானால் 'நீங்கள் யார்'? ''தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்'' என்று பவுல் கூறுகிறான் (I கொரி 3 : 17) தேவனுடைய பார்வையிலே நாம் இயேசுவைப்போல பரிசுத்தமும் பிழையற்றவர்களுமாயிருக்கிறோம். ''அவருடைய குமாரானாகிய இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்'' (I யோ 1 : 7) அவருடைய இரத்தத்தினாலே நமக்கு முழு விடுதலை கிடைக்கிறது. ஆகவேதான் அப் பவுல் பிலிப்பியருக்கு தன்னுடைய நிருபத்தை எழுதும்போது பரிசுத்தவான்கள் அனைவருக்கும் எழுதும் நிருபம் என்று மிக தைரியமாக அவர்களை சுட்டிக்காட்டி எழுதுகிறான் (பிலி I : I) தேவனுடைய வல்லமையை நாம் ஒருபோதும் தவறாக மதிப்பிட வேண்டாம். ஏனெனில் இயேசுவின் இரத்தத்தினால் நீங்கள் இயேசுவைப்போல் பரிசுத்த ஆலயமானீர்கள்.

இரண்டாவதாக இயேசு கிறிஸ்து தாம் செய்கிற யாவையும் தன்னுடைய சுயசித்தின்படி செய்ததில்லை. அவரில் வாசம்பண்ணுகிற பிதாவினாலே எல்லாவற்றையும் செய்தார் (யோ 14:10) தேவனுடைய ஊழியத்தின் பின்னணியில் இருக்கிற ஒரு பெரிய இரகசியம் இதுதான் (எபி I : I) அவர் மூலமாய் பிதா பேசுகிறார் அவரிலே பிதா வாசம் பண்ணுகிறார். ஆகவே இயேசுபெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தார். உங்களுடைய ஆன்மீக கண்கள் திறக்கப்படுமானால் நீங்கள் எப்பொழுதும் உள்ளவர்கள் போல் ஜீவிப்பதில்லை தேவன் வெளிப்படுத்தினதான வெளிப்படுத்தலை பெற்றுக் கொள்ள நீங்கள் ஆயத்தம்தானா? உங்களுடைய உள்ளத்தின் ஆசனத்திலே பரிசுத்த ஆவியானவர் உட்கார்ந்து உங்களுக்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்தும் காரியத்தை நீங்கள் அறிந்து கொள்ளும்படியாக உங்கள் இருதயத்தை அவருக்கு திறவுங்கள். அதற்கு நீங்கள் ஆயத்தம்தானா? அப்படியானால் யோவான் 14 : 23ஐ என்னோடு கூட வாசியுங்கள். ''இயேசு அவனுக்கு பிரதியுத்தமாக.'' ஒருவன் என்னில் அப்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்'' இதிலே எழுதப்பட்டவைகள் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? பிதாவாகிய

இயேசுவை நீங்கள் நேசித்தால் பிதாவும் குமாரனும் உங்களோடே வாசம் பண்ணுவார்கள். ஆவிக்குரிய உலகத்திலே இயேசு எவ்வாறு ஜீவித்தாரோ அது போலநீங்களும் ஜீவிக்கிறீர்களென்றான் அது தேவனுடைய சுத்த கிருபையே. இயேசுவைப் போல நீங்களும் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறீர்கள். இயேசுவைப்போல பிதாவும் உங்களில் வாசமாயிருக்கிறார், காரணம் நீங்கள் ''பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.'' (கொலோ 2 : 10) என்று வேதம் சொல்லுகிறது.

''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்று இயேசு சொன்னது நமக்கு ஆச்சரியமாயிருக்கவில்லையா? (யோ 14:12)

நாம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாயிருக்கிறபடியனால் பிதா இயேசுவில் வாசம்பண்ணினது போல பிதாவின் ஊழியத்தை நிறைவேற்றின இயேசுவும் நம்மில் வாசம் செய்கிறார். நான் இப்பொழுது உங்களுக்கு விளக்கிச் சொன்ன இரகசியத்தைப் புரிந்து கொண்டீர்களா? இனி சாத்தான் உங்கள் மேல் அதிக கோபமுடையவனாயிருப்பான். நான் எழுதின காரியங்களைக் குறித்து எத்தனை பேர் கண்டனம் தெரிவிக்கிறார்களோ அவர்கள் கண்டனம் தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும் நான் இங்கே எழுதின யாவும் வேத வசன ஆதாரத்தோடு தேவ வெளிப்பாட்டோடும் எழுதுகிறேன். அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களைச் சுற்றிலும் இருக்கிறதான ஜனங்களாலும் சாத்தானாலும் தவறான வழியிலே நீங்கள் நடத்தப்பட வேண்டாம். நீங்கள், தம்முடைய சகலவிதமான மகிமையினாலும் வல்லமையினாலும், மகத்துவத்தினாலும் நிரப்பப்பட்டவராய் உங்களில் வாசமாயிருக்கிற தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். இந்த ஆலயமானது உங்களை சுற்றிலுமிருக்கிற பாவிகளை விடுதலை பண்ணி சாத்தானுடைய வல்லமையிலிருந்து அவர்களை விடுவிக்க வல்லமையுள்ளது. ஆகவே நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அன்றியும் பிதாவின் பிரசன்னமும் தேவனுடைய குமாரனும் பரிசுத்த ஆவியும், நீங்கள் எங்கெங்கே செல்லுகிறீர்களோ அங்கெல்லாம் உங்களோடு கூட வருகிறார்கள் ஏனெனில் நீங்கள் தேவன் தங்கும் வாசஸ்தலமாயிருக்கிறீர்கள். இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பதாக கூறினதுபோல நாம் தேவன் தங்கும் வாசஸ்தலமாயிருக்கிறோம். (மத் 3:17)

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் தங்கும் பரிசுத்த ஆலயம் என்று நீங்கள் அறிந்து கொள்வீர்களானால் உண்மையிலே உங்களுடைய வாழ்க்கையில் சிறிது சிறிதாய் மாறுதல் ஏற்படும் என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். சகலவிதமான பாவங்களி

னாலும் உலக காரியங்களினாலும் உங்களை நிரப்பிக்கொள்ள விரும்ப மாட்டீர்கள் காரணம் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்கள். அப்படித்தானே உங்கள் இருதயம் தேவ பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறபடியினால் தொலைக்காட்சிகள் வானொலிகள் மூலம் வெளியிடப்படும் களியாட்டுகளிலும் படக்காட்சிகளிலும் உங்கள் இருதயத்தை ஒருபோதும் பதிக்க வேண்டாம். தேவனுடைய சித்தத்தை செய்யவேண்டும் என்கிற ஒரே ஆசை உங்கள் உள்ளத்தில் நிறைந் திருக்கட்டும். தேவனுடைய ஆலயமானது ஜெப தூபங்கள் ஏறெடுக்கப்படும் இடம் என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்கள். ஆகவே உங்கள் ஜெபங்களின் மூலமாயும் மற்றவர்களோடு பரிந்து பேசுவதின் மூலமாயும் தேவனோடு உள்ள ஐக்கியத்தை தனித்த நிலையிலே வைத்துக் கொள்ளுங்கள். பூலோகத்திலே தேவனுடைய ஜெபவீடாய் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். விசுவாசத் தினால் உங்களுடைய கரங்களை வியாதியஸ்தர்மேல் வைக்கும்போது உங்களில் வாசமாயிருக்கிறவர் அவர்களை குணமாக்குவார் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியினால் உங்களுக்குரிய யாவையும் பணத்தையும், காலத்தையும் உங்களில் வாசமாயிருக்கிற பிதாவின் சேவைக்காக உபயோகியுங்கள். அவ்வாறு செய்வீர்களானால் நான் பேசுகிற வார்த்தைகள் என்னால் கூறப்பட்டவைகள் அல்ல என்னில் வாசமாயிருக்கிற பிதாவினால் உண்டானவைகள். நான் செய்கிற கிரியை என்னால் உண்டானதல்ல வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய தேவனுடைய கிரியையாயிருக்கிறது. ஏனென்றால் நான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறேன் என்று உங்களால் கூற முடியும். ஆகவே ஜெபத்திலே உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட மறக்கவேண்டாம். நீங்கள் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட படியினால் நீங்கள் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட ஆலயமா யிருக்கிறீர்கள். ஆகவே தினமும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் முழங்காலில் நிற்கும்போது நீங்கள் நிற்கிறதான இடம் தேவனுடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏனெனில் தேவனுடைய ஆலயமாகிய உங்களில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறார். நீங்கள் தேவ பிரசன்னத்தை மேலும் மேலும் அனுபவிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம். காரணம் நீங்கள் பரிசுத்த ஆவியான வரின் ஆலயமாயிருக்கிறீர்கள்.

உலகத்தை சுவிசேஷமயமாக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வாய்க்கால் நீங்களே!

நீங்கள் சாதாரண கிறிஸ்தவர்கள் அல்ல என்றும் தேவனுடைய சரீரமாயும் கிறிஸ்துவின் ஆலயமாயுமிருக்கிறீர்கள் என்றும் இதுவரை நாம் பார்த்தோம். அதுமாத்திரமல்ல நீங்கள் கிறிஸ்துவின் வாய்க்காலாய் இருக்கிறீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. என்னை சுற்றிலுமிருக்கிற ஆத்துமாவிற்கு நான் பொறுப்புள்ளவனாயிருப்பது போல உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் ஆத்துமா பெலனடைய நீங்கள் பொறுப்புள்ளவர்கள் என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அண்டசராசரங்களையும் படைத்த தேவனால் மாத்திரம் ஜனங்களை இரட்சிக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் கிறிஸ்தவர்களாகிய இந்த உலகத்தின் ஜனங்கள் இரட்சிப்பையடைய தேவன் தெரிந்து கொள்ளும் வாய்க்கால் நீங்களே நம்முடைய அசுத்த கிரியைகளினிமித்தம் நாம் அந்த வாய்க்காலை அடைத்துப் போடுவோமானால் நம்மை சுற்றிலும் இருக்கிற ஜனங்கள் நித்திய ஜீவனை இழப்பதற்கு நாம்தான் காரணமாயிருப்போம். தேவனின் இரட்சிக்கும் வல்லமை நம்மூலம் கிரியை செய்யாமல் போய்விடும். இதைப்பற்றி நாம் கருத்தாய் ஊன்றி படிப்பதற்கு முன்பு எசே. 47ஆம் அதிகாரத்தைப் பார்ப்போம். அங்கே தேவனுடைய ஆலயத்தைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலுக்கு தேவன் ஒரு ஆலயத்தை தரிசனத்திலே காட்டுகிறார் (40-46 அதிகாரங்கள்). தேவ ஆலயத்தை அளந்து பார்க்கும்படியாக தேவதூதன் எசேக்கியலை ஆலயத்தைச் சுற்றிலும் கொண்டு சென்றார் என்று அவன் அந்த தரிசனத்திலே கண்டான் என்று எசேக்கியேல் 47ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அந்த தூதன் மறுபடியுமாக எசேக்கியேலை ஆலயத்தின் நுழைவு வாயிலுக்கு திரும்பி வரப் பண்ணினான். ஆலயத்தின் வாசற்படியிலிருந்து அதிகமாக தண்ணீர் புறப்பட்டு வந்தது. தண்ணீர் அதிகமாக இருந்தபடியினால் அது நதியாகி கடலிலே கலக்கிறது. ஆரம்பத்திலே அந்த நதி ஆழமுள்ள

தாயிருக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல அது அதிக ஆழமுடைய தாயிருந்தது. அதிக ஆழம் இல்லாத போது நீங்கள் மாத்திரமே அதிலே நீந்திச் செல்ல முடியும் எசேக்கியேல் அவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த நதி ஆரோக்கியமுள்ளது என்று தூதன் அவனுக்குச் சொல்லக் கேட்டான். அதிலே சஞ்சரிக்கிற பிராணிகள் யாவும் பிழைக்கும். அந்த நதி கடலில் பாய்ந்து விழுந்த பின்பு அதின் தண்ணீர் ஆரோக்கியமாகிறது. இந்த நதி பாயும் இடமெல்லாம் செழிப்பாகும், எல்லாம் பிழைக்கும் நதியின் கரையிலே நாட்டப்பட்ட மரங்களும் ஆரோக்கியமாகும். அவைகளின் இலைகள் ஒருபோதும் உதிர்வதில்லை. அவைகளின் கனிகள் கெடுவதில்லை அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள். அந்த நதி இத்தனை நன்மை யுடையதாயிருக்க காரணம் அவை பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப் பட்டு வருகிறது.

எசேக்கியேல் கண்ட யாவும் தரிசனமே. உண்மையில் தேவால யத்தின் வாசற்படியிலிருந்து தண்ணீர் கடலிலே சங்கமாகவில்லை. அப்படியானால் எசேக்கியேல் கண்ட தரிசனத்தின் பொருள் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். தேவாலயம் பரலோகத்திற்கும், நதி, தேவன் நம்மேல் பொழிகிறதான அளவில் லாத ஆசீர்வாதத்திற்கும் ஒப்பிடலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஒருசிலரின் வியாக்கியானம் என்னவென்றால் இவை தேவன் படைக் கப்போகிறதான புதிய வானமும் புதிய பூமியுமேயாகும் (வெளி. 22 : 1, 2). இதைக் குறித்து அநேக விளக்கங்கள் உண்டு. இவை களும்கூட உண்மையாயிருக்கலாம். ஆனால் சில வருடங்களுக்கு முன்பு அந்த தரிசனத்தின் விளக்கத்தை நான் தெரிந்து கொள்ளும் படியாக தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் தேவன் வெளிப்படுத்தினதான காரியத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளு கிறேன்.

''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' தம்மை விசு வாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். ''இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினாலே பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை'' (யோவான் 7 : 38, 39) விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருந்தார்களானால் பரிசுத்த ஆவியானவர் ஊற்றும் ஜீவத் தண்ணீரானது சபையின் மூலமாய் உலகத்திற்குள் பாய்ந்து செல்லுகிறது. திடீரென்று ஒருநாள் எசேக் கியேல் கண்ட தீர்க்கதரிசனத்தின் பொருளை தேவன் எனக்கு விளக் கினார். அந்த தரிசனத்தில் கண்டதான ஆலயம் பரலோகத்தில் எங்கும் இருப்பதில்லை. அந்த ஆலயம் பூலோகத்தில் மாத்திரமே உண்டு. அந்த ஆலயம் நீங்களே. உண்மையிலேயே அநேக நாட்க ளுக்குப் பின்பு இந்த உண்மையை நீங்கள் அறிந்திருக்கலாம். எசேக்

கியேல் கண்ட தரிசனத்திலே அந்த ஆலயம் பூலோகத்திலே இருப்பதின் நோக்கத்தை தெளிவாக விளக்குகிறது. தேவ ஆலயமாகிய நீங்கள் தேவன் தங்கும் வாசஸ்தலமாய் மாத்திரமல்ல ஜீவத் தண்ணீரை உலகத்திற்குள் பாய்ச்சும் வாய்க்காலாயும் இருக்கிறீர்கள். யார் அவரை விசுவாசிக்கிறார்களோ அவர்கள் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் புரண்டு வரும். பரலோகத்திலிருந்து நேரடியாக பாய்வதில்லை என்று இயேசு சொல்லுகிறார்.

அருமையான நண்பர்களே, எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்திலே கண்ட ஆலயம் நீங்களே. உங்களை சுற்றிலும் இருக்கிற ஜனங்களுக்கு ஜீவனைக் கொடுக்கும் வாய்க்கால் நீங்களே. ''இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவ பிராணிகள் யாவும் பிழைக்கும் இந்த தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும். இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்'' என்று எசேக்கியேல் 47 : 9ல் வாசிக்கிறோம். ஆவியானவர் உங்கள் ஜெபத்தின் மூலம் அல்லது உங்கள் சாட்சியின் மூலம் பாய்ந்து செல்லும் போது உயிருள்ளவர்கள் என்று நினைக்கிறவர்கள் ஆத்துமீகத்திலே அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருப்பதை உணருகிறார்கள் (எபே. 2 : 1). பரிசுத்த ஆவியின் மூலம் புதிய ஜீவனை பெற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும் ''இந்தத் தண்ணீர் கிழக்கு தேசத்துக்குப் றப்பட்டுப் போய் வனாந்தர வழியாய் ஓடி கடலில் விழுகும். இது கடலில் பாய்ந்து விழுந்த பின்பு அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும்'' (வசனம் 8). இங்கே சவக்கடலைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சவக்கடல் எருசலேமின் கிழக்கே இருக்கிறது. சவக்கடலிலுள்ள தண்ணீர் ஆரோக்கியமுள்ளதல்ல. அதில் உப்பு அதிகமாயிருப்பதினால் மச்சங்கள் மாண்டு போகிறது. அப்படியானால் எசேக்கியேல் கண்ட தரிசனத்தின் கடல் எது? வெளி. 17 : 1ல் திரளான தண்ணீர் மேல் உட்கார்ந்திருக்கிற வேசியைப் பற்றி வாசிக்கிறோம். அந்த தண்ணீரானது ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாகும் (வெளி. 17 : 15). எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்தில் கண்ட தண்ணீரானது நம்மை சுற்றிலுமிருக்கிற உலக ஜனங்கள். அவைகள் ஆரோக்கியமற்றவையும் நாற்றமெடுப்பவையுமாயிருக்கிறது. பாவம், பொறாமை, வியாதி, சண்டைகள் கவலைகள் நிறைந்த உலகமாயிருக்கிறது. ஆனால் பரிசுத்த ஆவியாகிய தண்ணீரோ ஆரோக்கியமுள்ளதாயிருக்கிறது. உலகத்தின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் நவீன போராயுதங்கள் அல்ல, புதிய அரசியல் தலைவர்களுமல்ல, புதிய அரசியல் திட்டங்களுமல்ல. ஆனால் பரிசுத்த ஆவியாகிய நதி பாயும் போது உலகத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகிறது. அந்த நதியின் தண்ணீர் ஆரோக்கியமுள்ளதாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய கிரியைகளினால் உலகத்தின் பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்க முடியாது. ஆனால் பரிசுத்த

ஆவியின் வல்லமையினாலே முடியும். தேவன் தாம் செய்ய விரும்பும் வேலைக்காக நம்மை அவர் வாய்க்காலாக பயன்படுத்துகிறார். தேவன் உங்கள் மேல் பெரிய பொறுப்பை கொடுத்தபடியினால நீங்கள் தேவனுடைய பார்வையில் முக்கியமானவர்கள். ''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்'' (II தீமோ. 2 : 4; IIபேதுரு 3 : 9). ''உலகத்தின் பாவங்களுக்காக தேவனுடைய இரத்தம் சிந்தப்பட்டது'' (யோவான் 1 : 29, 1யோ. 2 : 2) 'கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்' என்று பவுல் கூறுகிறார். மேலும், அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? என்று பவுல் கூறுகிறான். பரலோகத்திலிருந்து நேரடியாக ஜீவத்தண்ணீர் பூலோகத்திற்கு பாய்ந்து செல்வதில்லை. அந்த ஜீவத் தண்ணீர் ஆலயமாகிய உங்களிடமிருந்து உலகிற்கு பாய்ந்து செல்லுகிறது என்பதை மறந்துவிட வேண்டாம். வாய்க்கால் அடைபட்டு போனால் உங்களை சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்காக தேவன் நேரடியாக கிரியை செய்ய முடியாது. காரணம் தேவ வல்லமையின், கிருபையின் நதி ஆலயத்திலிருந்துதான் புறப்பட்டு செல்லுகிறது. நீங்களே அந்த ஆலயமாயிருக்கிறீர்கள். நமக்காக சிந்தப்பட்ட இரத்தத்திற்காக தேவன் நம்மிடத்தில் கணக்கு கேட்கும் நாள் ஒன்று வரும் தேவனுடைய திட்டங்கள் நம் மூலம் நடைபெற நாம் சரியான வாய்க்காலாக செயல்படவில்லை என்றால் அவர் நமக்காக சிந்தின இரத்தத்திற்காக கணக்கு கேட்கும் நாள் ஒன்று உண்டு. நம்முடைய வாய்க்காலின் மூலம் உலகத்தை சுவிசேஷமயமாக்கும் ஒரு பெரிய பொறுப்பை தேவன் நம் தோளின் மேல் வைத்திருக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நம் மூலமேயன்றி வேறு எதன்மூலமாயும் தேவன் இந்த உலகத்தை சுவிசேஷத்தினால் நிரப்ப விரும்பவில்லை என்பதைக் குறித்து நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? ''விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாக அது தேவ பெலனாயிருக்கிறது'' ரோமர் 1 : 16. நாம் விசுவாசித்தால்தான் தேவனுடைய வல்லமையை அனுபவிக்க முடியும். ஒரு மனிதன் தான் முதலாவதாக எதைக்குறித்து கேள்விப்படுகிறானோ அதையே விசுவாசிக்கிறான். ஒருவன் இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல், இயேசுவின் போதனைகளை அல்லது இதுவரை இயேசுவைக் குறித்தோ அவருடைய சுவிசேஷத்தையோ கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பான். அவன் அவைகளை விசுவாசிக்க வேண்டுமானால் இயேசுவின் சுவிசேஷத்தை யாராவது ஒருவன் பிரசங்கத்தினாலாவது, சாட்சியினாலாவது, படக்காட்சியினாலாவது அவனுக்கு அறிவிக்க வேண்டும். நாத்திகர்களும், முகமதியர்களும், புத்தர்களும் ஒருபோதும் சுவிசேஷத்தை பிரசங்கித்ததில்லை.

முதலாவது அவர்களே சுவிசேஷத்தை அறிந்திருக்கவில்லை, விசுவாசித்திருக்கவுமில்லை. ஆனால் ஒரு கூட்ட ஜனங்கள் மாத்திரம் தேவனுடைய சுவிசேஷம் ஜனங்களின் காதிலே படும்படியாக ரிங்காரம் செய்கிறார்கள். காரணம் அவர்கள் அதை அறிந்ததினால் விசுவாசித்தார்கள். அவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். ஆனால் மிகவும் விசனமுள்ள காரியம் என்னவென்றால் அநேக கிறிஸ்தவர்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை கேட்டதுமில்லை அதை விசுவாசித்ததுமில்லை.

வேதத்திலே என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து ஆயிரக்கணக்கான ரோமன் கத்தோலிக்கர்களுக்குத் தெரியாது, அதுபோலவே ஆயிரக்கணக்கான ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்டு, பப்டிஸ்டு சபைகளைச் சேர்ந்தவர்களுக்கும் தேவனைப் பற்றி தெளிவாய் அறிந்திருக்கவில்லை அல்லது வே த்திலே எழுதப்பட்ட காரியத்தைப்பற்றி சிறிதுதான் அறிந்து வைத்திருக்கிறார்கள். வேதத்தை குறித்து தெளிவற்ற அறிவுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் வேதத்தை முற்றிலும் விசுவாசிப்பதில்லை. அவர்கள் வேதத்தை குறித்தான தங்களுடைய சொந்த கருத்துகளை உடையவர்களாயிருந்தார்கள். ஆனால் ஒரு சிறு கூட்டம் ஒன்று உண்டு. அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து மற்றவர்களுக்கும் பிரசங்கிக்கிறார்கள். அநேக ஸ்தாபனங்களில் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களை சந்திக்கலாம். இவர்கள் தங்கள் சபையின் அங்கத்துவத்தில் தங்களுடைய விசுவாசத்தை படிக்கிறதில்லை. அவர்களுடைய பாவங்களை போக்கும்படியாக இயேசு சிலுவையிலே மரித்தார் என்பதை விசுவாசிக்கிறார்கள். மரித்தபின்பு நித்தியத்திற்குள் பிரவேசிப்போம் என்ற திடமான நம்பிக்கையுடையவர்களும் இவர்களே!

தேவனுடைய இரட்சிப்பு, விடுதலை, குணமாகுதலின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க சிலர் தகுதியுடையவர்களாயிருக்கிறதை நாம் பார்க்கலாம். காரணம் அநேக கிறிஸ்தவர்கள் சுவிஷேத்தைக் குறித்து கேள்விப்பட்டதை அல்லது தவறான சுவிஷேத்தை பின்பற்றுகிறார்கள் அல்லது அவர்கள் அவைகளை விசுவாசிப்பதில்லை. (கலா 1 : 6-10) சுவிஷேத்தை உலகுக்கு பறைசாற்றும் வாய்களாக நீங்கள் இருப்பதின் நோக்கத்தை இப்போது புரிந்துகொள்ளுங்கள். மற்ற வாய்க்கால்கள் அறியாமையினாலும் சிறிதளவு விசுவாசத்தினாலும் அவிசுவாசத்தினாலும், தூர்ந்துவிட்டது. ஆகவே 'நீங்கள் யார்' என்பதை இப்போது நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியினால் தேவனுடைய கட்டளையை நிறைவேற்றும்படியான பொறுப்பை தேவன் உங்கள் கையிலே கொடுத்திருக்கிறார். ஆலயமானது தேவனுடைய ஜெபவீடாய் விளங்குகிறது என்றும் அங்கே தேவனுடைய பிள்ளைகள் ஏறெடுக்கிற ஜெபத்தை தேவன் கேட்டு பதில் அளிக்கிறார் என்றும் நாம் பார்த்தோம்.

தேவனுடைய ஆலயமானது ஒரு வாய்க்கால் என்றும் அந்த வாய்க்காலின் வழியாக பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய வல்லமையை பாய்ச்சி உலகத்தின் ஜனங்களுக்கு நித்திய ஜீவனையும் ஆரோக்கியத்தையும் அளிக்க விரும்புகிறார். அருமையான சகோதரனே சகோதரியே தேவனை விசுவாசிக்கும் ஒரு கிறிஸ்தவனாக நீங்கள் காணப்படுவீர்களானால் தேவன் விரும்பும் வாய்க்காலாயிருப்பீர்கள் வாய்க்காலாகிய உங்கள்மூலம் உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் நடுவே தேவன் கிரியை செய்ய விரும்புகிறார். உங்களுடைய சுவிசேஷ பணியின் மூலமாயும் பணத்தின் மூலமாயும் ஜெபத்தின் மூலமாயும் ஜனங்களின் நடுவே தேவன் கிரியை செய்ய விரும்புகிறார்.

நீங்கள் விசுவாசிக்கிறீர்களோ விசுவாசிக்கவில்லையே தேவன் கிரியை செய்ய விரும்பும் வாய்க்கால் நீங்களே. கால்வாயாகிய உங்கள்மூலம் ஆவியானவர் கிரியை செய்ய முடியாமையின் காரணம் 'நீங்கள் யார்' என்பதை இன்னும் அறிந்திருக்கவில்லை. இந்த புத்தகத்தை வாசித்த பின்பு இவைகளை நன்றாக உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இவைகளைக் குறித்து நன்கு அறிந்த பின்பு தேவன் பயன்படுத்தும் வாய்க்காலாக உங்களை ஒப்புக்கொடாவிட்டால் அது தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படியாமையேயாகும். உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்கள் நித்தியத்தை நரகத்திலே அனுபவிப்பார்களானால் அவர்களின் இரத்தப்பழியை உங்கள் கையிலே கேட்பார். காரணம் சோர்ந்து போயிருக்கிறவைகளை உற்சாகப் படுத்தும்படியாக அவர்களுக்காக ஒன்றும் செய்யவில்லை. அழிந்துபோகும் ஆத்துமாக்களின் இரத்தத்தை தேவனுக்காக செலவிடும் பணத்தின் மூலமாககூட இரட்சிக்கக்கூடும். இது நமக்கு மிஞ்சின காரியம் என்று சாத்தான் உங்கள் காதுகளில் கூறலாம். அவனுடைய கிசுகிசுப்பை நானும் கேட்கிறேன். ஆகவேதான் நான் வேத ஆதாரத்துடன் இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்.

தேவன் தம்முடைய ஊழியனாகிய எசேக்கியேலின் மூலம் இதைக் குறித்து எசே 3:16-21ல் சொல்லுகிறதை கவனியுங்கள். எசேக்கியேல் துன்மார்க்கனை நோக்கி ''நீ சாகவே சாவாய் நீ உன் அக்கிரமத்திலே சாவாய்'' என்று எச்சரிக்கும்படியாக சொல்லியும் அவன் எச்சரிக்காமல் போவானாகில் அவர்களின் இரத்தப்பலியை எசேக்கியேலின் கையிலே கேட்பார்'' இந்த வசனத்தின் அர்த்தத்தை புரிந்து கொண்டீர்களா? நாம் ஜனங்களின் ஆத்துமீகத்திற்கு உத்தரவாதமுடையவர்கள். இஸ்ரவேலர்கள் தங்கள் துன்மார்க்கத்திலிருந்து ஒருபோதும் திரும்பாமலிருந்தால் அவர்களுடைய இரத்தப்பழியை இவன் கையிலே கேட்பார். காரணம் இஸ்ரவேலர்கள் விழுகையில் அவன் அவர்களை எச்சரிக்க மறுத்துவிட்டான். தம்முடைய ஜனங்களோடு பேசும்படியாக எசேக்கியேலை தேவன் ஒரு வாய்க்கலா

பயன்படுத்தினார். தேவனுடைய கரத்திலே உபயோகப்படுத்தப்பட அவன் மறுத்தால் என்ன நேரிடும் என்பதை அவன் நன்றாய் அறிந்திருந்தான். ஆகவேதான் தேவவார்த்தைகளுக்கு ஜனங்கள் கீழ்ப்படியும்படியாக தேவ வார்த்தைகளை அவர்களுக்கு அவன் அறிவித்தான்.

நண்பர்களே நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஆத்துமாவிற்கு நாம்தான் உத்தரவாதமுள்ளவர்கள். நீங்கள் இதை விளக்கும்படியாக பழைய ஏற்பாட்டில் உள்ள வேத வசனத்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறீர். பழைய ஏற்பாட்டினால் நமக்கு என்ன பயன் ஏனெனில் நாம் நியாயப் பிரமாணத்தின் காலத்திலல்ல. கிருபையின் நாட்களிலே இருக்கிறோம் என்று நீங்கள் கூறலாம் ஆனால் நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு நான் உங்களுக்கு சொல்லுகிறேன். அப் 18:6, 20:26. 27ல் எழுதப்பட்டிருக்கிறதை வாசியுங்கள். எசேக்கியேலில் சொல்லப்பட்டிருப்பதை பவுல் தன்னுடைய நிருபத்திலே குறிப்பிடுகிறான் (அப் 20:26, 27) இங்கே தன்னைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் இரத்தப்பலிக்கு தான் நீங்கலாயிருப்பதை குறிப்பிடுகிறான். காரணம் பூரண சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் அவன் அசதியாயிருக்கவில்லை. அவன் சுவிசேஷத்தை சொல்லுவதில் அசதியாயிருப்பானேயாகில் தன்னைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் இரத்தப் பழிக்கு பாத்திரனாவான்.

பவுல் தான் சொல்ல நினைக்கும் கருத்துக்களை இங்கே அள்ளிகொட்டியிருக்கிறான். கருத்தாய் வாசித்து அறிந்துகொள்ளுங்கள். மதிலினுள் இருக்கும் ஜனங்களை பாதுகாக்கும்படியாக எசேக்கியேல் ஒரு காவல்காரனாக நியமிக்கப்பட்டான். அவன் அந்த மதிலின்மேல் நின்றுகொண்டு மதிலின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் என்ன நடக்கிறது என்பதை கண்காணித்து வந்தான். ஆனால் பவுல் சொல்லுகிற மதிலோ இதிலிருந்து கொஞ்சம் வித்தியாசமானது. ஜனங்கள் தங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை பார்க்கக்கூடாதபடிக்கு ஒரு பெரிய மதில் நின்றுகொண்டிருக்கிறது. ஆத்துமீகத்திலே குருடான ஜனங்கள். வரும் நாட்களில் என்ன ஆபத்து நடக்கும் என்பதை அறிய இயலாது தங்களுடைய பாவமாகிய மதில் அவர்களை மறைத்துக் கொள்ளுகிறது. தங்களுடைய பாவத்தினிமித்தமாக நித்திய மரணமாகிய அக்கினிக் கடலிலே் தள்ளப்படுவார்கள். (வெளி 20:15, நியாயத்தீர்ப்பிலிருந்து அல்லது சத்துருவின் பிடியிலிருந்து தப்பும்படியாக ஒரு பெரிய மதிலாக பாவத்திலிருந்து விடுதலைப் பெறும்படிக்கு இயேசு ஒரு வழியை திறந்திருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது.

எசேக்கியேலைப்போல் தானும் அந்த மதில்மேல் எழும்பி நின்று எல்லாவற்றையும் பார்க்க இயலும் என்று புவுல் செப்புகிறான். நியாத்தீர்ப்பின் நாட்களில் எல்லா ஜனங்களும் நியாயத் தீர்ப்படை

வார்கள். இயேசுவை அறியாதவர்கள் நித்தியமாக அழிவார்கள் ஆனால் தேவ குமாரனாகிய கிறிஸ்துவோ நாம் தப்பிக்கொள்ளும் படியாக ஒரு வழியை உண்டாக்கினார். தேவனுடைய எக்காளத்தை ஊதி ஜனங்களை எச்சரிக்க வேண்டியது நம்முடைய கடமை (மாற்கு 16 : 15) பவுல் 'தான் யார்' என்றும் உலகத்தை சுவிசேஷமயமாக்கும்படி தேவன் உபயோகிக்கும் கால்வாய் என்றும் நன்கு அறிந்திருந்தான். தான் தேவனுடைய அழைப்புக்கு கீழ்படியாமல் போவானாகில் அநேக ஜனங்கள் நித்தியத்தை இழந்துவிடுவார்கள் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தான். கீழ்படியாமல் போவானாகில் ஜனங்களுடைய இரத்தப் பலியையோ அவனுடைய கையிலே கேட்பார். ஆகவே எசேக்கியேல் போட்டதான கணக்கு பழைய ஏற்பாட்டு காலத்திலுள்ள ஜனங்களுக்கு மாத்திரம் மதிப்புடையதாயிருந்தது. ஆனால் தேவன் பேசின ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்காகவும் எனக்காகவும் பேசப்படுகிறவைகள் எசேக்கியேலைப்போல் நாமும் நம்மைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சொல்லும் வாய்க்காலாய் மாறுவோம்.

தேவனைப்பற்றி ஜனங்களுக்கு கூறி அவரைக் குறித்து சாட்சி பகர்ந்து அவருடைய நீயாயத் தீர்ப்பைக் கூறி எச்சரிப்போமானால் இரண்டு காரியங்கள் நடைபெறும். ஒன்று சிலர் சுவிசேஷத்தை விசுவாசித்து இரட்சிக்கப்படுவார்கள். இரண்டாவதாக மற்றவர்களோ சுவிசேஷத்தை விசுவாசிக்காமல் அழிந்து போவார்கள். ஆனால் இரண்டு கூட்டங்களிலுமே உங்களுடைய வேலைக்கு ஏற்ற பெலன் உண்டு. ஒருவேளை ஒருவருமே மனந்திரும்பாவிட்டாலும் நீங்கள் சோர்ந்து போகவேண்டிய அவசியமில்லை. முதலாவது உங்களுடைய வேலையின் பெலன் நித்திய ஜீவனை சுதந்தரிக்கும் படிக்கு சிலர் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். இரண்டாவதாக நீங்கள் சொன்ன சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்களுடைய இரத்தப் பழிக்கு நீங்கள் நீங்கலாயிருக்கிறீர்கள் உங்களை சுற்றிலும் இருக்கிற ஜனங்களுக்கு நீங்கள் பிரசங்கிக்காவிட்டால் அவர்களுடைய இரத்தப்பழியை தேவன் உங்கள் கையிலே கேட்பார். சிறிஸ்தவர்களாகிய நாம் நமக்கு கொடுக்கப்பட்ட உத்தரவாதத்திலிருந்து நீங்கலாயிருக்க முடியாது. இயேசுவை ஏற்றுக்கொண்ட நாள்முதல் நாம் கிறிஸ்தவர்களாக ஜீவிப்பது அவசியம். நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாய் இருக்கிறபடியால் நம்முடைய விருப்பம்போல் நாம் ஜீவிக்க இயலாது. ஏனெனில் நம்முடைய கிரியைகள் ஒவ்வொன்றும் பரலோகத்திலிருக்கிற தலையாகிய கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்படுகிறது. கிறிஸ்துவின் ஆலயமாயிருக்கிற நீங்கள் கிறிஸ்துவினுடைய பரிசுத்த பிள்ளையாய் ஜீவிக்க வேண்டும். ''நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' (I பேதுரு 1 : 16) என்று வேதம் சொல்லுகிறது.

அநேக சுவிசேஷகர்கள் தவறான உபதேசத்தை பிரசங்கிக்கிறார்கள் அல்லது முழுசுவிசேஷத்தையும் எடுத்து சொல்லுவதில்லை. நீங்கள் இயேசுவண்டை வந்தீர்களானால் நித்திய ஜீவனை அடைவீர்கள் என்றும் கூறுகிறார்கள். இது முற்றிலும் உண்மை. ஆனால் இயேசுவோ இவைகளை மாத்திரம் கூறி தன்னுடைய சுவிசேஷத்தை நிறுத்திவிடவில்லை (லூக்கா 14 : 25-27) அவரைப் பின்பற்றுகிறவர்களை பார்த்து இயேசு சொல்லுகிறதை கீழே வாசியுங்கள். ''அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில் அவர்களிடமாய் அவர் திரும்பிப் பார்த்து யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்'' அப்படியானால் நாம் நம்முடைய தாய், தகப்பன் சகோதர சதோதரிகளையும் வெறுக்க வேண்டுமென்பது இதன் அர்த்தமில்லை. அவர்களை நாம் வெறுத்துத் தள்ளுவோமானால் அது பெரிய பாவமாகும். ஆனால் மேல் சொல்லப்பட்ட வசனத்தின்படி நாம் நம்முடைய தாயையும் தகப்பனையும் பிள்ளைகளையும் சகோதர சகோதரிகளையும் நம்முடைய ஜீவனைப் பார்க்கிலும் இயேசுவைதான் அதிகமாக நேசிக்க வேண்டும். நம்முடைய ஜீவன் என்று சொல்வோமானால் அவை நம்முடைய நேரம், பணம், சொத்து, விருப்பம், நற்பெயர், நம்முடைய ஜீவியத்திற்கு ஒத்ததான எல்லா காரியத்தைக் காட்டிலும் இயேசுவையே நேசிக்க வேண்டும்.

மனந்திரும்புதல் என்றால் நித்தியத்தை சுதந்தரிக்கும்படியாக இரட்சிப்பை அடைதல் என்பதே இதன் பொருளாகும். நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு அடுத்த காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அவ்விதம் செய்வோமாகில் நாம் மிகுந்த சந்தோஷத்தை அடைவோம். இயேசுவைப்பற்றி சாட்சியாய் அறிவிக்கும்போது உங்களைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்கள் உங்களைப் பார்த்து கேலி செய்து பரியாசம் பண்ணுவார்கள். போதகருக்கு உதவிகளைச் செய்யும்படியாக உங்களை அழைக்கும்போது தொலைக்காட்சிப் பெட்டியிலுள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் உங்களுடைய நண்பர்களோடு சேர்ந்து வெளியே போகும்படி தீர்மானிப்பீர்களானால் நல்லதல்ல. இவ்விதம் செய்வோமாகில் தேவனுடைய ராஜ்யத்திற்கு அடுத்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதே அதன் பொருள். தேவனுடைய பார்வைக்கு முன்பாக நாம் அவருடைய சீஷராயிருக்க தகுதியுடையவர்களும் அல்ல (மத் 10 : 37, 38) ''ஒருவன் ஒரு கோபுரத்தை கட்ட விரும்பினால் முதலாவது அதின் செல்லும் செலவை கணக்கு பார்க்க வேண்டும். அவனால் கூடும் என்று அறியும்போது அவன் அவைகளை கட்ட ஆரம்பிக்க வேண்டும்'' என்று இயேசு கூறினார் (லூக்கா 14 : 28-32)

ஆகவே ''உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை யெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்'' (லூக்கா 14 : 33)

ஆகவே மனந்திரும்பினவன் செல்லும் செலவை கணக்கு பார்க்கும் கிறிஸ்தவர்களாயிருப்பதினால் வரும் துன்பங்களை யெல்லாம் பொறுமையாய் சகிக்க வேண்டும். இவைகளை ஒருவன் விரும்பவில்லையானால் அவன் கிறிஸ்துவின் சீஷனாவதற்கு தகுதி யற்றவன் அவன் இயேசுவின் சீஷனாயிருக்கவும் முடியாது. உலகம் எங்கும் போய் நாம் ஜனங்களை விசுவாசிகளாக்கும்படியல்ல, சீஷர் களாக்கும்படியே இயேசு நமக்கு கட்டளைவிடுத்துள்ளார் (மத் 28:19) விசுவாசிக்கும் சீஷர்களுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு. இயேசுவின்மேல் விசுவாசம் வைக்கிறவனுக்குத்தான் விசுவாசி என்று பெயர். இயேசுவின்மேல் விசுவாசம் வைப்பது மாத்திரமல்ல அவருக்கு கீழ்படிந்து இயேசு சொன்னதைப்போல் தானும் செய்வா னாகில் அவனே இயேசுவின் சீஷன். இவ்விதமாய் பிரசங்கிக்கப் படாததினால் அநேகர் தகுதியற்ற கிறிஸ்தவர்களாக காணப்படு கிறார்கள். தேவனை விசுவாசிக்கிறார்கள் ஆனால் தேவனுடைய பார்வையில் பிரயோஜனமற்றவர்களாக இருக்கிறார்கள் காரணம் கிறிஸ்தவர்களாகிய அவர்கள் தங்களுக்கு நேரிடும் சோதனைகளை சகிப்பதில்லை. ஆனால் நீங்கள் எந்தவிதமான கிறிஸ்தவர்கள் என்பதே முக்கிய கேள்வி. நீங்கள் தேவனுடைய கரத்திலே உபயோகப்படும் முக்கியமான ஆயுதமா? வாய்க்காலா? இல்லை யெனில் பிரயோஜனமற்ற கிறிஸ்தவர்களா? கிறிஸ்தவர்களாகிய நீங்கள் நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்காக தேவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும் நம்முடைய எச்சரிப்பின் சப்தத்தை அவர்கள் கேட்காமல் போனால் நித்தியத்தை இழந்து போவார்கள்.

கிறிஸ்தவ நண்பர்களே! தேவன் உங்களை அழைத்த அழைப் பையும் அவர் உங்களிடம் ஒப்புவித்ததான வேலையையும் நீங்கள் ஏற்றுக்கொண்டு அவருக்கு பிரியமாய் நடக்கும்படியாக நான் உங்களை அன்பாய் கேட்கிறேன். கிரயத்தை செலுத்துங்கள். செல்லும் செலவை கணக்குப் பாருங்கள். தேவனுடைய சீஷரா குங்கள். இயேசுவைப் போலாகுங்கள். இயேசு பரிசுத்தராயிருந்தது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் உலகத்தை சுவிசேஷமயமாக் கும்படி தேவன் உபயோகிக்கும் கால்வாய் நீங்களே. கிறிஸ்துவை உடையவன் சோம்பலாயிருப்பதில்லை. தேவனால் கொடுக்கப்பட்ட வேலைகள் அவனுக்கு உண்டு. ஏனெனில் உலகத்தை சுவிசேஷமய மாக்கும்படி தேவன் உபயோகிக்கும் கால்வாய் நீங்களே. உலகத்தை சுவிசேஷமயமாக்க மாத்திரமல்ல தேவனுடைய சபைக்கு ஆசீர் வதித்ததை உங்கள்மூலம் அளிக்க தேவன் விரும்பும் வாய்க்காலாக பயன்படுவீர்களாக!

தன்னுடைய சபையை ஆசீர்வதிக்கும்படியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட வாய்க்கால் நீங்களே !

I கொரி 14 : 12ல் இவ்விதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ''நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால் சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்'' என்றும் கொலோ 3 : 16 ல் ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திச் சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி'' என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் ''சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராத்படிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு என்று எண்ணப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லுங்கள்'' என்று எபி 3 : 12,13ல் கூறுகிறது. மேலே சொல்லப்பட்டது போல தேவனுடைய சுவிசேஷத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் வாய்க்காலாக மாத்திரமல்ல சபைக்குரிய ஆசீர்வாதத்தை பொழிந்தருளும் வாய்க்காலாகவும் நாம் உபயோகப்பட தேவன் விரும்புகிறார்.

ஆகவே கிறிஸ்தவர்கள் தங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்வது மிக அவசியம் அப்படி செய்வோமானால் சபையின் வளர்ச்சி அதிகமாகும் அவ்வாறு தேவன் உபயோகிக்கும் வாய்க்காலாக செயல்பட தவறுவோமானால் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறதான சாத்தானோடும் நம்மைச் சுற்றிலும் இருக்கிற நாகத்தின் வல்லமையோடும் எதிர்த்து நம்மால் எதிர் நடை போட முடியாது. தேவன் உபயோகிக்கும் வாய்க்காலாக செயல் போடுவோமானால் நம் மூலம் பாவிகள் மனந்திரும்புவார். வியாதியஸ்தர் ' சுகமடைவார்கள் ஆதி சபையானது வல்லமையினால் நிரப்பப்பட்டிருந்தது தன்னைச்

சுற்றிலும் இருக்கிற ஜனங்களை இயேசுவின் போதனையினால் ஆதாயப்படுத்த முடிந்தது. ஆனால் நாட்கள் செல்ல செல்ல சபையில் எரிந்து கொண்டிருந்ததான அக்கினி மெதுவாக அணைய ஆரம்பித்தது. இருண்ட நாட்களில் அவை முற்றிலும் அழிந்து போயிற்று. இருண்ட காலத்திற்கு பின்பு தேவ ஆவியானவர் லூத்தர், கால்வின், ஜான் வெஸ்லி, டாக்டர் பின்னி, வில்லியம் பூத், பில்லி கிரவிறாம், டி. எல் ஆஸ்போன். மோரிஸ் செருலோ போன்றவர்களின் மூலம் தேவ ஆவியானவர் அசைவாட ஆரம்பித்தார். அதன் பின்பு கிறிஸ்துவின் சபை மெதுவாக உயிர் மீட்சியடைந்தது.

அநேக காரியங்ககளில் அதிக மாறுதல் உண்டு. ஆனால் இன்னும் கிறிஸ்தவர் குடும்பங்களில் அப்படியே பாரம்பரியத்தை பின்பற்றப்பட்டு வருகிறது. கால்வின், லூத்தர் போன்றவர்களின் மூலம் ஒரு பெரிய மாற்றம் உருவாயிற்று. அப்படியிருந்தும் சில ஆவிக்குரிய தலைவர்கள், ஜனங்கள் அதைப் பின்பற்ற காரணகர்த்தாவாயிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் ஞானஸ்நானத்தை கைக்கொண்டு வருகிறார்கள். வில்லியம் பூத் ஆரம்பித்ததான இரட்சண்ய சேனை என்னும் ஸ்தாபனம் ஒரு பெரிய வல்லமையுள்ள ஸ்தாபனமாக வளர்ந்தது. ஆனால் பரிசுத்தாக நற்கருணையை அங்கு ஆசரிப்பதில்லை சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் திவிரமாயிருந்தனர். ஆனால்பரிசுத்தர் ஆவியின் அபிஷேகத்தையும் அன்னிய பாஷை பேசுவதையும் கைகளை வைத்தபோது சுகமாகுதலையும் தீர்க்கதரிசன வரங்களையும் ஆவியின் 9 வரங்களையும் அவர்கள் விசுவாசிப்பதில்லை. அந்த சத்தியத்திற்கு அவர்கள் எதிர்த்து நிற்கிறார்கள் அநேக நாட்களாக நான் இவைகளை நினைத்து ஆச்சரியமடைந்திருக்கிறேன். சபையின் சரித்திரங்களை நாம் உற்று நோக்குகையில் தேவனுடைய ஆவியினாலும் வசனத்தினாலும் நிரப்பப்பட்டிருந்த ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களில் குருடாயிருக்கிறார்கள்.

இவ்விதமாக வேதத்தில் சொல்லப்படாத பாரம்பரியங்களும் போதனைகளும் பரம்பரையாக பின்பற்றப்படுகிறது. இவைகளை நாம் ஒழிக்க வேண்டுமானால் நாம் பின்பற்றுகிறதான பாரம்பரியங்கள், போதனைகளை வேத வசனங்களோடு ஒப்பிடுதல் வேண்டும் ஒரே ஒரு காரியத்தில் மாத்திரம் கிறிஸ்தவர்கள் தவறுவதில்லை ஆலயத்திற்கு சென்று தேவனை ஆராதிப்பதில் கிறிஸ்தவர்கள் தவறுவதில்லை.

அநேக கிறிஸ்தவர்கள் போதனைகளை கவனிக்கும்படி ஆலயத்திற்கு செல்லுகிறார்கள். ஆராதனை நேரங்களில் நாம் ஜெபிக்கிறோம் பாட்டுகளை பாடுகிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக பிரசங்கத்திற்கு மாத்திரம் நம் உள்ளத்திலே முக்கிய இடத்தைக் கொடுக்கிறோம் பிரசங்கம் முடிந்த பின்பு அடுத்த பாட்டு

பாடுகிறோம். அதன் பின்பு நாம் வீட்டிற்கு செல்லுகிறோம். இது நம்முடைய பொதுவான ஆராதனையின் முறையேயாகும். போதகர் பிரசங்கிக்கிற பிரசங்கத்தை கேட்க வேண்டும் என்கிற எண்ணத் தோடு தான் ஆராதனைக்கு போகிறோம். சகோதர சகோதரிகளே நாம் ஆமோதித்துச் செய்கிற அநேக காரியங்கள் வேத வசனத்திற்கு புறம்பானது நாம் தேவனால் உபயோகப்பட வேண்டுமானால் நம் முடைய எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கிறிஸ் தவர்களாகிய உங்களுக்கு நான் எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

I கொரி 14:26 ல் நீங்கள் கூடி வருகிறபோது உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான். ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வேளிப் படுத்திகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான் சகோதரரே இது என்ன? சகலமும் பக்திவிருத்திக் கேதுவாகச் செய்யப்படக்கடவது'' என்று எழுதப்பட்டிருக்கிறது. மேற்கூறப்பட்ட வசனத்தை நீங்கள் மிக கவனமாக படித்தீர்களா? சபையிலுள்ள விசுவாசிகள் ஏதாவது ஒன்றை சபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு சபைக்குச் செல்லவில்லை. சபைக்கு ஒன்றை கொண்டு வந்து சேர்க் கவே சபைக்குச் சென்றார்கள். இப்படிப்பட்டதான மனப்பாங்கு நம்மில் கிறிஸ்துவ மக்களிடையேயும் ஏற்பட வேண்டும். சபை விரிவடையும் படியாக நாம் ஆத்தும ஆதாய பணியில் ஈடுபட்டு சபைக்கு ஒன்றை கொண்டு செல்ல வேண்டும். இன்று அநேக சபைகளில் இவைகள் காணப்படுவதில்லை. அவைகளைக் குறித்து சிந்திக்கும்படியாக ஜனங் களுக்கு நேரம் கொடுக்கப்படுவதுமில்லை. ஏனென்றால் போதகர் அதிக நேரத்தை பிரசங்கத்தில் செலவிடுகிறார். நம்முடைய மனப் போங்கும், ஆராதனை முறையும் மாற்றப்பட வேண்டியது அவசியம். அவ்வாறு கிரியை செய்வோமானால் தேவ ஆவியானவர் தம்முடைய விருப்பத்தின்படியே நம்மை நடத்துவார். இரண்டாவதாக தேவ ஆவி யானவர் தாம் விரும்பினவர்களின் மூலம் ஜனங்களோடு பேசுவார். (I கொரி 12:11) சபையின் துரித வளர்ச்சியின் இரகசியம் என்னவென் றால் தேவன் யாரைக்கொண்டு கிரியைசெய்ய வேண்டுமென்று நினைத் திருக்கிறாரோ அவர்கள் தேவன் தங்கள் மூலம் கிரியை செய்யும்படியாக முற்றிலும் தேவனுடைய கரத்திலே விட்டுக் கொடுக்கிறார்கள். இவர்களின் சுய கிரியையினரல்ல என்பதை ''வெற்றிகரமான அறுவடையின் இரகசியம்'' என்ற புத்தகத்திலே நான் எழுதியிருக் கிறேன். சுவிஷேமானது வல்லமையினாலும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட அடையாளங்கள், அற்புதங்கள் மூலமாயும் பிரசங்கிக்கப் படுகிறது. ஆதி சபையிலே சுவிசேஷமானது ஜனங்களின் மூலம் பிரசிங்கிக்கப்படவில்லை. தேவன் மூலமாக பிரசிங்கிக்கப்பட்டது. ஆகவே ஆதி சபையானது வெற்றியுள்ள சபையாயிருந்தது. என்று நீங்கள் சொல்லலாம். அநேக போதகர்க்ள், ஊழியர்கள் தேவனுடைய

சபையைக் கட்ட வேண்டும் என்று பிரயாசப்படுகிறார்கள். ஆகவேதான் அங்கே அக்கினித் தழலின் வல்லமை குன்றி காணப்படுகிறது. தங்களை சுற்றிலும் இருக்கிற ஜனங்களை அவர்களால் ஆதாயப்படுத்த முடிய வில்லை. காரணம் எல்லா வேலைகளையும் தானே செய்ய முயற்சிக் கிறார்கள். அருமையான ஆவிக்குரிய தலைவர்களே, மூப்பர்களே, ஊழியர்களே மத் 16:18ல் இயேசு சொன்ன வார்த்தையக் கருத்தாய் கவனித்துப் படியுங்கள் ''மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' சபையைக் கட்டுகிற வேலை இயேசுவுக்கே உரியது. சபையை ஆசீர்வதிக்கவும் கட்டுவதற்காக தேவன் உபயோகிக்கும் கால்வாய் நாமே. நம்முடைய பிரயாசத்தினால் சபைகளை ஒருபோதும் கட்டலாகாது.

நியூஸிலாந்திலுள்ள ஒரு போதகரை நான் சந்திக்க நேரிட்டது, அவர் ஒருமுறை என்னிடம் சொன்ன வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது, சகோதரனே, ''சபை நடத்துவ தென்றால் தோளின் மேலுள்ள சுமக்க முடியாத பெரிய பாரத்தைப் போலிருக்கிறது'' என்று என்னிடம் கூறினார். ஆனால் தேவன் இவைகளை அறிந்தார். ஒரு நாள் தேவன் இவரோடே பேசினார். ''என் மகனே இது என்னுடைய சபை. உண்மையிலே இது உன்னுடைய சபை அல்ல என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று திட்டமாய் அவரோடு பேசினார் தேவ சப்தத்தைக் கேட்ட மாத்திரத்திலே தோளின் மேலிருக்கும் சுமையாக கருதின அந்த பாரம் அப்படியே அவரை விட்டு எடுபட்டுப் போயிற்று. தேவன் தன்மூலம் பெரிய சபையைக் கட்டுவது மாத்திரமல்ல அதை ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார். என்பதை உணர்ந்து கொண்டார். ஆனால் தேவ ஆவியானவர் தாம் யாரைக் கொண்டு கிரியை செய்ய சித்தமாயிருக்கிராரோ அவர்களைக் கொண்டே கிரியை செய்கிறார்.

I கொரி 12:11 ஞாயிற்று கிழமைகளில் சபையின் போதகர் ஆராதனை முடிந்தது ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறதினால் சபையின் ஆத்துமீக வளர்ச்சிக்கு தேவன் தங்களை உபயோகப்படுத்து கிறார் என்பதை தேவ சபையினர் அறிந்து கொண்டால் எத்தனை மகத்துவமாய் இருக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற அனுபவத்தை ஞாயிறு ஆராதனைகளில் பகிர்ந்து கொள்ளும்போது எவ்வளவு மகிமையாயிருக்கும். அவ்வாறு செய்யும் போது போதகர் களின் முக்கிய வேலையாகிய பிரசங்கத்தை அவர்கள் அள்ளித்தூவ வேண்டியதில்லை, இவ்வாறு செய்யும் போது சபையானது மிகவும் ஆசீர்வதிக்கப்படும். நாம் செய்கிற கிரியைகளினால்ல நம்முடைய ஜெபத்திற்கு பதிலளிக்கும் தேவ வல்லமையினாலே அப்படி ஆகும்'' என்றும் அவர் கூறினார்.

இந்த சகோதரனுடைய சாட்சியினால் நான் விசேஷமாக தொடப்பட்டேன். காரணம் அவர் சொன்னவைகள் யாவும் உண்மையே. சபையைக் கட்டுகிறவர் இயேசுவே. போதகர்கள், ஊழியர்கள் மூலமாய் மாத்திரம் தேவன் கிரியை செய்கிறதில்லை. கூடிவருகிற ஒவ்வொருவரின் மூலமாயும் தேவன் கிரியை செய்கிறார்

அருமையான நண்பர்களே, 'நீங்கள் யார்' என்று இப்பொழுது உங்களுக்குத் தெரியுமா? தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை சபைக்கு பொழிந்தருளும் படியாக தேவன் உபயோகப்படுத்தும் வாய்க்கால் நீங்களே போதகர்கள், ஊழியர்கள், மூப்பர்கள்தான் அப்படிப்பட்ட வாய்க்கால் என்று நீங்கள் ஒரு போதும் நினைக்க வேண்டாம் சபையிலே தேவ ஆசீர்வாதம் வழிந்தோட தேவன் தெரிந்து கொண்ட வாய்க்கால் நீங்களே I கொரி 12 : 12. 31ல் சபையானது, அநேக அவயவயங்களை கொண்ட சரீரத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுவின் சபையானதும் அநேக அவயவங்களைக்கொண்டது அவை அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், போதகர்கள் போன்றவர்களே (28ம் வசனம்) இவர்கள் யாவருக்கும் ஒரேவிதமான ஊழியம் கொடுக்கப்படவில்லை (29ம் வசனம்) சபையிலே தேவன் வித்தியாசமான ஊழியங்களை ஏற்படுத்தினதின் காரணம் என்ன என்பதை அப் 4 : 11-15ல் வாசிக்கிறோம்

''மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமனப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரை தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி குழந்கைளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல் அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.'' எபே 4:11-11.

இயேசுவின் சரீரமான சபையிலே எந்த வகையான ஊழியங்கள் தேவை என்றும் அதற்கான காரணங்களை கீழே வரிசைப்படுத்தியுள்ளேன்.

1) பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு

2) கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய

3) தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தில் வரை.

4) கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி

5) கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய

6) இனிக் குழந்தைகளாயிராமல்

7) மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல்

8) அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு எல்லாவற்றி லேயும் வளரும்படி

மேலும் 10 ம் வசனத்திலே, அவராலே சரீரம் முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்படுகிறது, என்று அப். பவுல் கூறுகிறான்.

மேலே சொல்லலப்பட்ட எட்டு காரியங்களும், ஊழியர்களும் சபையின் ஜனங்களும் தேவனுடைய சரீரத்திலே வேலை செய்யும் அங்கங்களாய் இருக்கிறார்கள் என்ற உண்மையான சத்தியத்தை எடுத்துக் காட்டுகிறது. சபையின் அங்கத்தினர்களும், ஊழியர்களும் தேவனுடைய சரீரமாகிய சபையில் தேவனிடத்தில் பெற்றதான பொறுப்பை நிறைவேற்ற தவறுவார்களேயானால் தேவனுடைய ஆசீர்வாதத்தை சபையிலே காண இயலாது. இன்னும் இவைகளை உங்களுக்கு தெளிவாக எடுத்துக் கூற வேண்டுமானால் நம்முடைய சரீர அவயவங்களின் செயல்முறைகளை எடுத்துக் கொள்ளலாம். நம்முடைய மாமிச சரீரமானது பெலனுள்ளதாயும் ஆரோக்கியமுள்ள தாயும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நாம் தேவனுக்காக அநேக காரியங்களைச் செய்யலாம். நம்முடைய சரீரத்திலே சில அவயவங்கள் வேலை செய்ய மறுத்தால் நாம் தேவனுக்காக கிரியை செய்ய முடியாது. நம்முடைய சரீரத்தின் முக்கிய அவயமான நுரையீரல், இருதயம், கல்லீரல், சிறுநீரகம் போன்றவைகளை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இவைகளில் ஒன்று வேலை செய்யாவிட்டால் நாம் படுக்கையிலே இருக்க நேரிடும் நம்மால் ஒரு வேலையும் செய்ய இயலாது. இதேப் போல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே காணப்படுமானால் என்ன நேரிடும் என்பதை நீங்களே சிந்தியுங்கள்.

தேவனுடைய சபையிலும் பல அங்கங்கள் உண்டு. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் வித்தியாசமான வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது சில அங்கத்தினர்கள் நம்முடைய கரங் களைப் போல் செயல் படுகிறார்கள். இவர்களின் வேலை யாதெனில்

தன்னை சுற்றிலும் இருக்கிற உலகத்தை வழைத்துக் கொண்டு அவர்களை மாற்றவேண்டும். இந்த வகையான கிறிஸ்தவர்கள் விசேஷ ஊழியமாகிய சுவிசேஷ ஊழியத்தைக் கொண்டவர்கள். அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் இந்த ஊழியத்தை செய்ய வேண்டும். இவர்களுடைய சுவிசேஷத்தின் மூலம் பாவிகள் மனந்திரும் புகிறார்கள். அநேகர் சுவிசேஷத்தைக் கேட்கிறார்கள் கிறிஸ்துவின் சபையின் வளர்ச்சிக்கு இவர்களின் பங்கு சிறிதளவே. எப்படியாயினும் மனித சரீரத்திலே வெளியே காணப்படாத அநேக அவயவங்கள் உண்டு. அவை கல்லீரல், சிறுநீரகம் போன்றவையே. அவைகள் வெளியே காணப்படாமல் இருக்கிற படியினால் அவைகள் முக்கியமான வைகள் அல்ல என்று நீங்கள் நினைக்க வேண்டாம். அப்படியல்ல. மற்ற அவயவங்கள் ஆரோக்கியமுள்ளதாயும் நல்ல நிலையிலும் வைத்திருக்கும்படி அவைகள் உதவுகின்றன. இவைகள் இல்லாவிடில் மற்ற காரியங்களை கரங்களினால் மாத்திரம் செய்யலாகாது. அது போல போதகர், மேய்ப்பர் போன்ற விசேஷ ஊழியங்களை தேவனு டைய சரீரத்திலே இருக்கிறதான சில அவயவங்களுக்கு கொடுத்தி ருக்கிறார் (எபே 4 : 13) இவர்களால் சுவிசேஷ வேலையை செய்ய முடிவதில்லை. ஆனால் தேவனுடைய சரீரமாகிய சபையைக்கட்டுவதே இவர்களுடைய வேலை. சரீரத்தின் அவயவங்களான கல்லீரல் சிறு நீரகம் நுரையீரல் இருதயம் போன்றவைகள் பெலனாகவும் ஆரோக் கியமாயும் இருக்கும் போது தான் சரீரத்தில் உள்ள கரங்கள் வேலை செய்ய இயலும் இதுபோல் மேய்ப்பர்கள் போதகர்களினால் உருவாக் கப்பட்ட சபை ஆரோக்கியமாய் இருக்கும்போதுதான் அப்போஸ் தலர்களும் ஊழியர்களும் சரியாய் ஊழியம் செய்ய இயலும்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு பிறருடைய உதவி மிகவும் தேவை என்பதை என் அனுபவத்தின் வாயிலாக நான் திட்டமாய் அறிந்து கொண்டேன். பிறருடைய உதவி இன்றி நாம் தானாக செயல்பட முடியாது. சுவிசே பணியிலும், தேவ சேவையிலும் சபைகளை கட்டு வதிலும் பல வருட அனுபவம் எனக்கு உண்டு. அநேக நாடுகளில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகிறதான கூட்டங்களில் சுவிசே ஷத்தை நான் பிரசங்கித்திருக்கிறேன். அநேக ஸ்தாபனங்களிலிருந்து கூடிவருகிறதான போதகர், மேய்ப்பர், சுவிசேஷகர்களுக்கு அறிவுரை களை கூறியிருக்கிறேன். செய்வதறியாது திகைத்த அநேக சூழ்நிலைகள் எனக்கு நேர்ந்தது. சில ஏழை சகோதரர்கள் தேவ ஞானத்தினால் எனக்கு அதற்கான வழியைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரைகளுக்கு நான் இன்னும் நன்றியுள்ளவனா யிருக்கிறேன் அருமையான சகோதர சகோதரிகளே மற்றவருடைய உதவியில்லாமல் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கேற்ற கனிகளை கொடுக்க முடியாது. ஏனென்றால் சபையின் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளுகிறதான பங்கு மிக முக்கியம்.

ஒரு பெரிய கூட்டத்திலே மனந்திரும்பின ஒரு மனிதனைப் பற்றி I கொரி 14 : 25 ல் வாசிக்கிறோம். அந்த சகோதரன் யாருடைய பிரயாசத்தினால் இந்த அனுபவத்தை பெற்றுக் கொண்டான் தெரியுமா? போதகர் அல்லது ஊழியரின் பிரசங்கத்தினால் அல்ல சுவிசேஷகனுடைய சுவிசேஷ ஊழியத்தினால் ஏற்பட்டதா? இந்த கேள்விக்கான பதில் 24ம் வசனத்தில் காணலாம். கூடிவந்தவர்களின் தீர்க்கதரிசனத்தினால் உணர்த்துவிக்கப்பட்டு எல்லாராலும் நிதானிக்கப்பட்டான். அவனுடைய அந்தரங்க இரகசியம் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இயற்கைக்கும் அப்பாற்பட்ட தேவ வல்லமையை அவன் உணர்ந்தான் சபையிலிருந்து ஏதோ ஒன்றை பெற்றுக் கொள்ளும்படியாகவே ஜனங்கள் சபைக்கு வருகிறார்கள். போதகர் அல்லது ஊழியர் அழகான பிரசங்கத்தை அவர்களுக்கு பண்ணுகிறார். இதன் மூலம் சபைக்கு வந்ததான அவிசுவாசி ஒருவனின் அந்தரங்கம் வெளியரங்கமாவதில்லை. தீர்க்கதரிசன உரைக்கப்படுமானால் அவனுடைய அந்தரங்கம் வெளியரங்கமாகும். அவ்வாறு வரம் கிரியை செய்யாவிடில் அவிசுவாசி ஒருவன் தான் எப்படி சென்றானோ அப்படியே மனந்திரும்பாமல் வீடு வந்து சேருகிறான். கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு பாவிகளை இரட்சிக்கர் என்று உலகிற்கு அறிவிக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கால்வாய் என்பதை நனகு அறிந்திருக்கிறோம். சபையானது ஒரு மனிதன் மாத்திரம் தனித்து இயங்கும் இடமில்லை. ஜீவனுள்ள தேவனின் அவயவமாய் இருக்கிற எல்லா அங்கத்தினரும் தேவனால் உபயோகப்படுத்தப்படும் வாய்க்காலாகும் மூப்பருக்கும் ஊழியருக்கும் போதகருக்கும் ஒரு குறிப்பிட்ட ஊழியம் உண்டு ஒரு போதகன் அப்போஸ்தலனாகவோ ஊழியனாகவோ சுவிசேஷகனாகவோ இருக்க முடியாது போதகர் எப்பொழுதும் தீர்க்கதரிசன ஊழியத்தை செய்து கொண்டிருக்க முடியாது. போதகரின் ஊழியம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டது குறிப்பிட்ட எல்லைக்குள்ளே தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார் வித்தியாசமன வரங்களும் ஊழியமும் சந்தித்து ஒன்றை ஒன்று எங்கே சந்திக்கிறதோ அங்கே தேவன் தம்முடைய வல்லமையை முழுமையாக வெளிப்படுத்துகிறார். அங்கே ஒவ்வொருவரும் தங்களுக்கு அருளப்பட்ட வரங்களை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த வரங்களின் நிறைவோடு தேவனுடைய சபையிலே கூடிவருகிறபோது அவிசுவாசி ஒருவன் வருவானாகில் அவன் தனக்கென்று ஒன்றை பெற்றுக் கொள்கிறான். தேவனுடைய பிள்ளைகள் சபையிலே கூடிவரும் போது மேய்ப்பனின் தூதினால் ஆறுதலடைவார்கள். சிலர் போதகரின் தூதினால் ஆவிக்குள்ளே அதிகமாக பெலப்படுத்தப்படுகிறார்கள். சபையின் மூலையிலே ஆராதித்து கொண்டிருந்ததான சகோதரனால் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தினால் சிலர் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். தன்னுடைய கரங்களைஒரு சகோதரியின் மேல் வைத்து ஜெபித்தபோது அந்த சகோதரி

எவ்விதம் சுகமடைந்தாள் என்றும், தேவன் தன்னுடைய ஊழியத் தினிமித்தம் எவ்விதம் ஆத்துமாக்களை இரட்சித்தார் என்றும் சுவிஷேகன் தன்னுடைய சாட்சிகளை சபையின் நடுவிலே பகர்ந்து கொள்ளும் போது அவைகள் ஒவ்வொருவரையும் தொடுகிறது.

தேவனுடைய சரீரத்திலே வித்தியாசமான பணிகளை செய்கிற ஊழியர்களின் நடுவிலே ஒற்றுமை காணபபட வேண்டும். இவை களைப் பற்றிய காரியங்களைக் குறித்து அப். பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டு நிருபங்களிலும் எழுதியிருக்கிறான். கொரிந்து சபையிலே ஒற்றுமை காணப்படுவதில்லை (I கொரி 1:10-17) (3:1,9) அவர்கள் நடுவே பொறாமை, போராட்டம், சண்டைகள் காணப் பட்டது. அங்கே காணப்பட்டதான பிரச்சினைகளை சபையின் மூப்பர்களால் தீர்க்க முடியவில்லை. அல்லது மூப்பர்களே அந்த பிரச்சினைக்கு காரணமாயிருக்கலாம். போராட்டமானது சபையின் மூப்பர்களின் நடுவிலே எழும்பியிருக்கலாம். எவ்விதமிருப்பினும் சபையின் பிரச்சினைகளை எவராலும் சமாளிக்க இயலவில்லை. அவர்களால் அதற்கான தீர்வை காண முடியவில்லை. ஆனால் அங்கே ஒரு ஊழியம் மாத்திரம் நிறைவு பெறாமலிருந்தது. அதுதான் அப்போஸ்தல ஊழியம். அந்த ஊழியத்தின் மூலம் சபையின் நிலை முற்றிலும் மாறிற்று. அப். பவுலுக்கு தேவன் அப்போஸ்தல ஊழியத்தைக் கொடுத்திருந்தார். கொரிந்து சபையிலுள்ள பிரச்சினையை கேள்விப்பட்ட பவுல் அங்கே செல்லுகிறான் (I கொரி 1 11) அப்போஸ்தலர்கள் ஒரு சபைக்குள் மாத்திரம் கட்டுப் பட்டவர்கள் அல்ல இவர்கள் தேவ ஆவியானவரின் வழிநடத்து தலின்படி ஒரு சபையிலிருந்து அடுத்த சபைக்கு பிரயாணப்பட்டு போகிறவர்கள் இவர்கள் பெரிய அரங்கத்திலே கூட்டத்திலே முக்கிய பேச்சாளர்களாகவும் காணப்படுகிறார்கள். எல்லா சபைகளிலும் ஸ்தாபனங்களிலுமிருந்தும் ஜனங்கள் இவர்களுடைய போதனைகளை கேட்க கூடி வருகிறார்கள். இவர்கள் மனந்திரும்பாதவர்களின் நடுவிலேயும் பிரசங்கிக்கிறார்கள். இவர்கள் சபையிலும் இரட்சிக்கப் படாத ஜனங்களின் நடுவிலும் தேவனுடைய ஊழியத்தை வல்லமை யாய் செய்கிறார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலர் 8ம் அதிகாரத் திலே மிகத் தெளிவாக பார்க்கலாம். மனந்திரும்பாதவர்களின் நடுவிலே பிலிப்பு தேவனுடைய ஊழியத்தை செய்ததினிமித்தம் ஜனங்கள் மனந்திரும்பினார்கள். அந்த இடத்திலே புதிய சபை உருவான போது மேலும் ஊழியங்கள் நடைபெற வேண்டியதாயிருந்த படியானால் எருசலேமிலிருந்து வந்ததான இரண்டு அப்போஸ்தலர் களின் கரங்களிலே அந்த பணியை தொடர்ந்து செய்யும்படியாக பவுல் ஒப்புக் கொடுத்தான். அந்த அப்போஸ்தலர்கள் மனந்திரும்பின சபை களுக்கு ஏற்ற தூதை பிரசங்கித்தார்கள். புதிதாய் மனந்திரும்பின கிறிஸ்ததவர்களின் மேல்தங்களுடைய கரங்களை வைத்தபோது

அவர்கள்பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். வேதத்தின் ஒழுங்கு எத்தனை மகத்துவமானது பாருங்கள் சுவிசேஷகன் எப்பொழுதும் மனந்திரும்பாதவர்களின் நடுவிலே ஊழியம் செய்கிறான். அப்போஸ்தலர்களோ மனம்திரும்பாதவர்களின் நடுவிலேயும் சபைகளிலும் தேவனுடைய ஊழியத்தை செய்கிறார்கள் இவர்கள் சபையிலே தேவனுடைய வசனத்தை பிரசங்கிக்கிறதான வேலைகளில் சபையின் அங்கத்தினருக்கேற்ற தூது அவர்களிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. மூப்பர்களுக்கு அங்கே செய்தி கொடுக்கப்படுகிறது. அங்கே மூப்பர்கள் சபையின் அங்கத்தினர்களோடும் போதகரோடும் சுவிசேஷகர்களோடும் மேய்ப்பர்களோடும் ஆழமான விசுவாசத்தையும் புதிய தரிசனத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

அநேக சபைகள் தங்களுக்குள் எழும்பினதான சண்டைகளினாலும் போராட்டங்களினாலும் தங்களுடைய ஆவிக்குரிய நிலையிலே ஸ்தம்பித்து காணப்படுகிறார்கள். காரணம் அப்போஸ்தல ஊழியத்தை நிறைவேற்றி வருகிறதான நபரோடு அவர்களுக்கு தொடர்பு இல்லை. அப்போஸ்தலர்கள் தேவனுடைய ஆவியினாலே வழி நடத்தப்பட்டு பிரச்சனைகள் அதிகமாக காணப்படுகிற சபைகளுக்கு வருவார்களே யானால் அவர்களுடைய சொந்த அனுபவத்தினாலும் ஆவிக்குறிய ஞானத்தினாலும், வெளிப்படுதலினாலும் சபையிலே காணப்படுகிற தவறுகளை சுட்டிக்காட்ட முடியும். ஆனால் மூப்பர்களாலோ அங்கத்தினர்களாலோ முடியவில்லை. காரணம் பிரச்சினையிலும் பாரம்பரியத்திலும் ஜனங்கள் குருடாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

இங்கே அப். பவுல் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி தெளிவாக கூறுகிறான். ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், அற்புதங்களை செய்தல், தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவியை பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் போன்ற வரங்களைப்பற்றி Iகொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் விளக்கமாக கூறியிருக்கிறார். மேலும் ஊழியம் செய்தல், போதித்தல், புத்தி சொல்லுதல், பகிர்ந்து கொள்ளுதல், இரக்கம் செய்தல் போன்றதான வரங்களைக் குறித்து I கொரி 12 : 28 ல் வாசிக்கலாம். இன்னும் அநேக விதமான ஊழியங்களை செய்யும் ஊழியர்கள் உண்டு. அவர்கள் யாரெனில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், அற்புதங்களை செய்கிறவர்கள் குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளை ஏற்படுத்துகிறவர்கள் (எபே 4 : 11) இந்த பட்டியலோடு சுவிசேஷகர்களையும் போதகர்களையும் சேர்த்து நீட்டிக் கொண்டே போகலாம். இவ்விதமாக சபையானது வித்தியாசமான அங்கத்தினர்களோடும் ஊழியர்களோடும் கிரியை செய்கிறது. எனக்குத் தெரிந்ததான எல்லா சபைகளுக்காகவும் நான் ஒரு நாள் அதிக பாரத்தோடு

ஜெபித்துக் கொண்டிருந்தேன். சில மணி நேரமாக நான் இவ்விதமாக ஜெபித்தேன், ''ஆண்டவரே அநேக வரங்களும், ஊழியங்களும் உம்முடைய சரீரமாகிய சபையிலே உண்டு. ஆனால் ஏன் ஒரு சில வரங்கள் மாத்திரம் சபையிலே காணப்படுகிறது. எல்லா சபைகளிலும் உண்மையான ஊழியமாகிய மேய்ப்பனின் ஊழியத்தை மாத்திரம் நான் காண முடிகிறது. ஆண்டவரே மற்ற ஊழியங்களும் வரங்களும் எங்கே'' என்று தேவனிடத்திலே கேட்டேன். I கொரி 12 : 23 ஐ வாசிக்கும்படியாக தேவன் என்னோடு பேசினார். உடனே என்னுடைய வேதத்தை திறந்து வாசித்தேன். ''தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலர்களையும் இரண்டாவதுதீர்க்கதரிசிகளையும் மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும் பின்பு குண மாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்'' என்று நான் வாசித்து முடித்ததும் தேவனோடு நான் பேச ஆரம்பித்தேன். ஆம், ஆண்டவரே இந்த வசனத்தை நான் நன்றாக அறிவேன். சபையிலே இப்படிப்பட்ட ஊழியங்கள் காணப்படவில்லையே ஏன்? அதற்கான பதிலை நீர் எனக்கு சொல்லும் என்று நான் தேவனிடத்தில் நான் கேட்டேன். மறுபடியுமாக I கொரி 12 : 28ஐ வாசிக்கும்படியாக தேவன் என்னோடு பேசினார். அவைகளை வாசித்தும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தேவ சப்தத்திற்கு கீழ்படிந்து அநேகமுறை அந்த பகுதியை வாசித்தேன் ''தேவன் சபையிலே ஏற்படுத்தியிருக்கிறேன்'' என்று அங்கே எழுதப்பட்டிருக்கிறது. இந்த வகையான ஊழியங்கள் சபையிலே ஏற்கனவே எற்படுத்தப்பட்டாயிற்று என்று தேவன் கூறினார். இனிமேல் அவர் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே தேவன் அவைகளை சபைகளிலே ஏற்படுத்திவிட்டார்.

ஆண்டவரே, ''இவ்விதமான ஊழியங்கள் சபைகளிலே ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பின்பும் ஏன் ஒரு சில ஊழியங்கள் மாத்திரம் சபையிலே காணப்படுகிறது என்று மறுபடியுமாக தேவனிடத்தில் ஜெபித்தேன். அப்பொழுது தேவன் என்னோடு பேசினார். அவைகளை நான் ஒருபோதும் மறக்க முடியாது. ''என் மகனே என்னுடைய பிள்ளைகளில் அநேகர் 'தாங்கள் யார்' என்பதை இன்னும் அறிந்திருக்கவில்லை. உன்னுடைய கேள்விக்கான காரணம் இதுவே'' என்று தேவன் என்னிடம் கூறினார். இந்த புத்தகத்தை எழுதின நோக்கமும் இதுவே. அநேக கிறிஸ்தவர்களின் நடுவே அப்போஸ்தலர்கள், போதகர்கள், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள், அற்புதங்களைச் செய்கிறவர்கள், குணமாக்கு கிறவர்கள் இன்னும் அநேகவிதமான வரங்களும் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களில் அநேகர் 'தாங்கள் யார்' என்பதை அறிந்துகொள்ள வில்லை. பவுலும் 'தான் யார்' என்பதைக் குறித்து அநேக வருடங் களாக அறிந்திருக்கவில்லை. ஆகவே அந்த நாட்களில் கனியற்றீ வனாகக் காணப்பட்டான். அதனால் கிறிஸ்தவர்களை அதிகமாக

துன்புறுத்தினான். (கலா 1:15) தாயின் வயிற்றிலிருக்கும் போதே அவரை அப்போஸ்தலனாக்கும்படி தேவன் அவரை முன்குறித்தார் என்று கலா 1:15ல் வாசிக்கிறோம். மனம் திரும்புவதற்கு முன்பு பவுல் நடந்து கொண்ட முறையைப் பார்த்து தேவதூதர்கள் இவ்விதமாய் பேசியிருக்கலாம். ''ஆயிரக்கணக்கான ஜனங்களை மீட்பில் நடத்தி முழு ரோம சாம்ராஜ்யத்தையும் அசைக்கப்போகிற தான தேவனுடைய அப்போஸ்தலன் இதோ போகிறான்'' என்று பேசியிருக்கலாம். அந்த நாட்களில் 'தான் யார்' என்பதை பவுல் அறியாதிருந்தான். கிறிஸ்தவர்களை துன்புறுத்தும்படியாக பவுல் தமஸ்குவுக்கு சென்று கொண்டிருந்தான் அங்கே தேவன் அவனை சந்தித்தார். அங்கே அவனில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்நிமிடம் முதற்கொண்டு தான் யார் என்பதை அவன் நன்கு அறிந்து கொண்டான். அறிந்த அவன் மிகுந்த கனிகளை கொடுத்-தான். ஒருவேளை இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் உங்கள் வாழ்வில் தேவனுக்காக சில கனிகளை மாத்திரம் கொடுக்கிறவர்களாக இருக்கலாம். அல்லது கனியற்றவர்களாக ஜீவிக்கலாம். கர்த்தருடைய தூதை கேட்பதற்காகவே நாம் ஆலயத்திற்கு வருகிறோம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இதை வாசித்த பின்போ உங்களைக் குறித்து அதிகமாக அறிந்து கொண்டீர்கள். தேவன் 'நீங்கள் யார்' என்று அறிந்து கொண்ட உங்கள் மூலம் தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை சபைக்கு பொழிந்தருளும்படியாக விரும்புகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக தேவ சமூகத்திலே அதிக நேரத்தை செலவழிக்கிறவர்களையே தேவன் உபயோகிக்க விரும்புகிறார். மாமிசத்தோடும் நரகத்தின் வல்லமையோடும் பிரச்சினையோடும், வியாதியோடும் அறியாமையோடும் போராடவல்ல மிகப்பெரிய வல்லமையுள்ள ஆயுதம் ஜெபமேயாகும். அதிகமாக ஜெபிக்கிற மனிதன் ஆவிக்குரிய போராட்டங்களில் தோற்றுப் போனதில்லை தோற்றுப் போவதுமில்லை. ''நீங்கள் விண்ணப்பம் பண்ணவில்லை ஆகையால் பெற்றுக்கொள்ளவில்லை'' என்று யாக் 4:2ல் சொல்லபபட்டிருக்கிறது. நம்முடைய சபைகளில் வளர்ச்சி காணப்படாததின் இரகசியம் யாதெனில் அங்கே ஜெபமில்லை ''ஜெபிப்பதற்கு எனக்கு நேரம் இல்லை. கிடைக்கிற கொஞ்ச நேரம் மாத்திரம் ஜெபிக்கிறேன்'' என்று பெரும்பாலான போதகர்கள், மூப்பர்கள், ஊழியர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். கேட்பதற்கே விநோதமாயிருக்கிறது. பொழுதை போக்க இவர்களுக்கு நேரம் உண்டு; வாகனத்தை ஓட்டிச் செல்ல நேரமுண்டு; தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்ப்பதற்கு நேரம் உண்டு; ஆனால் ஜெபிப்பதற்கு நேரமில்லை. கேட்பதற்கே விநோதமாயிருக்கிறது. வேடிக்கை பொருட்களினாலும் சொந்த வேலையினாலும் அநேக ஜெப கால்வாய்கள் அடைபட்டு கிடக்கின்றன. அதன் விளைவு யாதெனில் சபையின் வளர்ச்சியில் ஒரு தனிப்பட்ட மனிதனின் முயற்சி அதிகமாகத் தேவைப்படுகிறது.

போதகர்கள் அல்லது ஊழியர்கள் மாத்திரமே எதையும் செய்ய விரும்பும் வாய்க்காலாக இருக்கிறார்கள். அநேக சபைகளில் இந்த கால்வாயும் அடைபட்டிருக்கிறது. காரணம் போதகர்களில் அநேகர் அழகாக பிரசிங்கிக்கிறார்கள். அருமையான சகோதர சகோதரிகளே நான் ஒரு காரியத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். அருமையான பிரசங்கத்தினாலும் மனிதனுடைய பிரயாசத்தினாலும் சபைகளை கட்ட முடியாது. ஜெபத்தினால் மாத்திரமே சபைகளைக் கட்ட முடியும். சபையிலே ஜெபங்கள் காணப்படவில்லையாகில் நாம் பாடுகிற அருமையான பாடல்கள், முகத்தில் காணப்படும் தியாகத்தின் புன் சிரிப்பின் நடுவிலும் சபையானது சாத்தானுடைய வல்லமையினாலும் அவனுடைய சர்வ சேனையினாலும் கட்டப்பட்டிருக்கும். நரகத்திலே ஒருவிதமான பயம் கர்ணைப்படும் என்பதை நான் கண்டுகொள்ள தேவன் உதவி செய்தார். சாத்தானும் அவனுடைய சர்வ சேனையும் சபையின் மேல் விழிப்பாயிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய சமூகத்தை தினமும் தேடுவார்களேயாகில் உன்னதத்தின் வல்லமையினாலே தரிப்பிக்கப்படுவார்கள். சபையிலுள்ள அங்கத்தினர்கள் தினமும் ஒரு மணி நேரமாவது ஜெபிக்க வேண்டும். ஒரு நாளில் ஒரு மணி நேரம் என்றால் அது மிகவும் சொற்பமான நேரமாகும். ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தேவனோடு தன்னை ஐக்கியப்படுத்தும் மிகக் குறுகிய நேரம் அதுவே.

நான் ஒரு நல்ல கிறிஸ்தவனாக இருப்பதினால் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கீழ்படிய வேண்டிய அவசியம் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். இரண்டு காரியத்தைக் குறித்து நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஜெபிக்காத கிறிஸ்தவன் பாவத்தில் ஜீவிக்கிறவன் ! சாமு 12 : 23ல் எழுதப்படடிருக்கிறதை வாசியுங்கள். இரண்டாவதாக ஜெபம் என்பது தேவனுடைய கட்டளையாயிருந்தும் கீழ்படியாவிடில் அதனால் ஏற்படும் விளைவைக் குறித்து விளக்கமாக சொல்ல விரும்புகிறேன். (லூக்கா 18 : 1) யோசுவா 7 : 1-26) இஸ்ரவேலில் போர்ச்சேவகனான ஆகானின் கீழ்படியாமையைக் குறித்து இங்கே வாசிக்கலாம். இஸ்ரவேலர் கைப்பற்றினதான ஆயி பட்டணத்திலிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாதபடிக்கு விலக்கியிருந்த தான மிகச் சிறிய பொருளை ஆகான் வஞ்சித்து எடுத்துக் கொண்டான். ஒரு சிறிய கீழ்படியாமைக்கு ஒரு பெரிய தண்டனை கொடுக்கப்பட்டது. பெரிய தண்டனையை நிறைவேற்ற ஏன் தேவன் சித்தம் கொண்டார் என்பதை அறியும்படியாக தேவன் கிருபை செய்தார். ஆகான் பாவம் செய்த போது இரண்டு காரியங்களைக் குறித்து ஒருபோதும் உணர்ந்ததில்லை. முதலாவது காரியம் தான் செய்ததான காரியத்தை ஒருவரும் அறிந்திருக்கவில்லை என்று நினைத்தான். ஆனால் தேவன் அவைகளைக் கவனித்திருந்தார். வெளியரங்கமாக தேவனுக்குப்பயந்த கிறிஸ்தவர்களைப் போல் தோற்றமளித்தாலும் நித்தமும் தேவனுடைய

முகத்தை தேடி தனிமையில் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து அவருடைய வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் கீழ்படிகிறோமே என்பதை தேவன் அறிவார். நம்மில் பாவம் காணப்படுமானால் தேவன் நம்மைக் குறித்து அறிந்திருக்கிறவர் என்ற உணர்வு நம்மில் காணப்பட வேண்டும். அவருடைய பார்வைக்கு மறைவாய் ஒன்று மில்லை. நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு கூட மறைக்கப்படுகிற காரியம் தேவனுடைய பார்வைக்கு மறைவாய் இருப்பதில்லை.

தேவனுக்கு கீழ்படியாத போதோ ஆகான் ஒரு காரியத்தை உணர்ந்து கொள்ள மறந்து போனான். ஆகான் பாவம் செய்தபோது தேவ பிரசன்னம் இஸ்ரவேல் ஜனங்களை விட்டு நீங்கிற்று. அருமை யான சகோதர சகோதரிகளே நாம் தினமும் அவருடைய சமூகத்தில் முழங்காற்படியிட்டு அவருடைய முகத்தை தேடாமல் போவோ மானால் சபையிலே தேவ வல்லமையை தேவன் விரும்புகிற அளவில் காண இயலாது. தேவன் நம்மேல் கோபமாயிருப்பதினாலல்ல, ஜெப மாகிய வாய்க்கால் மூடப்பட்டதினாலே தேவ பிரசன்னம் சபையிலே காணப்படவில்லை. ஜெபமாகிய வாய்க்கால் திறக்கப்பட்டே இருக்கு மேயானல் நாம் தேவவல்லமையினாலும் அன்பினாலும் முழுமை யடைகிறோம். ஜெபத்தினால் தேவனோடு ஐக்கியப்படாவிட்டால் தேவ வல்லமையை நம் மத்தியில் காண முடியாது நமக்கு ஜெபிப்பதற் கேற்ற சூழ் நிலையுள்ள நல்ல சபை இருந்தால் நல்லது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் தேவன் நல்ல சபைகளை தேடிக்கொண்டி ருக்கவில்லை. சாத்தானோடு எந்த வேளையிலும் போராடும் சபை களையே அவர் தேடிக் கொண்டிருக்கிறார். சபையை ஆசீர்வதிக்கும் படியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வாய்க்கால் நாமே. சாத்தானோடும், அவனுடைய சர்வ சேனையோடும், உலகத்தோடும் நம்மில் காணப்படுகிற பாவத்தோடும் போரிட்டு ஜெயிக்கும்படியாக அழைப்பை பெற்றுக் கொண்டதுதான் இந்த சபை. நாம் உலகம் எங்கும் போய் சர்வ ஜாதிகளையும் தேவனுடைய சீஷர்களாக்கும்படி கட்டளை பெற்றிருக்கிறோம் (மத் 28 : 19) இஸ்ரவேலர்களுக்கோ சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுதலையடையும் படியாகவும், தேவ கட்டளையை நிறைவேற்றும் படியாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதன் தரிக்கும்படியாகவும் தேவவல்மை அவர்களுக்கு மிகவும் தேவையாயிருந்ததுபோல இவைகளிலிருந்து விடுவிக்கப்பட நமக்கும் தேவ வல்லமை தேவையாயிருக்கிறது.

ஆகான் தேவனுக்கு கீழ்படியாததினால் தேவ வல்லமை இஸ்ரவேலிலிருந்து எடுபட்டு போயிற்று. மிகவும் சிறிய பட்டணமாகிய ஆயி பட்டணத்திற்கு எதிராக நடந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டனர். இந்த முறியடிப்பு பெரிய விளைவை உண்டு பண்ணியது. முதலாவது அந்த யுத்தத்திலே 36 பேர் மாண்டார்கள். அவர்கள் மிகுந்த துக்கத்தினால் தங்கள் வஸ்திரங்களை கிழித்தனர்,

நூற்றுக்கணக்கான குழந்தைகள் தகப்பன் மடியிலே தவழ்ந்து விளையாட முடியாதபடி மிகுந்த வேதனையடைந்தன. துக்கம் அவர்கள் இருதயத்தை பிளந்தது. இரண்டாவதாக சிறிய பட்டணத்திலே தோல்வியை கண்டபடியினால் புறஜாதியார் தேவ நாமத்தை பரிகாசித்தனர். இஸ்ரவேலின் தேவனைப் பார்க்கிலும் எங்கள் தேவர்கள் பெரியவர்கள் என்று அநேக புறஜாதியார் கூறினார்கள். இஸ்ரவேலின் தேவனைப் பார்க்கிலும் எங்களுடைய தேவர்கள் பெலனுள்ளவர்கள் என்றனர். இதனிமித்தம் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டது. ஆகானுக்கு தேவன் ஏன் பெரிய தன்டனையை வழங்கினார் என்பதைக் குறித்து இப்பொழுது புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். யோசுவா 22:20 வேதத்திலே மிகவும் வருந்ததக்க பகுதியாகும். தன்னுடைய அக்கிரமத்தினாலே அவன் மாத்திரமல்ல அவனுடைய மனைவி, பிள்ளைகள் உறவினர்களாக முப்பத்திஆறு பேர் மாண்டார்கள்.

இதைப் போலவே கிறிஸ்துவின் சபையும் திகழுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் அதிக நேரத்தை வேத வாசிப்பிலும் ஜெபத்தினாலும் செலவிடாமல் சிறிது நேரம் மாத்திரம் ஜெபத்திலே இருந்து விட்டு அதிக நேரத்தை தொலைக்காட்சிப் பெட்டியின் நிகழ்ச்சிகளிலும் நேரத்தை செலவழிப்போமானால் நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களின் நித்திய மரணத்திற்கு நாம்தான் காரணம். இதனால் பாவிகள் நித்தியத்தை இழப்பது மாத்திரமல்ல தேவ நாமம் புறஜாதிகளின் மத்தியிலே தூஷிக்கப்படும். நாம் மாய்மாலக்காரர்கள் என்று உலக மக்கள் நம்மைக் குறித்து எண்ணுவார்கள். ஞாயிறு ஆராதனையிலே பயபக்தியாய் உட்கார்ந்திருக்கிறோம். வெளியே ஏமாற்றமும் தேவனுக்கு விரோதமான கிரியைகளில் ஈடுபாடு உடையவர்களாயிருக்கிறோம். இது முற்றிலும் உண்மை. நண்பர்களே சற்று சிந்தியுங்கள். சபையான உலகத்திற்கு உப்பாயிருக்க வேண்டும். முழு வல்லமையினாலும் அன்பினாலும் மகிமையினாலும் நிரப்பப்பட வேண்டும். ஆனால் இப்போதோ நம்முடைய அசுத்த கிரியைகளினால் ஒருவரும் நன்மையடைய முடியாதபடி காணப்படுகிறது. சபையும் உங்களைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களும் ஆசீர்வதிக்கபட வேண்டுமானால் நாம் தேவன் உபயோகிக்கும் வாய்க்காலாக இருப்போமானால் எத்தனை மகிமையானது.

நீங்கள் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறீர்கள்

இங்கே நான் உங்களுக்கு எழுதப்போகிறதான செய்தியை என்னுடைய தேசத்திலும் பிறதேசத்திலுமுள்ள சபையிலே பிரசங்கித்த போது தேவ ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்தார் தேவனிடத்திலிருந்து எத்தனை மகிமையான வல்லமையையும் அதிகாரத்தையும் நாம் பெற்றுக்கொண்டோம் கிறிஸ்தவர்களாகிய நாம் உணர்ந்து கொள்ளும் போது நம்முடைய கரங்களை உயர்த்தி தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். ஆகவே நான் உங்களை ஒரு முக்கியமான வேத பகுதிக்கு உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். (எபே 1 : 20 - 23) ''எல்லா துரைத் தனத்துக்கு அதிகாரத்துக்கும் வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக. அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பரிசத்தில் உட்காரும்படி செய்து எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலாக தலையாக தந்தருளினார்''

மேற்கண்ட வேதபகுதியில் 3 காரியங்களை குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) கிறிஸ்து பிதாவின் வலது பரிசத்தில் வீற்றிருக்கிறார்.

(2) எல்லா துரைதனத்துக்கும், அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கிற எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்ந்தவராயிருக்கிறார்.

(3) எல்லாம் அவர் பாதங்களுக்கு கீழ் இருக்கிறது.

கிறிஸ்துவானவர் பிதாவிற்கு கீழ்ப்படிந்தவராம் எல்லாவற்றிற்கு மேலாக உயர்ந்தவராயிருக்கிறார். கிறிஸ்து தாமே இரண்டு விதமான தன்மைகளை தம்மில் கொண்டவர். முதலாவதாக அவர் தேவனாயிருக்கிறார். இரண்டாவதாக அவர் மனிதனாயிருக்கிறார். அவர் பிதாவிற்கு சமமானவராயிருந்தும் எல்லா நாமத்திற்கும் மேலாக

உயர்ந்தவராயிருந்து பிதாவிற்கு கீழ் அடங்கியிருக்கிறார். என்று வேதம் சொல்லுகிறது உலகத்திலுள்ள அனைத்தையும் சிருஷ்டித்த தேவன் வானத்திலும் உயர்ந்தவராயிருக்கிறார் பூமியிலும் உயர்ந்தவராயிருக்கிறார். அவர் மிகவும் கனத்திற்குறிய இடமாகிய பிதாவின் வலது பரிசத்திலே வீற்றிருக்கிறார். கிறிஸ்து சஞ்சரித்த நாட்களிலே இஸ்ரவேலர் மிகவும் கனத்திற்குறிய விருந்தினர்களை விருந்தளிப்பவர்களின் வலது பக்கத்திலே உட்காரும்படி செய்வர். கிறிஸ்து தாமே எல்லா துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கிறார் கிறிஸ்து தாமே உலகத்தின் அதிபதிகளின் மேல் மாத்திரமல்ல சாத்தான் மேலும் அவனுடைய சர்வ சேனையின் மேலும் அதிகாரமும் வல்லமையும் உடையவராயிருக்கிறார் (எபே 6 : 12) வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரமும் கிறிஸ்து ஒருவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது, சாத்தானுக்கு அல்ல என்பது நாம் அறிந்த உண்மையாகும். கிறிஸ்துவானவர் எல்லாவற்றிற்கும் மேலான நாமம் உடையவராயிருக்கிறார். என்று மத் 28 : 19ல் காண்கிறோம் நம்முடைய பிரச்சினைகள், வியாதிகள். முடியாமையின்மைகளை தகர்த்தெறியும் நாமம் இயேசுவின் நாமமே. வியாதி, வேதனை, பயம், துன்புறத்தல் இவை யாவும் நம்மை காட்டிலும் பெலனுள்ளவைகளாயிருந்தாலும் தேவனுடைய வல்லமைக்கு எதிராக இவைகள் நிற்கலாகாது கிறிஸ்து தாமே எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் உடையவராயிருக்கிறார்.

பிதாவினால் எல்லாம் கிறிஸ்துவின் பாதத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது உலகத்திலுள்ள சகலமும் அவருடைய பாதத்தின் கீழிருக்கிறது. அவரால் எல்லாம் கூடும். எல்லாம் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. மனிதனுடைய கண்களுக்கு முன்பாக மேன்மையானதாக எண்ணப்படுகிற மாறாத கட்டளைகளும், சாத்தானும், அவனுடைய சர்வ சேனையின் வல்லமையும், எல்லாவிதமான வியாதிகளும், பிரச்சனைகளும், அதிகாரிகளும், அவர்களின் அதிகாரங்களும் எவ்விதமாய் இருப்பினும் இவை யாவும் அவருடைய பாதத்தின் கீழிருக்கிறது.

இயேசு இந்த பூலோகத்திலே சஞ்சரித்த நாட்களில் வியாதியஸ்தர்களை குணமாக்கினார், லேகியோன் பிசாசை அந்த சரீரத்தை விட்டு போகும்படியாக கட்டளையிட்ட போது. அது அவனுக்கு கீழ்படிந்து சரீரத்தை விட்டு ஓடிற்று (மத் 12:15) (மாற்கு 5:1-13) புவிஈர்ப்பு விசையின் கோட்பாட்டிற்கு தேவன் மேல் வல்லமையில்லை. ஏனெனில் இயேசு கிறிஸ்து தண்ணீர் மேல் நடந்து வந்தார் (மத் 14-22-33) மேலும் அவர் பூலோகத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (அப் 1:9) ஆகாரம் குறைவாயிருந்த

போது 5 அப்பத்தையும் இரண்டு மீனையும் ஆசீர்வதித்து பெருகப் பண்ணி ஆயிரக்கணக்கான ஜனங்கள் சாப்பிட்டு திருப்த்தியடையும்படி அதை ஆசீர்வதித்தார். இவைகளின் மூலம் தேவன் தம் வல்லமையை ஜனங்களுக்கு வெளிப்படுத்தினர். (மத் 14 : 13-21) (கொ 1 : 16) காற்றும் கடலும் அவருக்கு கீழ்படிந்தது. அவர் காற்றையும் கடலையும் அதட்டின போது அவைகள் அமைதலாயிற்று (மத் 8:23-27) மரணமும் அவருடைய பாதத்தின் கீழிருந்தது. அது எவ்விதம் என்று கேட்போமானால் லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாள் கழித்து இயேசு அழைத்தபோது அவன் உயிர் பெற்றான் (யோ 11 : 1-44) இயேசுதாமே சிலுவையிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்ட பின்பு மூன்று நாள் கழித்து உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:1-53) தேவனுடைய வலது பரிசத்திலே வீற்றிருக்கிறபடியால் அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவராய் இருந்தார்.

இத்தனை மகிமையான இயேசு நமக்கு இருக்கிறபடியால் நாம் எத்தனை சந்தோஷமுடையவர்களாயிருக்க வேண்டும். இவர், வியாதிகளை சுகமாக்க வல்லவர் சாத்தான் மேலும், சர்வ சேனையின் மேலும் அதிகாரம் உடையவர், எல்லா பிரச்சினைகளையும் தீர்க்க வல்லவர். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எவ்வளவு வல்லமை உடையவராயிருந்தும் அநேக ஜனங்கள் இயேசுவைக் குறித்து இவ்விதமாய்ச் சொல்லுகிறார்கள். "இயேசுவின் வல்லமை பெரியதாயிருந்தாலும் அவைகளால் நமக்கு என்ன பிரயோஜனம் பிதாவின் வலது பரிசத்தில் வீற்றிருக்கிற அவரின் பாதத்தின் கீழ் சகலமும் இருக்கிறது. ஆனால் நானோ இந்த பூமியில் நிலையற்று அலைந்து கொண்டிருக்கிறேன். நான் தினமும் வியாதியினால் கஷ்டப்படுகிறேன். என்னுடைய பிரச்சனைகள் மிகவும் அதிகமாயிருக்கிறது. சாத்தான் என்னோடு விளையாடுகிறான் என்ற எண்ணம் எனக்குண்டாயிற்று. நானும் தேவனுடைய வல்லமையை விசுவாசிக்கிறேன், அவர் பூலோகத்திலே சஞ்சரித்த நாட்களில் எல்லா வல்லமையும் உடையவராயிருந்தார். ஆனால் இப்பொழுதோ பரலோகத்திலே இருக்கிறார். பரலோகத்திற்கும் நமக்கும் வெகுதூரம் நாமோ பூலோகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே பூலோகத்திலே இருக்கிற நமக்கோ பரலோகத்தை எட்டி பிடிப்பதென்றால் வெகுதூரம். ஆகவே சாத்தான் தன்னுடைய திட்டத்தை என்னில் நிறைவேற்ற விரும்புகிறான்" என்று சிலர் நினைக்கிறார்கள்.

நண்பர்களே அநேக ஜனங்கள் இவ்விதமான எண்ணம் உடையவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் இயேசுவையும் அவருடைய வல்லமையையும் விசுவாசிக்கிறார்கள். இயேசு அதிக தூரமாகிய பரலோகத்திலே வீற்றிருக்கிறார். பிசாசினால் அடிக்கடி தோற்கடிக்கப்படுவது சர்வ சாதாரணமான ஒரு காரியம் என்று நினைக்

கிறார்கள். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் எபி 13 : 8 ல் சொல்லப்பட்டது போல அவர்கள் விசுவாசித்து நடக்க முன்வருவதில்லை. இயேசு தாம் சஞ்சரித்த நாட்களில் மாத்திரம் வல்லமை யுள்ளவர் என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் தாம் வாழ்ந்து கொண்டிருக்கிற நாட்களிலும் வரும் நாட்களிலும் அவர் வல்லமையுள்ளவர் என்பதை அவர்கள் விசுவாசிப்பதில்லை. இதற்காகவே தேவனுடைய வேதத்திலிருந்து சில வசனங்களை உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. நான் உங்களுக்கு எழுதினவைகளை கருத்தாய் வாசித்து உணர்ந்து கொள்வீர்களானால் அவைகளால் உங்கள் ஜீவியத்தில் பெரிய மாறுதல் ஏற்படும்.

இயேசு கிறிஸ்து தாமே மரித்து உயிர்ந்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்பதைக் குறித்து நாம் முன்னமே அறிந்து கொண்டோம். இவர் சர்வ அதிகாரமும் வல்லமை யுமுடையவராயிருந்தார். எல்லாம் அவருடைய பாதத்தின் கீழிருந்தது. மேலும் ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோட கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்'' என்று எபே 2 : 7ல் எழுதப்பட்டிருக்கிறது அப்படியானால் நாம் ஆவிக்குள்ளே கட்டப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் ஒரே ஆவியை உடையவர்கள் (I கொரி 6 : 17) நம்முடைய ஆவி எங்கேயோ அங்கே அவருடைய ஆவியும் உண்டு. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்குள் மறைக் கப்பட்டிருக்கிறோம். வேதாகமம் எவ்விதம் கவரினுள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிதோ, மறைக்கப்பட்ட வேதம் நம்முடைய பைகளில் பத்திரயாக வைக்கப்பட்டிருக்கிறதோ, அது போலவே நாமும் கிறிஸ்துவுக்குள் மறைக்கப்பட்டிருக்கிறோம். வேதமும் இதே கருத்தை வலியுறுத்துகிறது. ''ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்'' என்று யோவான் 15 : 5ல் பார்க்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்போமானால் கிறிஸ்துவுக்குள் நெருங்கிய ஆவிக்குரிய ஒருமனத்தை அவைகள் உருவாக்குகிறது. இயேசுவின் ஜெபமும் இதுவாகவே இருந்தது. ''நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும் படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன் என்று இயேசு கூறினார் (யோ 17 : 24) தேவனோடு இயேசுவுக்கு இருந்த நல்ல அவிக்குரிய ஐக்கியத்தை இவை தெளிவுபடுத்துகிறது. ஆகவே அவர் எங்கேயோ அங்கே நாமும் இருப்போம். தேவனுடைய ராஜ்யத்திலேயும் இந்த உலகத் திலும் தமக்கு தேவனால் கொடுக்கபபட்ட அந்தஸ்து என்ன என்பதை அறிய விரும்புவோமானால் முதலாவது கிருஸ்து இருக்கிற இடம் எப்படிப்பட்டதென்றும். அவர் எந்த விதமான அந்தஸ்தை உடைய

வராயிருக்கிறார். என்பதை கண்டு கொள்வது அவசியம். ஏனெனில் பிதா எங்கேயோ அங்கே நாமும் இருக்கிறோம்.

கிறிஸ்து இருக்கிற இடத்திற்கே நான் உங்களை வழிநடத்து கிறேன் என்பதை நீங்கள் ஒருவேளை புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கிறிஸ்து பிதாவின் வலது பரிசத்திலே வீற்றிருக் கிறார். எல்லா அதிகாரத்திற்கும் ஆளுகைக்கும் மேலான சகலமும் அவருடைய பாதத்தின் கீழ் இருக்கிறது. கிறிஸ்துவின் வலது பரிசத்தில் வீற்றிருக்கிற நமக்கும் இதே அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக் கிறது எனபதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் கிறிஸ்து எங்கே இருக்கிறாரோ அங்கே நாமும் இருக்கிறோம். ஆகவே எபே 1:20:22ஐ நீங்களும் என்னோடு சேர்ந்து வாசியுங்கள் ''எல்லா துரைத்னதுக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாம் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக அவரை தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி'' என்று நாம் வாசிக்கிறோம் நீங்கள் வாசித்தது சரிதான். ஆம் நம் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய பாதங்களுக்கு கீழ்படுத்தினார் அப்படியெனில் அவர் எங்கேயோ அங்கே நாமும் இருக்கிறோம். இவைகளையெல்லாம் நான் உங்களுக்கு விளக்கி சொன்ன பின்பு நீங்கள் யாரென்று இப்பொழுது அறிந்து கொண்டீர்களா? நாம் எல்லா நாமத்துக்கு மேலாகவும் எல்லா பிசாசின் வல்லமைக்கு மேலாகவும், பிசாசிற்கும் மேலாகவும் உயர்ந்தவர்கள். எல்லாம் நம் பாதத்தின் கீழ்ப்படுத்தப் பட்டிருக்கிறது இன்னும் உங்களுக்கு விளக்கமாய் சொல்ல வேண்டு மானால் ஆகாய விமானத்திலே பறந்து கொண்டிருக்கிறதான மனிதனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். ஆகாய விமான மானது பூமியை விட்டு கடந்து சென்று மழைக்கும் மேகத்திற்கும் இடிமுழக்கத்திற்கும் மேலே பறந்து செல்கிறது அப்பொழுது ஆகாய விமானத்திலிருக்கிறதான மனிதனும் மழைக்கும் மேகத்திற்கும், இடிமுழக்கத்திற்கும் மேலே காணப்படுகிறான். அவன் ஆகாய விமானத்தில் இருப்பதினால் சகலமும் அவனுக்கு கீழ்ப்படுத்தப் படுகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாமும் நம்மை யாரென்றும் எங்கே இருக்கிறோமென்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த உணர்வு நம்மில் உருவாவதற்கு எதிரிடையாக நாம் பாவிகள் என்று நினைக்கும்படியாக நம்மை சாத்தான் வேடிக்கை பொருளாக்கி விட்டான். சாத்தான் நம்மைக் காட்டிலும் வல்லவன் என்று நாம் நினைக்கும் வரைக்கும் பாவிககளை இரட்சிப்பிற்குள் வழிநடத்த நம்மால் இயலாது. விசுவாசத்தினால் வியாதியஸ்தரை குணமாக்கவும் பிசாசுகளை துரத்தவும் நம்மால் கூடாது. நாம் கிறிஸ்துவோடு

ஒன்றித்து இல்லாமல் தனித்து காணப்படுவோமானால் நாம் பலவீனர்கள், பாவிகள். ஆனால் நாம் விசுவாசத்தினாலே மரணத்திலிருந்து கிறிஸ்துவோடுகூட உயிர்த்தெழுந்து கிறிஸ்துவின் வலது பரிசத்தில் உட்காரும்படியான இடத்தை பெற்றுக் கொண்டோம் (எபே 2:6) நாமோ எல்லாத் துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான உயர்ந்த நாமம் உடையவராயிருக்கிறோம் எல்லாம் நம்முடைய பாதத்தின் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது தேவ சமூகத்திலிருந்து எவ்வளவு பெரிய பதவியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்வது இதுதான் முதல் தடவையாக இருக்கலாம். அநேக வருடங்களாக சாத்தான் இந்த உண்மையை உங்களுக்கு மறைத்து வைத்திருந்திருக்கலாம். நீங்கள் கிறிஸ்துவுக்குள் பொதியப்பட்டிருப்பதை அறிந்து கொண்டதினால் அவன் தோற்றுப்போவான் என்று அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

ஆதி சபையின் கிறிஸ்தவர்கள் தாங்கள் யார் என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். தேவனுடைய வல்லமையையும் அதிகாரத்தையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகையினால் அவர்கள் தேவனுடைய வேலையை செய்த போது பாதாளத்தின் வல்லமையினால் அவைகளை மேற் கொள்ள முடியவில்லை. அநேக ஜனங்கள் மனந்திருப்பினார்கள். வியாதியஸ்தர் குணமடைந்தனர். செத்தவர்கள் உயிரோடே எழும்பினார்கள். பிசாசுகள் துரத்தப்பட்டன. சிறைச்சாலையின் கதவுகள் உடைக்கப்பட்டன. வல்லமையான கிறிஸ்தவ சாம்ராஜ்யம் கிறிஸ்தவ நாடானது. இதன் நடுவில் அவர்கள் உபத்திரவத்தின் வழியாக கடந்து சென்றார்கள். ஆம் இது முற்றிலும் உண்மை. சாத்தான் சபைகளை துன்புறுத்த ஆரம்பித்தான். ஆனால் இத்துன்பமோ ஆதி சபையின் வளர்ச்சிக்கு ஆதரவாய் வெற்றியாயிருந்தது. எப்படியெனில் தெர்துலியன்ஸ் என்ற மனிதன் இரண்டாம் நூற்றாண்டிலே தோன்றினான். இவன் எல்லாருக்கும் ஒரு பிரபலமான மனிதனாக காணப்பட்டான், இரத்த சாட்சிகளின் இரத்தம் சபைக்கு வித்து'' என்று அவன் கூறினான். எத்தனை கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்களோ, மரித்தார்களோ அத்தனைக்கும் அதிகமாக அநேக ஜனங்கள் மனம் திரும்பினார்கள். இவ்விதமாக, இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் பாதளத்தின் வாசல் அதை மேற்கொள்வதில்லை என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறிற்று (மத் 16:18)

'நீங்கள் யார்' என்று முன்னே நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? என்ற கேள்விக்கான பதிலை பிரதிபலிப்பதே இந்த புத்தகத்தின் நோக்கம். தேவனுடைய பிள்ளையாயிருக்கிற நீங்கள் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறீர்கள். நீங்கள், எல்லா அதிகாரத்திற்கும்

வல்லமைக்கும் ஆளுகைக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான உயர்ந்த நாமம் உடையவர்களாயும் சகலமும் உங்களுடைய பாதத்தின் கீழ் கிறிஸ்துவுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி சாத்தியமாகும் என்றும்,இது ஒரு கருகலான காரியம் என்றும் சாத்தான் உங்களிடத்தில் கூறுவான். பிரியமானவர்களே தேவனுடைய வேதம் சொல்லுகிறதை விசுவாசிப்பது மாத்திரமல்ல அவைகளை அப்படியே அறிக்கையும் அறிக்கையிட்டதின் படியே கிரியை செய்ய வேண்டும். நாம் விசுவாசித் ததின்படி அறிக்கையிட தவறுவோமானால் நாம் அநேக பிரச்சனை களை சந்திக்க நேரிடும். ''ஒ எனக்கு வந்த கஷ்டங்களுக்கு அளவில்லை. மலையைப் போல் பிரச்சினைகள் கூடிக் கொண்டே செல்லுகிறது. என்னால் இதிலிருந்து விடுவிக்கப்பட முடியவில்லை. இவைகளை நான் சுமந்தே ஆக வேண்டும்''என்ற கூறுகிறதான அநேக கிறிஸ்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். '' உங்கள் விசுவாசத்தின் படியே உங்களுக்கு ஆகக் கடவது'' (மத் 9 : 29) என்ற வேதவசனத்தின் படி தேவனுடைய வாக்குத்தத்திற்கு மாறான காரியங்களில் நாம் விசுவாசம் வதிக்கப்படுமானால், விசுவாசத்திற்கு எதிர்மாறான காரியங் களை அறிக்கையிடுவோமானால், நாம் எதிர்மாறான காரியங்களையே பெற்றுக் கொள்வோம்.

நாம் நம்மை ஒரு போதும் பெலவீனர்கள், பாவிகள் என்று அறிக்கையிடுதல் கூடாது. அவ்வாறு செய்வோமாகில் நாம் எதிர் மாறான காரியங்களை விசுவாசிக்கும்படி செய்து தேவனுடைய வசனத்திற்கு விரோதமாய் பேசுறவர்களாய் இருப்போம். நமக்குள் எழுதுகிறதான எண்ணங்களையும், உணர்வுகளையும் நம்மைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் எண்ணங்களையும் குறித்து அறிக்கையிடுதல் வேண்டாம். வேத வசனத்தை முற்றிலும் விசுவாசித்து அவற்றை அறிக்கையிட வேண்டும். வானமும் பூமியும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று. இயேசு சொல்லுகிறார் (மத் 24 : 3ல்) நம்முடைய எண்ணங்கள், உணர்வுகள், நம்மை சுற்றிலுமுள்ள ஜனங்களின் பேச்சும் கடந்து போகும். ஆனால் வேத வசனமோ ஒருக்காலும் கடந்து போவதில்லை ஆகவே தேவ பிள்ளைகளாகிய நாம் பலவீனர்கள் பாவிகள் என்று மறுபடியும் தேவனிடத்தில் அறிக்கையிடுதல் கூடாது. நாம் பாவிகள் பலவீனர்களாயிருந்து கிறிஸ்துவுடனே கூட உயிர்த்தெழுந்து தேவ னுடைய வலது பரிசத்திலே உட்கார்ந்திருக்கிறோம். சகலமும் நம் முடைய பாதத்தின் கீழ் இருக்கிறது என்ற ஆழமான விசுவாசம் நம் உள்ளத்திலே பதிக்கப்பட்டிருப்பது நல்லது.

ஆகவே உங்களுடைய ஆழமான விசுவாசத்தை சாத்தான் முன்னிலையில் அறிக்கையிடுங்கள். சாத்தானே, நீ என்னுடைய பாதத்தின் கீழிருப்பதினால் என்மேல் உனக்கு அதிகாரம் இல்லை.

ஆகவே நீ என்னை விட்டு நீங்கிப் போகும்படியாக நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். கிறிஸ்துவுக்குள் நான் யார் என்று உனக்குத் தெரியுமா என்று அவனிடத்தில் கேட்போம். சாத்தானை கட்டும்படியான தேவ வல்லமை உங்களிடத்தில் உண்டு என்பதை விசுவாசியுங்கள் (எண் 14 : 11, 12) இஸ்ரவேலர் தாங்கள் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்க இயலாது என்று புலம்பி எதிர்மறையாக அறிக்கையிட்டார்கள். அதனால் தேவன் அவர்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டார். அதன் விளைவோ மிகப் பரிதாபம். முணுமுணுத்தவர்கள் வனாந்தரத்திலே மடிந்தார்கள். அவர்களுடைய பிள்ளைகளும் யோசுவாவும் காலேபுமே வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே கால் வைத்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே இவர்கள் மாத்திரம் நுழைய காரணம் என்னவெனில் தாங்கள் தேவனை முற்றிலும் விசுவாசித்து அதன் படியே அறிக்கையிட்டார்கள்.

எண் 13 : 30, 14-6-9 வசனங்களை கவனமாக வாசியுங்கள். பிரியமானவர்களே உங்களுடைய வியாதி, பிரச்சினை எதுவாயிருந் தாலும் தேவ சமூகத்திற்கு கொண்டு வாருங்கள். கொடுத்த ஜெயத் திற்காகவும் இன்னும் கொடுக்கப் போகிற ஜெயத்திற்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். நீங்கள் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறீர்கள் என்பதை மறந்து விட வேண்டாம். அவர் உங்கள் பிரச்சினைகளையும் வியாதிகளையும் தீர்ப்பார். சாத்தான் உங்கள் பாதத்தின் கீழிருப்பதால் யோசுவா, காலேப்பைப் போல நேரிடை யாக அறிக்கை செய்யுங்கள். தோல்வியைமறுத்துவிடுங்கள் வேதத் திலே சொல்லப்பட்டதுபோல ஜெயத்தை அறிக்கையிடுங்கள்.

தேவனுடைய கரத்தினால் நான் அநேக முறை சோதிக்கப் பட்டேன். ஆனால் இவை எல்லாவற்றிலும் தேவன் என்னை ஒரு போதும் தனித்து விட்டதில்லை என்பதை தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாகும்படியாகச் சொல்லுகிறேன். என்னுடைய முழங் காலில் நின்று நான் ஜேபிக்கிற வேளைகளிலெல்லாம் அவர்மேல் உள்ள என் நம்பிக்கை தைரியமாய் அறிக்கையிட்டு அவர் தந்ததான ஜெயத்திற்காக ஸ்தோத்திரம் செய்யும்போது அவர் என் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார், அவ்வேளைகளிலெல்லாம் தேவ வல்லமையை நான் அநேக முறை அனுபவித்திருக்கிறேன். சாத்தானே என்மேல் உனக்கு அதிகாரம் இல்லை என்று நான் ஜெபிக்கும் போதெல்லாம் சொல்லுவேன் ஏனெனில் சாத்தான் என்னுடைய பாதத்தின் கீழ் இருக்கிறான். (I யோ 4:41) நண்பர்களே தேவ வசனத்தை அறிக்கையிடுதல் என்பது சாத்தானோடு போராடும் மிகப் பெரிய ஆயுதமாகும். இதுதான் ஆவியின் பட்டயம். தேவனுடைய ஆவிக்கு விரோதமாக யார் நிலை நின்று போராட முடியும்.

விசுவாசத்திற்கு எதிர்மறையான காரியங்களை குறித்ததான எண்ணமுடையவர்களின் நடுவிலே நாம் வாசம் பண்ணுகிறோம் இந்த ஜனங்களின் எண்ணங்கள் நம்மை வீழ்த்தாதபடி நாம் மிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இவர்களைப் போல் நாமும் தேவனுடைய வார்த்தைக்கு எதிர்மாறாக எதையும் ஜனங்களோடு பேசுவதில்லை என்ற தீர்மானம் எடுத்துக் கொள்வது நல்லது. அந்த தீர்மானம் எடுத்துக் கொண்ட உங்களிடத்தில் மாறுதல் காணப்படும். தேவனுடைய வார்த்தைக்கு எதிர்மாறாக பேசுவது தேவனை ஒருபோதும் பிரியப்படுத்துவதில்லை. என்பதைக் குறித்து சுற்றிலும் இருக்கிற ஜனங்கள் அறிந்து கொள்ளும்படியாக அவர்களுக்குப் போதியுங்கள். 'நாம் யார்' என்பதை அவர்களும் அறிந்து கொள்ளட்டும் நாம் பாவத்திலே மரித்து கிறிஸ்துவுடனே கூட உயிர்த்தெழுந்து அவருடைய வலது பரிசத்திலே வீற்றிருக்கிறோம். சகலமும் நம்முடைய பாதத்தின் கீழிருக்கிறது. மற்றவர்களைப் பற்றி குறை கூறுகிறவர்களை நான் அன்பினால் கண்டித்திருக்கிறேன். நடந்த உண்மைகளை அவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். பிரச்சனைகளோடு கஷ்டங்களோடும் கண்ணீர் வடிக்கிற ஆத்துமாக்களுக்காக நாம் பரிதாபப்பட வேண்டும். அவர்களோடுகூட அவர்கள் பாரத்தை சுமக்க வேண்டும். (ரோமர் 12:15) குறை கூறுகிறதைப் பார்க்கிலும் அவர்களுக்காக பாரப்படுவது வித்தியாசமானது. குறைகூறுவதும் எதிரிடையாப் பேசுவதும் தேவனுக்கு விருப்பமானது அல்ல. உங்கள் விசுவாசத்தை தேவனில் பதிக்க வேண்டும் ஏனெனில் நான் ''உன்னை விட்டு விலகுவதில்லை உன்னை கைவிடுவதுமில்லை'' (எபி 13:5,6) மேலும், கர்த்தர் எனக்கு சகாயர் நான் பயப்படேன்'' என்று நாமும் நம்பிக்கையோடு சொல்லலாம். இதுதான் விசுவாசத்தினால் நாம் பண்ணுகிறதான அறிக்கையாகும். ''விசுவாசமில்லாமல் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவன் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'' எபி 11:6. நீங்கள் யாரென்று அறிந்து அவைகளை அறிக்கையிடுங்கள். அப்படி செய்வோமானால் சாத்தானும், உங்களை சூழ்ந்துள்ள ஜனங்களும் தேவனுடைய வசனத்தில் மாறாத விசுவாசமுடையவர்கள் என்று அறிந்து கொள்வார்கள் உன்னுடைய விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்று இயேசு கூறினது உங்களுக்கு இப்பொழுது ஞாபகம் இருக்கிறதா. மரணத்திலிருந்து கிறிஸ்துவோடுகூட உயிர்த்தெழுந்து தேவனுடைய வலது பரிசத்தில் உட்கார்ந்து எல்லா அதிகாரத்திற்கும் ஆளுகைக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான உயர்ந்த நாமம் உடையவராயிருக்கிறபடியினால் சகலரும் அவருடைய பாதத்தின் கீழ் இருக்கிறது. நான் சொன்ன ஆழமான சத்தியத்தியத்தை நீங்கள் வெகு சீக்கிரத்தில் உங்கள் வாழ்வின் அனுபவத்திலே கண்டு

குகிப்பீர்கள். இவைகளை உங்கள் வாழ்க்கையின் நடைமுறையிலே அனுபவிக்கும்போது பாவிகள் மனந்திரும்புவார்கள்; வியாதியஸ்தர்கள் சுகமாவார்கள்; பிசாசுகள் துரத்தப்படும்; பிரச்சினைகள் தீர்க்கப்படும். இவைகள் யாவும் தேவன் நமக்கு தந்தருளின வாக்குத்தத்தமாகிய ''உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது'' என்ற வேதவாக்கினாலே ஆகும். அருமையான நண்பர்களே கடைசியாக நான் உங்களிடம் வற்புறுத்துவது என்னவெனில் 'நீங்கள் யார்' என்பதை ஒரு போதும் மறந்துவிட வேண்டும். நீங்கள் இயேசுவின் வலது பரிசத்தில் வீற்றிருக்கிற மேலான இடத்தை தெரிந்து கொண்டவர்கள்.

இவைகளை வாசித்து கொண்டிருக்கிற உங்கள் இருதயத்திலே சிறிய சந்தேகம் ஒன்று எழும்பலாம். நான் எழுதினவைகள் யாவும் உண்மையானவைகள் என்று நீங்கள் எண்ணலாம். காரணம் நான் கூறின யாவும் வேதத்திலே சொல்லப்பட்டவைகளே. அவ்வாறு இருப்பினும் பூலோகத்திலே வசிக்கிற நாம் பரலோகத்திலே வீற்றிருக்கிறவரான தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறோமென்றால் தேவனுடைய வலது கை எங்கே இருக்கிறது என்பது தான் நம் உள்ளத்தில் எழும்புகிறதான கேள்வி. அந்த கை எங்கே இருக்கிறது என்பதைக் குறித்ததான தெளிவான அறிவு நமக்கு இருக்குமானால் நாம் தேவனுடைய வலது பரிசத்தில் உட்காருவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதைக் குறித்து நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். கேள்விக்கான பதிலை உதாரணத்தோடு மிகத் தெளிவாக விளக்க விரும்புகிறேன். உங்களுடைய நண்பர் ஒருவர் ஆகாயவிமானத்திலே ஹாலந்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பதாக சென்றார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய நண்பர் எங்கே என்று யாராவது ஒருவர் உங்களிடம் கேட்பார்களேயானால் அவர் ஆகாயவிமானத்தில் பறந்து கொண்டிருக்கிறார் ஆகாய விமானம் எங்கேயோ அங்கே அவரும் இருக்கிறார் ஆகாய விமானம் எங்கே என்று ஒரு நபர் உங்களிடம் கேள்வி கேட்பார்களாயாகில் எங்கே என் நண்பர் இருக்கிறாரோ அங்கே ஆகாய விமானம் இருக்கிறது என்பதே உங்கள் பதிலாயிருக்கும். காரணம் உங்களுடைய நண்பர் அந்த ஆகாய விமானத்தில் இருக்கிறார் நாமும் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறோம் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியானால் தேவனுடைய வலது கரம் எங்கேயிருக்கிறதென்ற கேள்வியின் பதில் என்னவென்றால் நீங்கள் எங்கேயிருக்கிறீர்களோ அங்கே தேவனுடைய வலது கரம் இருக்கிறது. நீங்கள் தேவனுடைய வலது பரிசத்தில் இருக்கிறபடியினால் தேவனுடைய வலது கரம் பரலோகத்தில் மாத்திரமல்ல நம் அருகிலும் இருக்கிறது என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் (யோ 14 : 23) ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான் அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள்

அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்'' இந்த வேதவசனத்தின்படி தேவன் எங்கே வாசம் பண்ணுகிறார் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள், தேவன் பரலோகத்தில் மாத்திரமல்ல நமக்குள்ளும் வாசம் பண்ணுகிறார். தேவனுடைய வலது கரம் நாம் நினைப்பதற்கும் மேலாக நம் அருகிலே இருக்கிறது. அப்படியானால் நாம் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருப்பது எவ்வாறு சாத்திய மாகும் என்றும் சாத்தான் நமக்கு எந்த விதங்களில் கீழ்ப்படிவான் என்பதையும் நீங்கள் நன்றாய் புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். பிரியமானவர்களே. நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். தேவன் நம்மில் வாசம் செய்கிறார். இவைகளைப் பற்றிய தெளிவான அறிவு நம்மைக் காட்டிலும் சாத்தானுக்கு அதிகம். இவைகளை சாத்தானுக்கு முன்பாக தைரியமாய் அறிக்கையிட்டபடியினால் உங்களுடைய கடைசி சந்தேகம் கூட பறந்து போய் விட்டது என்று நான் நினைக்கிறேன். இவைகளை எழுதிக் கொண்டிருக்கிற நான் தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறபடியினால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

அருமையான சகோதர சகோதரிகளே நீங்கள் இப்பொழுது வாசித்து கொண்டிருக்கிறதான புத்தகத்தின் கடைசி பகுதிக்கு வந்திருக் கிறீர்கள். இவைகளை நன்கு வாசித்து புரிந்து கொள்ளாவிடில் மேலே கூறப்பட்ட அத்தனையையும் வாசித்து புரிந்தும் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் பூரணராய் இருக்கிறீர்கள்

தேவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பிலே ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. அது யாதெனில் ஆவிக்குரிய காரியங்களில் நாம் குற்றமுள்ளவர்கள் என்ற உணர்வு நம்மில் உருவாவதேயாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பார்வையில் நல்லவர்கள் அல்ல என்ற எண்ணம் நமக்குள்ளே உருவாகிறது. அவ்வாறு எண்ணம் கொண்டவர்களைக் குறித்து தேவன் சந்தோஷப்படுவதில்லை. இப்படிப்பட்ட எண்ணம் உடையவர்கள் மனசாட்சியின்படியோ அல்லது மனசாட்சியின்றியோ, பாவத்தோடும் குறைகளோடும் கூட காணப்படுகிறார்கள். நாம் குற்றமுள்ளவர்கள் என்ற உணர்வின் விளைவோ மிக மோசமான ஒன்றாகும். குற்ற உணர்வுள்ளவர்கள் ஒருபோதும் தேவனோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்க முடியாது (ஏசா. 59 : 2). இவைகளைக் குறித்து தீர்க்கதரிசியாகிய ஏசாயா சொல்லுகிறதை கவனமாய் வாசியுங்கள், ‘‘உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது’’. நாம் குற்றவுணர்வுள்ளவர்களாய் இருப்போமானால் தேவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போகும். குற்றவுணர்வு என்பது சாத்தானின் கையிலே உள்ள ஒரு வல்லமையான ஆயுதமாகும். இந்த ஆயுதத்தைக் கொண்டு கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்காக கனி கொடுப்பதை தடுத்து நிறுத்துகிறான். இந்த குற்றவுணர்வு தேவனிடத்திலிருந்து அல்லது சாத்தானிடத்திலிருந்து அல்லது மாம்சத்திலிருந்து எழுந்ததா? என்பதைக் குறித்து அறிந்து கொள்ளுவது மிக அவசியம். இவைகளைக் குறித்து வேதம் சொல்லுகிறதை கவனமாய் ஆராய்ந்து பாருங்கள்.

(யோவான் 16 : 8, 9) (ப. ஆ.) அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் என்று வேதம் சொல்லுகிறது. மேலும் பரிசுத்த

ஆவியானவர் என்னுடைய பாவத்தை கண்டித்து உணர்த்துகிறபடி யினால் என்னுடைய குற்றவுணர்வு நீங்கிப் போயிற்று என்று அநேக ஜனங்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இவைகளை கேட்பதற்கு மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது. இது முற்றிலும் உண்மையல்ல. அவிசுவாசியொருவன் பரிசுத்த ஆவியி னால் தொடப்படும் போது பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த் தப்படுகிறான். அவ்வாறு அவன் தொடப்படும்போது இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறான். அவர் மூலமாக அவன் பாவ சுமையிலிருந்து விடுவிக்கப்படுகிறான்.

இவனை நாம் அவிசுவாசி என்று ஒருபோதும் கணிப்பதில்லை. ஏனென்றால் இயேசுவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் அவனை சுத்திகரித்தது என்று அவன் விசுவாசித்தான். (I யோ. 1:7) இனி அவன் உலகத்தானல்ல. (யோ. 17:14-16) ஆகையினால் இனி பரிசுத்த ஆவியானவர் அவனைக் கண்டித்து உணர்த்த வேண்டிய தில்லை. காரணம், அவன் பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்பட்டா யிற்று. பாவங்கள் மன்னிக்கப்பட்டதான விசுவாசிகள், அல்லது தேவனை நேசிக்கிறவர்களின் நடுவில் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்ன என்பதைக் குறித்து வேதத்திலே வாசிக்கிறோம் அவர் அவர்களுக்கு சமாதானத்தை அருளுகிறார் (யோ. 14:15, 16) என்றும், (யோ. 14:27) ''சமாதானத்தை உங்களுக்கு வைத்து போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக் கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக் கிறதில்லை'' என்றும் வேதம் நமக்கு திட்டமாய் கூறுகிறது இயேசு பரமேறி சென்ற பின்பும் இந்த சமாதானம் உலகத்தில் உண்டு. அந்த சமாதானத்தை நிலைநாட்ட வல்லவர் நாம் பெற்ற அந்த பரிசுத்த ஆவியானவரே. அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் (யோவான் 16:13). இயேசுவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் நம்மை சுத்திகரிக்கும் என்பதே சத்தியம். நாம் தேவனுடைய வசனத் தினாலே சுத்திகரிக்கப்படுகிறோம் (யோ. 15:3). தேவன் நம் முடைய எல்லா பாவங்களையும் மன்னித்தார் (சங். 103:3; யோவா. 1:9; ரோமர் 8:16, 17) அவர் நம்முடைய பாவங்களை மன்னித்த படியினால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று பரிசுத்த ஆவியா னவர் தாமே சாட்சி கொடுக்கிறார். பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு நம்முடைய ஜீவியம் முற்றிலும் மாறுபட்டதாய் காணப்படுகிறது.

கல்வாரி சிலுவையிலே கிறிஸ்து நமக்காக ஒரு பெரிய வேலையை செய்து முடித்தார். ''அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குள் உண்டாயிருக்கிறது'' (கொலொ. 1:13, 14). ஆகவே நாம் அறிந்துகொள்வது யாதெனில் மெய் கிறிஸ்தவர்கள் குற்றவுணர்வு உடையவர்களாக இருக்க வேண்டிய

அவசியமில்லை. நம்முடைய பாவங்கள் யாவும் தேவனுடைய இரத்தத்தினால் கழுவப்பட்டது. ''புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறபடியினால்'' (எபி. 10 : 19, 20) என்று அப். பவுல் நமக்குக் கூறுகிறார். காரணம் நாம் துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயம் உள்ளவர்கள். இந்த இருதயம் குற்றவுணர்விலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். அன்பான சகோதர சகோதரிகளே இயேசுவினுடைய இரத்தம் நம்முடைய பாவங்களில் சிலவற்றிலிருந்து மாத்திரம் நம்மை விடுவிக்கவில்லை, நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரித்தது (சங். 103 : 3; I யோவா. 1 : 7, 9).

ஆம், நாம் நம்மை பெரிய பாவி என்று அடிக்கடி உணர்கிறோம். அது உண்மைதான். ஆனால் நம்முடைய உணர்வினால் அல்ல விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று வேதம் சொல்லுகிறது. (ரோமர் 1 : 17) உங்களுடைய உணர்வு, நினைவு, நீங்கள் கேட்கிறதான காரியங்களை விசுவாசித்து அவைகளை அறிக்கையிடாமல் தேவ வசனத்தை விசுவாசிப்போம் நீங்கள் பாவிகள் என்ற உணர்வுள்ளவர்களாக இருப்பது உண்மைதான். ஆனால் உங்களுடைய பாவங்களை தேவன் மன்னித்து உங்களை சுத்திகரித்தார் என்று வேதம் இயம்புகிறது. நான் பாவி என்று நீங்கள் உங்களைப் பற்றி நினைப்பது சாத்தியம்தான். ஆனால் அந்த உணர்வே நீங்கள் ஒரு பெரிய பாவத்தை செய்வதற்கு ஒப்பனையாகிறது நீங்கள் நினைக்கிற காரியம் பாவ கிரியைக்கு சமமாகிறது. அப்படி ஒரு உணர்வு எழும்புகிறதென்றால் அவைகளை எவ்வாறு முறியடிக்க வேண்டும் என்று நீங்கள் கேள்வி கேட்கலாம். உங்களுக்குரிய பதில் தேவ வசனத்தில் உண்டு. ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (I யோ 1 : 9) என்று வேதம் சொல்லுகிறது. எல்லாரும் பாவிகள் தான் என்று தேவன் சொன்ன உண்மையை அறியீர்களா? இவைகளை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா? இங்கே 'அறிக்கையிடுதல்' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 'அறிக்கையிடுதல்' என்ற வார்த்தை கிரேக்கப் பதத்தத்தில் 'சொன்னவற்றை திருப்பிச் சொல்லுதல்' என்று அர்த்தமாம். பாவத்தை அறிக்கையிடுகிறவன் தேவன் சொன்னவைகளைத் திருப்பிச் சொல்லுகிறான். நீ செய்தவைகள் யாவும் பாவமே என்று தேவன் சொல்லுகிறார். ஆம் ஆண்டவரே நீர் சொல்வது சரியே என்று நீங்கள் சொல்லலாம். நாம் பாவம் செய்திருப்போமானால் நாம் பாவிகள் என்று ஒத்துக் கொள்கிறோம். நாம் தவறு செய்தால் நாம் நம்முடைய தவறுகளை ஒத்துக் கொள்ள வேண்டும். உண்மையான காரியங்களை தேவனிடத்தில்

அறிக்கையிடும்போது தேவனுடைய இரத்தம் நம்முடைய பாவங்களை சுத்திகரிக்கும். இயேசு கிறிஸ்து நம்மை நேசித்து நாம் செய்யும் அநீதிக்கு ஏற்ற பலனளிக்காமல் நம்முடைய பாவங்களை அறிக்கையிடுகிற வேளைகளிலெல்லாம் அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் என்றால் அந்த தேவன் எத்தனை மகிமையான தேவன். அவரே துதிக்குப் பாத்திரர்.

நம்முடைய தேவன் நம்மை குற்றம் சாட்டுகிற தேவன் அல்ல. அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறவர். ஆகையினாலே அவர் மனபாரத்தினால் நிறைந்தவராய் தன்னுடைய ஒரே பேரான குமாரனை நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையும்படியாக ஒப்புக் கொடுத்தார். அவர் நம்மை நேசிக்கிறார் என்பதை நம்முடைய பாவங்களை மன்னித்ததின் மூலம் நிரூபிக்கிறார். தேவன் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி விரும்புகிறார். தேவன் அன்புள்ளவர் என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி தவறான எண்ணங்களை நம்மில் உருவாக்குவதில் சாத்தான் மிகுந்த சுறுசுறுப்புடையவன். தேவன் பட்சிக்கிற அக்கினி என்றும் அவர் எத்தனை பொல்லாதவர் என்றும் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டும்படியாக சாத்தான் விரும்புகிறான் தேவனுடைய நேசத்தையும், மன்னிக்கும் தன்மையையும் ஜனங்களுக்கு வெளிப்படுத்தாமல் அவைகளை மறைக்கும்படி சாத்தான் விரும்புகிறான். இவ்விதமாக இவன் கிரியை செய்கிறதினால் தேவனைக் குறித்ததான தவறான எண்ணம் நம்மில் உருவாகிறது. நண்பர்களே! உங்களுடைய நினைவுகள், உணர்வுகள், அனுபவங்கள் மூலம் சாத்தான் தன்னுடைய தவறான எண்ணங்களை வெளிப்படுத்தும் போது நீங்கள் அவற்றிற்கு செவி கொடுக்கக்கூடாது. தேவன் அன்புள்ளவர்; நம் அக்கிரமங்களை மன்னிக்கிறவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது (சங். 103 : 3).

இயேசு நம்முடைய பார சுமைகளை நம்மிலிருந்து நீக்கிப் போட்டார் என்றதான எண்ணம் நம்மிடத்தில் உண்டு. நாம் பிலி. 3 : 15-ஐ வாசிப்போம். நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்த சிந்தையாய் இருக்கக் கடவோம் என்று அப். பவுல் கூறுகிறான். அநேக கிறிஸ்தவர்கள் இவைகளை அறியாமலிருக்கிறார்கள். இன்னும் இந்த வசனத்தைக் குறித்து ஆழமாக சிந்திப்போமானல் அவர் நம்மை மன்னித்துக்கொண்டே இருக்கிறார் என்று சொல்வது எத்தனை வித்தியாசமானது நாம் பாவம் செய்யச் செய்ய அவர் மன்னித்துக்கொண்டே இருப்பாரானால் நாம் தேறினவர்களாக காணப்பட முடியாது. அநேக கிறிஸ்தவர்கள் இவ்வாறு இருப்பதினால் அவர்களிடம் பரிபூரணம் காணப்படுவதில்லை. ஒரு இயந்திரம் உருவாக்கப்பட்ட நாள் முதல் கடைசி வரை நல்ல நிலையில் செயல்படும்படி மனிதன் விரும்பி அவைகளை முயற்சி செய்து இயக்குகிறான்.

[illegible]த்தினாலும் நிரப்பப்பட்டதான புதிய ஜீவியத்தை நீங்கள் அடை
[illegible]யாக தேவன் உங்களுக்கு உதவி செய்வார் என்று நான் நம்பு
[illegible]. இப்படிப்பட்டதான ஜீவியத்தினுள்ளே கடந்து செல்லு
கி[illegible] நீங்கள் சபையிலே கனி கொடுத்து இயேசுவைப் பற்றி
அறி[illegible]கப்படாத இடங்களில் தேவனுக்காக ஒரு வைராக்கியமான
சாட்[illegible]ய் தேவன் உங்களை நிலை நிறுத்துவார். இனி காலம்
செல்[illegible]. உலகத்தில் நடக்கிற யாவும் இயேசுவின் வருகை மிக
சமீபம் என்பதை உணர்த்திக் காட்டுகிறது. அந்தகார நாட்கள்
வரும்வரை கிருபையின் நாட்களிலே தேவனுக்காக கிரியை செய்
வோமாக! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆமென்.

பாண்டியன் அச்சகம், சிவகாசி.

இயேசுவின் சவால்!

இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்
பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

GOOD NEWS MISSION
CHRIST IS OUR HOPE

ஒவ்வொரு கிறிஸ்தவ சபைக்கும்
இயேசுவின் கட்டளை

'சாட்சியாயிருங்கள்''

அத்துடன்

''சேவை செய்யுங்கள்''

புத்தகங்கள் கிடைக்குமிடம்:

Rev. M. இராஜேந்திரன்
14, இரயில்வே பீடர் ரோடு,
பாளையங்கோட்டை,
Pin-627 002.

சுகிர்தா பைன் பிரிண்டர்ஸ், சிவகாசி.